@NewsRotary /RotaryNewsIndia


மே 2022

# ரோட்டரி நியூஸ்

INDIA
www.rotarynewsonline.org

Vol.4, Issue 12 | Annual Subscription ₹420

Rotary



# COL மற்றும் வெனிஸ் தருணங்கள்




**இடமிருந்து (அமர்ந்திருப்போர்):** RI *இயக்குனர்* A S *வெங்கடேஷ்,* RI *தலைவர் சேகர் மேத்தா,* RI *இயக்குனர் மகேஷ் கோட்பாகி மற்றும்* TRF *அறங்காவலராக தேர்ந்தெடுக்கப்பட்ட பரத் பாண்டியா.* **நிற்போர்:** PDGs H L *ரவி* (3250), T V R *மூர்த்தி* (3150), *சுபாஷ் சாஹு* (3261), K *ராமலிங்க ரெட்டி* (3160), *சுதிர் மங்களா* (3011), *ரவி* N *தேஷ்பாண்டே* (3170), *பிரேம் குமார் அகர்வால்* (3090), *ஜிதேந்திர டிங்ரா* (3080), T K *ரூபி* (3080) *மற்றும் சஞ்சய் கேம்கா* (3250).



COL *துணைத் தலைவர் ராஜு சுப்ரமணியன் (நடுவில்)* PDGs *ஷரத் ஜெயின்* (3012) *மற்றும் பிரேம் குமார் அகர்வால்.*



*வெனிஸில் நடந்த ப்ரஸிடென்ஷியல் மாநாட்டில்* RI *தலைவர் சேகர் மேத்தா மற்றும்* RI *இயக்குனர் மகேஷ் கோட்பாகி.*



















# உள்ளே


**12 ரூ.1.5 கோடியில் 200 திட்டங்கள் பெங்களூரு சங்கத்தின் சாதனை**
RI மாவட்டம் 3190ன் பல பெரிய திட்டங்களுக்கு முன்னணி சங்கமாக திகழும் RC பெங்களூர் லேக்சைடு.

**24 கிராமப்புற பெண்களுக்கான மாதவிடாய் சுகாதாரத்தில் கவனம் செலுத்தும் PDG**
PDG விஜய் ரதியின் கடின உழைப்பு லத்தூரில் உள்ள பெண்கள் சிறந்த மாதவிடாய் சுகாதாரத்தை பெற உதவியது.

**38 ரோட்ராக்டர்களின் பிணைப்பை வலுப்படுத்தும் ரோட்டாசியா**
நான்கு நாடுகளின் பங்கேற்புடன் தெற்காசியாவின் ரோட்ராக்ட் சங்கங்கள் சென்னையில் ஒரு மெகா சர்வதேச மாநாட்டைக் கொண்டாடின.

**40 கர்நாடக விவசாயிகளுக்கு ஒரு "ஸ்மார்ட்" தண்ணீர் தீர்வு**
RC பெல்காம், மின்சாரம் இல்லாத கிராமத்தில் விவசாயிகளுக்கு உதவும் வகையில் சூரிய சக்தியில் இயங்கும் ஸ்மார்ட் பாசன மாதிரியை நிறுவியுள்ளது.

**48 அரசுப் பள்ளிகளில் கழிப்பறை கட்டும் சென்னை, இங்கிலாந்து ரோட்டரி**
ஒரு உலகளாவிய மானியம் புறநகரில் உள்ள ஒரு அரசுப் பள்ளியில் மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களுக்காக இரண்டு கழிப்பறைகளை வழங்கி உதவியது.

**54 பார்வைக் குறைபாடு கொண்டோருக்கு வழிகாட்டும் சோலாப்பூர் பள்ளி**
RC சோலாப்பூர் நார்த் நடத்தும் பைருரதன் தமானி பார்வையற்றோர் பள்ளி, அதன் மாணவர்களுக்கு இலவசமாக கல்வி மற்றும் தங்குமிடத்தை வழங்குகிறது, மேலும் அவர்களின் கல்லூரி படிப்பிற்கு நிதியுதவியளிக்கிறது.

**60 தலத் மஹ்மூத்: அவருக்கு நிகர் அவரே!**
தலத் மஹ்மூத் பல தசாப்தங்களாக தனது மெல்லிய குரல் மூலம் பல தலைமுறை இசை ஆர்வலர்களை கவர்ந்துள்ளார்.

**68 உங்கள் தட்டில் எவ்வளவு கார்பன் உள்ளது?**
சுற்றுச்சூழலுக்கு உகந்த உணவுத் தேர்வுகள் மற்றும் நீங்கள் உட்கொள்ளும் உணவில் கார்பன் தடயத்தை உணர்வுபூர்வமாக எவ்வாறு குறைப்பது என்பது பற்றி Go Green தொகுப்பில் படிக்கவும்.


**அட்டை படம்:** RC பெங்களூர் லேக்சைடு மாவட்ட திட்டத்தின் கீழ் பெண்கள் பள்ளிக்கு செல்ல சைக்கிள் கொடுத்தனர்.

Scan our QR code & visit our Website


Scan our QR code & read our Magazine

## உக்ரைன் தாக்குதல்களை நன்கு பதிவுசெய்தீர்கள்

உக்ரைனின் வலி... மற்றும் அதைப் பதிவுசெய்வதில் ஊடகத்தின் சார்பு நிலை'' என்ற ஆசிரியர் குறிப்பில் உங்கள் துணிவான மற்றும் துல்லியமான எழுத்து என்னை மிகவும் ஈர்த்தது. என் மகன் உக்ரைனில் வசிக்கிறார். அதனால் மக்களுடைய வலி, துன்பத்தை என்னால் நன்கு உணர இயலுகிறது. இரண்டாம் உலகப் போரின் கதையை, உலக அமைதியில் அதன் தாக்கத்தை, சிரியா, ஏமன், ஆஃப்கானிஸ்தான் போர்களை நீங்கள் நன்கு விவரித்துள்ளீர்கள்.

அபய் கிஷோர் சந்த்வார்
RC தன்பத் மிட்-டவுன் — D 3250

நாடு முழுவதும் ரோட்டரியன்கள் செய்கிற சிறந்த மனிதத்தன்மைச் செயல்களுக்கு இன்னோர் எடுத்துக் காட்டாக ஏப்ரல் இதழ் அமைந்தது. புணே ரோட்டரியன்கள் வீடில்லாத குழந்தைகளுக்கு வீடுகளைப் பரிசளித்தது பற்றிய கட்டுரை நம் அனைவருக்கும் மகிழ்ச்சி, பெருமையைக் கொண்டுவருகிறது. உக்ரைனில் நடைபெறும் அழிவு வலுவான மனங்களைக்கூட அழவைக்கும். போரினால் பாதிக்கப் பட்ட இடங்களிலிருந்து ரோட்டரியன்களுடைய குழந்தைகள் பலரை மீட்க PRID கமல் சங்வி உதவியுள்ளார். ரோட்டரியில் 25 ஆண்டுகளை நிறைவு செய்யும் 500




ரோட்டரியன்களைப் பெருமைப் படுத்துவது ஒரு சிறந்த செயலாகும், நம் அனைவருக்கும் ஊக்கம் தருவதாகும். சென்னை மருத்துவ மனைகளில் 100 டயாலிசிஸ் பிரிவுகளை அமைப்பது உண்மையில் ரோட்டரியின் பிராண்டைத் தூண்டிவிடும்.

டாக்டர் ஜெயசேகரன் V P
RC பையனூர் — D 3204

உக்ரைன் போரினால் பாதிக்கப்பட்ட வர்களுக்கு உதவுவதற்கான வசதிகளை TRF உண்டாக்கியிருப்பது நல்லது. ஆசிரியர் உக்ரைன் குடிமக்களுடைய கொடுமையான நிலையைப்பற்றி விவரித்திருப்பதைப் படித்து மிகவும் வருந்தினோம், அந்த நாட்டில் அமைதி திரும்பப் பிரார்த்திக்கிறோம். உக்ரைனுக்கு ரோட்டரி சங்கங்கள் வழங்கியுள்ள உதவி உண்மையில் பாராட்டவேண்டியது.

ரேனுடாய், அவருடைய மகள், குழந்தைகள் கூடலில் உள்ள தங்களுடைய புதிய வளாகத்தில் இருக்கும் அட்டைப் புகைப்படம் அழகாக அமைந்திருந்தது. புணே ரோட்டரியன்கள் வீடில்லாத குழந்தைகளுக்கு ஒரு வீட்டைப் பரிசளித்திருப்பதை அறிந்து மகிழ்கிறோம். இலையில்லாத மரம் ஒன்றில் ஒரு மயில் அமர்ந்திருக்கும் படம் மிக அழகானது. RI தலைவர் மேத்தா தன்னுடைய செய்தியில் பூமியைப் பாதுகாப்பதன் முக்கியத்து வத்தை வலியுறுத்தியுள்ளார். ஆசிரியர் குறிப்பு போரின் அழிவான ஆபத்துகளை காட்சிப்படுத்தி விளக்குகிறது, உக்ரைன் போரைப்பற்றிப் பதிவு செய்வதில் ஊடகத்தின் சார்பு நிலையை விளக்குகிறது. ரோட்டரி உள்ளிட்ட எந்தவோர் அமைப்பும் முறையாக இயங்குவதற்கு விதிமுறைகளைப் பின்பற்றவேண்டியதன் முக்கியத்து வத்தை விளக்குகிறார் RID மகேஷ் கொட்பாகி. உறுப்பினர்களைத் தக்கவைத்துக்கொள்வதற்கு ரோட்டரியன்களுக்கு நடுவில் இருக்கும் அன்பான உறவு, இந்த நோக்கத்தில் மூத்த உறுப்பினர்களுடைய பங்கு ஆகியவற்றில் RID A S வெங்கடேஷ் கவனம் செலுத்தியுள்ளார்.

மற்ற குறிப்பிட வேண்டிய பலவிதமான தலைப்புகளில் தகவல்கள் நிறைந்த, சமநிலை கொண்ட இன்னொரு மிகச் சிறந்த இதழைப் பதிப்பித்துள்ள ரோட்டரி செய்திகள் குழுவுக்கு என்னுடைய பாராட்டுகள்.

சின்மயா மகாபத்ரா, RC ராஜ்தானி
புபனேஸ்வர் — D 3262

ஏப்ரல் இதழில் நீரைக்காக்கும் பணி யில் ஆனெட்கள் என்ற கட்டுரை குழந்தைகள் படித்துப் பரவசம் கொண்டார்கள். இந்தத் திட்டத்தைப் பதிவு செய்ததற்கு நன்றி.

செனித் மேத்யூஸ், RC மெட்ராஸ்
மிட்-சிட்டி — D 3232

### ரோட்டரி விதிமுறைகளின் முக்கியத்துவம்

ரோட்டரி விதிமுறைகளும் கொள்கை களும் தேர்தல் முரண்களின் போது மட்டும் தான் வெளிச்சத்துக்கு வருகின்றன, மற்ற நேரங்களில் அவற்றை யாரும் கண்டு கொள் வதில்லை என்று RID கோட்பாகி சரியாகச் சுட்டிக் காண்பித்துள்ளார். ரோட்டரியன்களுக்கு ரோட்டரியின் விதி முறைகள், கொள்கைகளைப் பற்றி கற்றுத்தர வேண்டும்; புதிதாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களுடைய பயிற்சி எந்த அளவு செயல்திறன் மிக்கது என்று நாம் இப்போது யோசிக்கிறோம். அனைத்து உறுப்பினர்களும், குறிப்பாகச் சங்கத் தலைவர்கள், ரோட்டரியின் விதிமுறைகளை நன்கு அறிந்திருப்பதை RI உறுதி செய்ய வேண்டும், இது இன்னும் விரைவான வளர்ச்சியை உறுதி செய்யும்.

V V நாராயணன், RC சென்னை
K K நகர் — D 3232

பாதிப்பு ஏதும் இல்லாமல் ஓராண்டைக் கடந்திருப்பது இளம்பிள்ளைவாதத்தை அகற்றும் முயற்சிகளில் பங்குபெறும் அனைத்து ரோட்டரியன்களுக்கும் நல்ல செய்தியாகும். ரத்ன நிதி தொண்டு அறக்கட்டளை, RC தர்மஷாலா-வுடன் இணைந்து RC மும்பை நடத்திய செயற்கைக் கை,

*கட்டுரைகள், இழக்கப்பட்ட ஓர் ஆற்றை ரோட்டரி உயிர்ப்பித்தது, புணே-யில் 500 மூத்த ரோட்டரியன்கள் பெருமைப்படுத்தப்படுதல், சென்னை மருத்துவமனைகளில் 100 டயாலிசிஸ் பிரிவுகள் நிறுவப்படுதல், பட்டத்தால் தாக்கப்பட்ட பறவைகளை பருச் ரோட்டரியன்கள் காப்பாற்றுதல், பெங்களூரு PHC பணியாளர்களுக்கு ரோட்டரி மின்வண்டிகளை வழங்குதல் பற்றியவை. திட்டக் குறிப்புகளும் ஆர்வத்தை ஊட்டின.*

ஃபிலிப் முலப்பொனெ M T
RC திருவனந்தபுரம் — D 3211

*RID மகேஷ் கோட்பாகி, TRF அறங்காவலர் தலைவர் ஜான் ஜெர்ம், அறங்காவலர் குலாம் வாகன்வடி ஆகியோரின் செய்திகள் ஊக்கம் அளித்தன. அழிவைச் சந்திக்கும் உக்ரைனின் படங்கள், அது பற்றிய கட்டுரை எனக்கு மிகவும் வலியைத் தந்தது. உக்ரைனுக்காக ரோட்டரி செய்து வரும் பணி பாராட்டவேண்டியது. உக்ரைனிலிருந்து மாணவர்களை காப்பாற்றுவதில் PRID கமல் சங்வியின் உதவி பாராட்ட வேண்டியது.*

*RCC வித்யாரண்யபுரா-வைப் பற்றிப் படிப்பது மிகச் சிறப்பாக இருந்தது.*

விவேக் கன்டேல்வால்
RC தியோனர் — D 3141

## பாகிஸ்தானில் இளம்பிள்ளைவாதம் இல்லாத 1 ஆண்டுபற்றிய அட்டைப் படம்

*லதா மங்கேஷ்கரைப்பற்றிய வண்ண மயமான கட்டுரையை நாங்கள் நன்கு பாராட்டுகிறோம். சென்னை அல்லது தென் இந்தியாவைச் சேர்ந்த சிறந்த ஆளுமைகள்தான் இதில் கூடுதலாக இடம் பெறுகிறார்கள், வேறு பல நிகழ்ச்சிகள், பார்வைகள் விடுபட்டு விடுகின்றன என்று நான் உணர்கிறேன். அட்டைப் படத்தில் அவருடைய புகைப்படம் மிகப் பொருத்தமாக இருந்திருக்கும். ஏனெனில், அவர் சிறந்த கலைப்பணி ஆற்றியதுடன், பாரத ரத்னா விருதும் பெற்றவர். இது ரோட்டரிக்கு ஒரு பெருமையாக இருந்திருக்கும்.*

*பாகிஸ்தானில் இளம்பிள்ளைவாதத் தடுப்பு மருந்து வழங்கலைப்பற்றிய அட்டைப் படம் எந்த விதத்திலும் லதா தீதி-யைவிடக் கூடுதல் முக்கியத்துவம் கொண்டது இல்லை. ஆனால், அட்டைப் படத்துக்கு பாரத ரத்னா-வைவிட நிஷான் ஈ பாகிஸ்தானைத் தேர்ந்தெடுக்கும் ஆசிரியருடைய தனிப்பட்ட விருப்பத்தை என்னால் புரிந்து கொள்ள இயலுகிறது.*

ஷிரீஷ் மண்ட்சோர்வாலெ
RC புணே கொத்ரூட் — D 3131

ரோட்டரியன் ஒருவர் மதம் சார்ந்த அவதூறு பேசுவது மிகவும் பொருத்தமற்றதாகும். ஏனெனில், ரோட்டரியின் கொள்கை, மதம், இனம் அல்லது சமூகத்தைத் தாண்டி எழுவது. ஆசிரியர் என்ற முறையில் என் ஆசிரியத் தீர்மானம் நிறைவானது என்பது வேறு விஷயம், உலகில் இளம்பிள்ளைவாதத்தை நீக்குவது ரோட்டரிக்கு எந்த அளவு முக்கியம் என்பதை நான் உங்களுடன் விவாதிக்க வேண்டியதில்லை. இன்னொரு விஷயம், திலீப்குமார் நிஷான்-ஈ-இம்தியாஜ் பெற்றார். அதேபோல், இந்தியாவின் முதல் காங்கிரஸ் அல்லாத பிரதமர் மொரார்ஜி தேசாய் 1990ல் பாகிஸ்தானின் மிக உயர்ந்த குடிமக்கள் மதிப்பாகிய நிஷான்-ஈ-பாகிஸ்தான் (அப்போதைய பெயர்) பெற்றார். 1991ல் தான் அவருக்குப் பாரத ரத்னா வழங்கப்பட்டது!

— ஆசிரியர்.

We welcome your feedback.Write to the Editor:
**rotarynews@rosaonline.org; rushbhagat@gmail.com.**
Mail your project details,along with hi-res photos,
to **rotarynewsmagazine@gmail.com.**

Messages on your club/district projects, information and links on zoom meetings/webinar should be sent only by e-mail to the Editor at **rushbhagat@gmail.com** or **rotarynewsmagazine@gmail.com.** WHATSAPP MESSAGES WILL NOT BE ENTERTAINED.

Click on **Rotary News Plus** on our website **www.rotarynewsonline.org** to read about more Rotary projects.

கால் பொருத்தல் முகாம் மிகச் சிறந்த பணியாகும். சென்னையில் ஓர் அரசு மருத்துவமனைக்கு மருத்துவக் கருவிகளைக் கொடையளித்த RC மெட்ராஸுக்குப் பாராட்டுகள்.

RC நாகபூர் மெட்ரோ, மைய நரம்பியல் மருத்துவக் கல்விக் கழகம் 65 வயதுக்கு மேற்பட்ட மூத்த குடிமக்களுக்கு இலவச மருத்துவ அறிவுறுத்தலைத் தொடங்கியிருப்பது நல்லது.

டேனியல் சிட்டிலப்பிள்ளி
RC கலூர் — D 3201

ஏப்ரல் இதழ் எனக்கு மிகவும் ஆர்வ மூட்டியது, வங்காளதேசத்தின் விடுதலை மற்றும் ஆஃப்கன் பெண்களுடைய எழுத்துகளைப் பற்றிய புத்தகப் பத்திகள் எனக்கு மிகவும் பிடித்திருந்தன. இந்திய அரசை ரோட்டரி போன்ற அமைப்புகளிடம் ஒப்படைக்க இயலுமானால், இன்னும் மேம்பட்ட இந்தியா மற்றும் உலகம் நமக்குக் கிடைக்கும்! மிகக் கூடுதலான வரி செலுத்திய போதும் நாம் பதிலுக்கு எதையும் பெறுவதில்லை, மாசும் எரிச்சலும் தான் நமக்குக் கிடைக்கின்றன.

முடித் ஜெயின்
RC மும்பை — D 3141

# ரோட்டரி உலக அமைதிக்காக தீவிர பணியாற்றும்

SERVE TO CHANGE LIVES

ஒவ்வொருவரும் ஒவ்வொருவரை அழைத்துவாருங்கள் திட்டத்துக்கு நீங்கள் வழங்கிய நேர்வித எதிர்வினையால் ரோட்டரியின் உறுப்பினர் எண்ணிக்கை மேல்நோக்கிச் செல்வதைக் கண்டு நான் மிகவும் மகிழ்கிறேன். இந்தச் சுறுசுறுப்பை நாம் விட்டு விடக்கூடாது, தொடர்ந்து புதிய உறுப்பினர்களை அழையுங்கள், நாம் ஈர்க்கும் ஒவ்வோர் உறுப்பினரையும் தக்கவைத்துக்கொள்வதற்கும் கடினமாக உழையுங்கள். அடுத்த மாதம் ஹூஸ்டனில் 2022 ரோட்டரி இன்டர்நேஷனல் மாநாட்டில் உங்களைச் சந்திக்க நான் ஆவலாக உள்ளேன், அது ஒரு மிகச் சிறந்த நிகழ்ச்சியாக இருக்கும் என்று நான் உறுதியளிக்கிறேன்.

அத்துடன், அங்கு என்னுடைய கடைசிதலைமைக் கருத்தரங்கையும் நடத்துவோம். இந்த ஆண்டை நாம் ரோட்டரியின் கவனப் பகுதிகளைச் சுற்றிக் கட்டமைக்கப்பட்ட கருத் தரங்குகளுக்கு அர்ப்பணித்துள்ளோம். இவை மிகச் சிறந்த வெற்றி அடைந்துள்ளன, பங்குபெற்றோர் எண்ணிக்கையிலும் சரி, உருவாக் கப்பட்ட யோசனைகளின் எண்ணிக்கையிலும் சரி.

சென்ற இலையுதிர் காலத்தின் போது, ஃபிலிப்பைன்ஸில் நடை பெற்ற நம்முடைய கருத்தரங்கம் சுற்றுச்சூழலைப் பாதுகாத்தல், உள்ளூர்ப் பொருளாதாரங்களை வளர்த்தலில் கவனம் செலுத்தியது, இணையத்தில் 2,200 பேரை ஈர்த்தது. பிரேசிலில் நம் கூட்டம் நீர், தூய்மை, சுகாதாரத்தில், அது எப்படி நோய்த் தடுப்பு மற்றும் சிகிச்சையுடன் தொடர்புகொள்கிறது என்பதில் கவனம் செலுத்தியது. அடுத்து, மபுடோ, மொஜாம்பிக்கில் சுற்றுச் சூழல், பொருளாதாரம் மற்றும் அமைதியைப்பற்றிய ஒரு நிகழ்ச்சி நடைபெற்றது.

இந்தக் கருத்தரங்குகள், என்னுடைய உலகப் பயணங்களின் வழியாகப் பல தலைவர்கள் என்னைச் சந்தித்துள்ளார்கள், ரோட்டரியுடன் இணைந்து பணிபுரிய ஒப்புக்கொண்டுள்ளார்கள். எடுத்துக் காட்டாக, மொரீசியஸ் பிரதமர், சீஷெல்ஸ் அதிபர், பஹ்ரெய்ன் துணைப் பிரதமர், அல்பேனியா மற்றும் கொசாவொ அதிபர்கள். இதனால், ரோட்டரி ஒரு தாக்கத்தை உண்டாக்குவதும், உலகம் நம் தலைமைக்கு ஆர்வத்துடன் இருப்பதும் தெளிவாகப் புரிகிறது.

மார்ச் மாதத்தில், தஞ்சமடைந் தோர் தொடர்ந்து போலந்துக்குள் நுழைந்துகொண்டிருந்த நேரத்தில், உக்ரைனில் ரோட்டரி கொண்டுவரும் மிகச் சிறந்த மாற்றத்தை என்னால் நேரடியாகக் காண இயன்றது. கொடையாளர்கள் இந்த முயற்சிக்கு பல மில்லியன் டாலர் களைப் பங்களித்துள்ளார்கள்; நம் திட்டங்கள் மிகப் பெரிய மாற்றத்தை உருவாக்குகின்றன; உங்கள் தொடர்ந்த தாராள மனப்பான்மை, ஆதரவுக்கு நாங்கள் மிகவும் நன்றி செலுத்துகிறோம்.

இடம் பெயர்க்கப்பட்ட அனைத்து மக்களையும் நெருங்கிப் பார்ப்பது இதயத்தை நொறுக்குகிறது. இது உக்ரைன் மக்களுடைய பிரச்சனை மட்டுமில்லை. ஏமனில் பேரழிவான உள்நாட்டுப் போர் தொடர்கிறது. ஆஃப்கானிஸ்தானில் மனிதத்தன்மை நெருக்கடி ஆழமாகிறது. ஆப்பிரிக்காமுழுவதும் லிபியா, தெற்கு சூடான், மைய ஆப்பிரிக்கக் குடியரசு, வடக்கு மொசாம்பிக், எத்தியோப்பியா, காமரூன் உள்ளிட்ட நாடுகளை ஆயுதம் ஏந்திய மோதல்கள் பாதிக்கின்றன.

ரோட்டரி எப்போதும் மோதலை அமைதியாகத் தீர்த்தல், தேவை உள்ள மக்களுக்கு உதவி, வசதியை வழங்குதல் ஆகியவற்றின் பக்கத்தில் இருக்கும். இரண்டாம் உலகப் போரின் முடிவில் ரோட்டரி ஐக்கிய நாடுகளின் உருவாக்கத்தை முன்னிறுத்தியது.

வாழ்க்கைகளை மாற்றச் சேவை புரிவதற்கு, அமைதி நோக்கத்துக்குச் சேவை புரிவதைவிடச் சிறந்த வழி ஏதுமில்லை.



Shekhar Mehta

சேகர் மேத்தா
RI தலைவர்



# இதயத்தை உருக்கும் இலங்கையின் அவல நிலை

உக்ரைன் மீதான ரஷியாவின் மிருகத்தனமான தாக்குதல் பத்திரிகைகளில் தலைப்புச் செய்தியாக வெளிவரும் நிலையில், நமக்கு நெருக்கமான சிறிய தீவு நாடான இலங்கையில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி உலகின் கவனத்தை ஈர்க்கத் தவறிவிட்டது. மின்வெட்டு காரணமாக 15 மணி நேரம் இருளில் மூழ்கியது, எரிபொருள்களுக்காக மக்கள் நீண்ட வரிசையில் காத்திருந்தது, அதிகரித்து வரும் வேலையின்மை என 1948ல் சுதந்திரம் பெற்ற பிறகு பெரும் பொருளாதார நெருக்கடியை சந்தித்துள்ளது இலங்கை. அந்த நாட்டின் தற்போதைய நிலை நெஞ்சை உருக்குவதாக உள்ளது. நம்மில் பலர் பலமுறை இலங்கைக்கு பயணம் சென்றிருப்போம்.

பல தசாப்தங்களாக நடந்த இனக்கலவரம், ராணுவத் தினரின் மிருகத்தனமான செயல்களால் கொழும்புவின் சாலைகள் போர்க்களம் போலவே காட்சியளித்தன, சாலைகளில் மணல் மூட்டை தடுப்புகள் அமைக்கப்பட்டு துப்பாக்கிய ஏந்திய ராணுவத்தினரின் கண்காணிப்பு தீவிரப்படுத்தப்பட்டது. நடந்து செல்பவர்கள், காரில் பயணிப்பவர்கள் பலமுறை சோதனைக்கு பின்னரே பயணத்தை தொடர அனுமதிக்கப்பட்டனர். பயங்கர வாதம் நசுக்கப்பட்டு அந்த நாடு மெல்ல மெல்ல இயல்பு நிலைக்குத் திரும்பியதும் அமெரிக்காவிலிருந்தும் ஐரோப்பாவிலிருந்தும் சுற்றுலாப் பயணிகள் இலங்கைக்கு வர ஆரம்பித்தனர். அழகான கடற்கரைகள், சுகமான தட்பவெப்பநிலை மற்றும் சொகுசு ஹோட்டல்கள், கோடை வாசஸ்தலங்கள் எல்லாவற்றுக்கும் மேலாக நாட்டு மக்களின் கனிவான பேச்சு, அன்பான உபசரிப்பு சுற்றுலாப் பயணிகளை வெகுவாக கவர்ந்தன.

ஆனால், கோவிட் தொற்று தாக்குதல் காரணமாக உலகமே ஸ்தம்பித்தது. பலரும் தொற்று நோய்க்கு ஆளானார்கள். தொழில்கள் முடங்கின. குறிப்பாக சுற்றுலா மற்றும் விருந்தோம்பல் துறையினர் வெகுவாக பாதிக்கப்பட்டனர். கடந்த 18 மாதங்களில் பயணிகளில் ஒரு பகுதியினரை மட்டுமே விமானநிலையங்களில் காணமுடிந்தது. இலங்கையில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி மிக மோசமானது. கோவிட் தொற்றால் ஏற்பட்ட பிரச்னை வேறு. வெளிநாட்டில் இருக்கும் இலங்கை வாழ் மக்களின் பண பரிவர்த்தனையில் ஏற்பட்ட சரிவு, உக்ரைன் மீது ரஷியா தொடுத்துள்ள போரால் ஏற்பட்டுள்ள பெட்ரோலியப் பொருள்களின் விலை உயர்வு என அந்த சிறிய நாட்டின் பொருளாதார நெருக்கடி விசுவரூபம் எடுத்தது. தீர்வு நடவடிக்கைகளில் நிர்வாகம் விரைந்து செயல்படாதது இதுவரை இல்லாத அளவாக மக்களை அரசுக்கு எதிராக கிளர்ந்தெழச் செய்துள்ளது.

தற்போதுள்ள தலைமைக்கு எதிராக மக்கள் போர்க்கொடி தூக்கியுள்ளது நிலைமையின் விபரீதத்தை விவரிக்கிறது. அத்யாவசியத் தேவையான எரிபொருள் அல்லது மருந்து பொருள்களை இறக்குமதி செய்ய போதுமான அன்னியச் செலாவணி இல்லை. பெட்ரோல், டீசல் போன்ற எரிபொருள்களை வாங்க மக்கள் நீண்ட வரிசையில் நிற்கின்றனர். பால் உள்ளிட்ட அத்தியாவசிய உணவுப் பொருள்கள் இல்லாததால் மக்கள் சொல்லொண்ணா துயரத்துக்கு ஆளாகியுள்ளனர். இதே நிலை நீடித்தால் பட்டினிச் சாவும் அதிகரிக்கும். நமது அண்டை வீட்டாரான இலங்கை மக்களுக்கு பிரார்த்தனையைவிட உதவிதான் அதிகம் தேவை. இந்தியா நிச்சயமாக இலங்கைக்கு உதவி வருகிறது. சிறிய நாடானா இலங்கைக்கு நாமும் உதவ முடியும். நிதியுதவி, பொருளுதவி உள்பட நாம் செய்யும் எந்த ஒரு உதவியும் மாற்றத்தை ஏற்படுத்தும். ரோட்டரியின் மூல மந்திரமான தன்னலமில்லாத சேவை என்பதில் இலங்கையில் உள்ள ரோட்டேரியன்கள் காட்டும் ஆர்வத்தை நானே பார்த்திருக்கிறேன். கொழும்புவைச் சேர்ந்த ரோட்டேரியன்கள் செய்த சில சிறந்த சமூக சேவைத் திட்டங்கள் ரோட்டரி இதழில் வெளிவந்துள்ளது. இலங்கையின் வலியைக் குறைக்க ரோட்டரி இன்டர்நேஷனலும், பாசம் மிகுந்த ரோட்டரி உறுப்பினர்களும் மனிதாபிமான அடிப்படையில் என்ன செய்யப்போகிறார்கள் என்பதைக் காண ஆவலோடு காத்திருக்கிறோம்.

பெங்களூரு லேக்ஸைடு ரோட்டரி சங்கம் என்ற ஓரே சங்கம் இந்த ரோட்டரி ஆண்டில் (இன்னும் 3 மாதங்கள் மீதம் இருக்கும் நிலையில்) 200-க்கும் மேலான சமூக நலத் திட்டங்களைச் செயல்படுத்தியுள்ளது என்பதை இந்த இதழில் காணலாம். அதாவது ஏறக்குறைய ஒரு நாளைக்கு ஒரு சேவைத் திட்டம் என்ற அளவில் திட்டங்களைச் செயல்படுத்தியுள்ளது. இதுவே நம் பலம். நமது அமைப்பின் ஒரே ஒரு சங்கத்தின் தலைவரின் செயல் மற்றவர்களை ஈர்க்கும் வகையில் அமைந்துள்ளது. இந்தியாவில் மட்டும் 4,400 ரோட்டரி சங்கங்கள் உள்ளன. இதன் மூலம் ஆயிரக்கணக்கான மக்களுக்கு சமூகசேவை அளிக்க முடியும். அப்படியானால் நமது பலத்தை கற்பனை செய்து பாருங்கள். அரசாங்கங்கள் தங்களால் முடிந்ததைச் செய்கின்றன. ஆனால், மக்கள் மனம் திறந்தால், மாயாஜாலங்களும் அற்புதங்களும் நிகழும்.

ரஷீதா பகத்

## Governors Council

RID 2981 S Balaji
RID 2982 K Sundharalingam
RID 3000 R Jeyakkan
RID 3011 Anup Mittal
RID 3012 Ashok Aggarwal
RID 3020 Rama Rao M
RID 3030 Ramesh Vishwanath Meher
RID 3040 Col Mahendra Mishra
RID 3053 Sanjay Malviya
RID 3054 Ashok K Mangal
RID 3060 Santosh Pradhan
RID 3070 Dr Upinder Singh Ghai
RID 3080 Ajay Madan
RID 3090 Parveen Jindal
RID 3100 Rajiv Singhal
RID 3110 Mukesh Singhal
RID 3120 Samar Raj Garg
RID 3131 Pankaj Arun Shah
RID 3132 Dr Omprakash B Motipawale
RID 3141 Rajendra Agarwal
RID 3142 Dr Mayuresh Warke
RID 3150 K Prabhakar
RID 3160 Thirupathi Naidu V
RID 3170 Gaurishkumar Manohar Dhond
RID 3181 A R Ravindra Bhat
RID 3182 Ramachandra Murthy M G
RID 3190 Fazal Mahmood
RID 3201 Rajasekhar Srinivasan
RID 3203 Shanmugasundaram K
RID 3204 Dr Rajesh Subash
RID 3211 Srinivasan K
RID 3212 Jacintha Dharma
RID 3231 Nirmal Raghavan W M
RID 3232 Sridhar J
RID 3240 Dr Mohan Shyam Konwar
RID 3250 Pratim Banerjee
RID 3261 Sunil Phatak
RID 3262 Santanu Kumar Pani
RID 3291 Prabir Chatterjee



Printed by PT Prabhakar at Rasi Graphics Pvt Ltd, 40, Peters Road, Royapettah, Chennai - 600 014, India, and published by PT Prabhakar on behalf of Rotary News Trust from Dugar Towers, 3rd Flr, 34, Marshalls Road, Egmore, Chennai 600 008. Editor: Rasheeda Bhagat.



The views expressed by contributors are not necessarily those of the Editor or Trustees of Rotary News Trust (RNT) or Rotary International (RI). No liability can be accepted for any loss arising from editorial or advertisement content. Contributions — original content — is welcome but the Editor reserves the right to edit for clarity or length. Content can be reproduced with permission and attributed to RNT.




# உக்ரைன் மோதலின் பல நிறங்கள்!

உக்ரைனில் நடைபெறும் சண்டையின் பின்னணியில் உள்ள காரணங்கள் சிக்கலானவை. அவற்றை கறுப்பு மற்றும் வெள்ளை நிறமாக பார்க்க முடியாது. ஏனெனில் அவற்றுக்கு இடையே பல நிறங்கள் உள்ளன.

1985 முதல் (சோவியத் யூனியனில் மிக்கையீல் கொர்பச்சேவ் ஆட்சி அதிகாரத்துக்கு வந்த நிலையில்) 2008ம் ஆண்டு வரை புக்காரெஸ்ட் உச்சி மாநாட்டில், அமெரிக்கா தலைமையிலான நேட்டோ (NATO) உக்ரைன் மற்றும் ஜார்ஜியா நேட்டோவில் இணைவதை வரவேற்றன. அப்போது இதற்கு ரஷியா எதிர்ப்பு தெரிவித்ததாக மேலைநாடுகள் குறிப்பிடவில்லை. இது கேள்வியை எழுப்புகிறது. பிறகு ஏன் நேட்டோ, ஏவுகணை மற்றும் தாக்குதல் ஆயுதங்களை ரஷியாவின் காலடிக்கு கொண்டுவர விரும்புகிறது?

போர் ஒருபோதும் விரும்பத்தக்க தல்ல. ஆனால், தற்போதுள்ள அச்சுறுத்தலில் அனைத்து பரிமாணங்களையும் உலகம் பார்க்க வேண்டியிருக்கிறது. உயிரிழப்புகள் இல்லாமல் எந்த போரும் இல்லை. உண்மை தான் முதல் பலி. எந்த ஒரு போரிலும் சிவிலியன்கள் கொல்லப்படுவார்கள், வீடுகள், தொழிற்சாலைகள் உள்ளிட்டவை சேதமடையும்.

இரண்டாம் உலகப் போரின்போது ஹிட்லரின் நாஜிப் படைகளைத் தோற்கடிக்க பல நாடுகள் ஒன்று சேர்ந்தன அல்லது கூட்டணி அமைத்தன என்பதை வரலாறு சொல்லும். அடுத்து வந்த சகாப்தங்களில் அதாவது சமீபகாலம் வரை வல்லரசுகள் தங்களின் வர்த்தகம், நிதி, ராணுவ பலம், அரசியல் மற்றும் இதர லாபத்துக்காக சிறிய நாடுகளைத் தாக்கியது என்பதையும் வரலாறு நமக்குச் சொல்கிறது. உலகம் அவற்றை பார்த்துக் கொண்டு பெரும்பாலும் மவுனமாகவே இருந்தது.

ஒருபுறம் ரஷியாவுக்கும் மறுபுறம் உக்ரைன்-ஐரோப்பிய யூனியன்-அமெரிக்க கூட்டுப் படைகளுக்கும் இடையே நடக்கும் மோதலின் தன்மை என்ன? ஒரே நேரத்தில் ஊடகப்போர்-நிதிப் போர்-தரையில் நடக்கும் போர் என மூன்று போர்கள் நடைபெறுகின்றன. உக்ரைனில் நிலைமை மோசமாகி வருவது குறித்தான கவலைகளை வெளிப்படுத்துவதில் ரோட்டரி இன்டர்நேஷனல், ஐ.நா. பொதுச்சபை, மனித உரிமைகள் அமைப்புகளுடன் துணைநிற்கிறது. ஒரு உலகளாவிய மனிதாபிமான அமைப்பு என்ற முறையில் ரோட்டரி, மோதலுக்கான அடிப்படை காரணங்களை நிவர்த்தி செய்வதன் மூலம் சமாதான நிலைப்பாட்டை எடுக்கிறது. மோதலுக்கு பேச்சுவார்த்தை மூலம் அமைதியான வழியில் தீர்வு காணவேண்டும் என்பதில் ரோட்டரி ஆழ்ந்த நம்பிக்கை கொண்டுள்ளது. ரஷியாவின் தாக்குதல் காரணமாக ஏற்பட்ட போர் சூழலில் நாட்டை விட்டு வெளியேறிய 1 கோடி உக்ரைன் மக்களுக்கு நிவாரண உதவி வழங்குவதில் சர்வதேச பங்காளிகளுடன் ரோட்டரி செயலாற்றி வருகிறது.



**Dr மகேஷ் கோட்பாகி**
RI இயக்குனர், 2021–23

# களின் செய்திகள்

## இலக்கை அமைக்கவும்!

புதிய ரோட்டரி ஆண்டிற்கு நாம் தயாரா? திட்டமிடல் வெற்றிக்கு முக்கியமாகும். என்ன செய்ய வேண்டும், எங்கு செய்ய வேண்டும், எப்படி செய்ய வேண்டும், யாரால் செய்யப்பட வேண்டும் என்பதை முன் கூட்டியே சிந்திப்பது மிகவும் முக்கியம். திட்டமிடல் என்பது நமது எண்ணங்களுக்கும் செயல் பாட்டிற்கும் இடையிலான பாலம். திட்டமிடுதலின் மற்றொரு முக்கியமான காரணி நேரம். நீங்கள் முடிவில்லாமல் திட்ட மிட்டுச் செல்ல முடியாது என்பதால், ஒரு குறிப்பிட்ட நேரத்திற்குள் திட்டங்கள் உருவாக்கப்பட வேண்டும். எனவே, உங்கள் சங்கங்களின் இலக்குகளை இந்த மாதத்திற்குள் திட்டமிட்டு நிர்ணயிக்க வேண்டும். திட்டமிடல் ஒரு முடிவில்லாத செயல்முறை என்பதை நினைவில் கொள்ளுங்கள், ஏனெனில் சூழ்நிலை மாற்றத்திற்கேற்ப சில திருத்தங்கள் தேவைப்படலாம். தற்போதைய மாறும் சூழலில் வெற்றிக்கான திறவுகோல் தழுவல்.


அனைத்து சங்கங்களும் வரவிருக்கும் ஆண்டிற்கான தங்கள் அணிகளை தயார் செய்து, சங்க இலக்குகளை நிர்ணயித்து, முக்கிய திட்டங்களைத் திட்டமிட்டு, சில அற்புதமான கூட்டுறவு மற்றும் நட்புக்கு தயாராக உள்ளன என்று நம்புகிறேன்.

ரோட்டரி கற்றல் மையத்தின் சங்கத் தலைமை பட்டியலில், பல்வேறு சங்க பாத்திரங்களில் வெற்றிபெற நீங்கள் தெரிந்து கொள்ள வேண்டியவற்றைக் கோடிட்டுக் காட்டும் வகுப்புகளைக் காணலாம். இந்த கற்றல் திட்டங்கள், நீங்கள் வழக்கமாக ஏப்ரல் மற்றும் ஜூன் மாதங்களுக்கு இடையில் நடைபெறும் மாவட்ட பயிற்சி கூட்டத்தில் பங்கேற்கும் முன் முடிக்க வடிவமைக்கப்பட்டுள்ளது.



சரியான திட்டமிடலுக்குப் பிறகும் உங்கள் இலக்குகள் அனைத்தும் அடையப்படா விட்டாலும் ரோட்டரி சேவை அனுபவத்தை மறக்காதீர்கள். ரோட்டரியில் முக்கியமானது எதுவெனில் இந்த உலகத்திற்கு உங்கள் பங்களிப்பை நேசிப்பதும், அனுபவிப்பதும் மற்றும் நீங்கள் அதன் மூலம் அடையும் ஒவ்வொரு நட்பையும் பேணுவதாகும்!

எனது சக ரோட்டேரியன்கள் அனைவருக்கும் மகிழ்ச்சியான திட்டமிடலுக்கும் மற்றும் அதனை வெற்றிகரமாக நிறைவேற்றுவதற்கும் வாழ்த்துகள்!



A S வெங்கடேஷ்
RI இயக்குனர், 2021–23


## Board of Trustees

Shekhar Mehta RID 3291
**RI President**

Dr Mahesh Kotbagi RID 3131
**RI Director & Chairman, Rotary News Trust**

A S Venkatesh RID 3232
**RI Director**

Gulam A Vahanvaty RID 3141
**TRF Trustee**

Rajendra K Saboo RID 3080
Kalyan Banerjee RID 3060
Panduranga Setty RID 3190
Ashok Mahajan RID 3141
P T Prabhakar RID 3232
Dr Manoj D Desai RID 3060
C Basker RID 3000
Dr Bharat Pandya RID 3141
Kamal Sanghvi RID 3250

## Executive Committee Members (2021–22)

Gaurish Dhond RID 3170
**Chairman Governors Council**

Anup Mittal RID 3011
**Secretary Governors Council**

Ramesh Meher RID 3030
**Secretary Executive Committee**

V Thirupathi Naidu RID 3160
**Treasurer Executive Committee**

Jacintha Dharma RID 3212
**Member Advisory Committee**



**Editor**
Rasheeda Bhagat


**Deputy Editor**
Jaishree Padmanabhan

**Administration and Advertisement Manager**
Vishwanathan K

**Rotary News Trust**
3rd Floor, Dugar Towers,
34 Marshalls Road, Egmore
Chennai 600 008, India.
Phone: 044 42145666
*rotarynews@rosaonline.org*
*www.rotarynewsonline.org*

Now share articles from
*rotarynewsonline.org*
on WhatsApp.

# நம்மால் இன்னும் சிறந்த ஓர் எதிர்காலத்தைக் கட்டமைக்க இயலும்



ரோட்டரி அறக்கட்டளையில் நாம் நல்லதைச் செய்யவேண்டும் என்கிற தெளிவற்ற யோசனையுடன் மகிழ்ச்சி அடைவதில்லை; நாம் அளக்கக்கூடிய படிநிலைகளை எடுக்கிறோம், அவை உறுதியாக, உண்மையாக, வரையறுக்கப்பட்ட ஓர் இலக்கை நோக்கியவையாக உள்ளன.

பெரிய அளவிலான திட்டங்களுக்கு நாம் வழங்கும் புதிய நல்கைகளும் அளவிடக் கூடிய வெற்றியை பற்றியவைதான். ஆண்டுதோறும் வழங்கப்படும் இந்த $2 மில்லியன் நல்கையைப் பெற்ற முதலாவது, உறுப்பினரால் வழிநடத்தப்படும் திட்டமாகிய மலேரியா இல்லாத ஜாம்பியா-வுக்கான கூட்டாளர்கள் (PMFZ), ஜாம்பியா-வின் இரண்டு பகுதிகளில் உள்ள, மலேரியாவால் மிகவும் பாதிக்கப்பட்ட 10 மாவட்டங்களில் மலேரியாவை 90% குறைக்கப் பணியாற்றுகிறது. இது லட்சிய நோக்கம் கொண்ட, ஆனால் எட்டக் கூடிய ஓர் இலக்காகும், ஜாம்பியாவின் பிற பகுதிகளில் ரோட்டரி உறுப்பினர்கள், நம் கூட்டாளர்களால் களத்தில் செயல்படுத்தப்பட்டு மலேரியாவைக் குறைப்பதில் வெற்றியடைந்துள்ள ஒரு சமூக நலப் பணியாளர் மாதிரியின் அடிப்படையில் இது இயங்குகிறது.

ஜாம்பியாவில் மலேரியாவை முடித்துவைக்க உதவுவதற்காக ரோட்டரி அறக்கட்டளை, அமெரிக்க வேர்ல்ட் விஷன் மற்றும் பில் மெலிண்டா கேட்ஸ் அறக்கட்டளை ஆகியோர் PMFZக்குத் தலா $2 மில்லியன் பங்களிக்கிறார்கள். ரோட்டரியால் வழிநடத்தப்படும் இதன் திட்டம் ஏற்கெனவே நூற்றுக்கணக்கான கிராமச் சமூகங்களுக்கு உயிர் காக்கும் மலேரியா நோய் கண்டறிதல், சிகிச்சையை விரிவாக்கத் தொடங்கிவிட்டது. இந்த ரோட்டரி ஆண்டில் இதுவரை 2,500 புதிய சமூக நல ஊழியர்களில் 1,300க்கும் மேற்பட்டோருக்குப் பயிற்சியளித்து, உரிய சாதனங்களை வழங்கிக் களத்தில் பணியமர்த்தியிருக்கிறது PMFZ.

தாக்கத்துக்காக வடிவமைக்கப்பட்ட பன்னாட்டுத் திட்டத்துக்கான இன்னோர் எடுத்துக்காட்டு, போலியோப்ளஸ். நாம் உலக அளவில் இளம்பிள்ளைவாத நிகழ்வுகளை 99.9% குறைத்துவிட்டோம் என்ற உண்மை உங்களுடைய தாராளமான பங்களிப்புகள், பன்னாட்டு இளம்பிள்ளைவாத அகற்றல் முன்னெடுப்பின் வழியாக நம் வலுவான கூட்டுப் பணிகள் மற்றும் உலகெங்கும் குழந்தைகளுக்குச் சொட்டு மருந்துகளை வழங்கும் தன்னார்வலர்களுடைய பரந்த வலைப்பின்னல் ஆகியவற்றுக்கான ஒரு சான்றாகும்.

மேலும், இப்போது நாம் இதை நிறுத்த இயலாது. இளம்பிள்ளை வாதத்தை முடித்துவைக்கிற பணிக்கு ரோட்டரி தலைமை தாங்கியது, ரோட்டரி இந்தப் பணியை நிறைவு செய்யும். நாம் இந்தப் பணியை நிறைவு செய்வதற்காக, மீதமுள்ள DDF-ஐ இளம்பிள்ளைவாத அகற்றலுக்கு நியமிக்கும்படி உங்கள் மாவட்டத் தலைவர்களை ஊக்குவியுங்கள்.

ஒரு பொறியாளர் என்ற முறையில், என்னுடைய வரைபடங்கள் மிகச் சிறந்த கட்டமைப்புகளாக, வசதிகளாக மாறுவதைப் பார்த்து நான் பெருமைப்பட்டுள்ளேன். ஆனால், நான் அதைவிடப் பெருமைப்படும் உண்மை, ரோட்டரியில் நாம் எல்லாரும் சேர்ந்து இன்னும் மேம்பட்ட ஓர் உலகத்தைப் படிப்படியாக, ஒவ்வொரு திட்டமாக, அளவிடக்கூடிய வகையில் வடிவமைத்துள்ளோம். ரோட்டரியில் நாம் அனைவரும் நம்பிக்கையைக் கொண்டுவரும் பொறியாளர்களாக, அடுத்த தலை முறைக்கு இன்னும் மேம்பட்ட எதிர்காலத்தைக் கட்டமைக்கிறவர்களாக இருக்கலாம்.

**ஜான் F ஜெர்ம்**
அறக்கட்டளை அறங்காவலர் தலைவர்



# ரோட்டரி செயல் குழுக்கள்




RI மாநாட்டுக்கு முன்பாக, ரோட்டரி செயல் குழுக்களின் தலைவர்கள் ஒரு திறந்த சந்திப்பில் அனுபவங்களைப் பகிர்ந்துகொள்வார்கள், உடனுழைப்பு வாய்ப்புகளை நாடுவார்கள். RAGTime என்று அழைக்கப்படும் இந்த நிகழ்ச்சி 2 ஜூன் அன்று ஹூஸ்டனின் டவுன்டவுன் நீர்வாழ் உயிரினங்கள் காட்சியகத்தில் நடைபெறும்.

ரோட்டரி செயல் குழுக்கள் என்பவை, பொருளாதார வளர்ச்சி, அமைதி, அடிமை யாதலைத் தடுத்தல், சுற்றுச்சூழல், நீர் போன்ற ஒரு குறிப்பிட்ட துறையின் வல்லுனர்களைக் கொண்ட சுதந்தரமான, பன்னாட்டு, ரோட்டரி யுடன் இணைந்த குழுக்கள். சங்கங்கள் திட்டங்களைத் திட்டமிட்டுச் செயல்படுத்தும் போது செயல் குழுக்கள் தங்களுடைய தொழில்நுட்ப வல்லமை, ஆதரவை வழங்கு கின்றன. சங்கங்களும் மாவட்டங்களும் கூட்டாளர்களை, நிதியைக் கண்டறிவதற்கு, நல்கை விண்ணப்பங்களைத் தயாரிப்பதற்கு, சமூக மதிப்பீடுகளை நடத்துவதற்கு, தங்கள் திட்டங்களைக் கண்காணிக்க மற்றும் மதிப்பிடத் திட்டங்களை உருவாக்குவதற்கு இவை உதவலாம்.

இந்த நிகழ்ச்சியில் நீங்கள் 2020–21ல் அமைக்கப்பட்ட மிகப் புதிய இரண்டு செயல் குழுக்களாகிய மாதச் சுழற்சி நலன் மற்றும் தூய்மைக்கான ரோட்டரி செயல் குழு, தஞ்ச மடைந்தோர், வலுக்கட்டாயமாக இடம் மாற்றப் பட்டோர், இடம் பெயர்ந்தோருக்கான ரோட்டரி செயல் குழு உள்பட 27 செயல் குழுக்களில் பெரும்பாலானவற்றின் பிரதிநிதிகளைச் சந்திக்க லாம். இந்த நிகழ்ச்சிபற்றி மேலும் அறியவும், இதில் கலந்துகொள்ள நுழைவுச் சீட்டுகளை வாங்கவும் dna-rag.com/rotary-in-action/ragtime-2022 என்ற இணையத் தளத்துக்கு வாருங்கள்.

மேலும் அறிய, பதிவு செய்ய:
convention.rotary.org.


ADVT.





Set sail onboard one of Uniworld's floating boutique hotels, each with a unique design inspired by the destinations they sail, to experience an immersive luxury vacation unlike any other. Enjoy visiting a variety of destinations in one trip, expert local guides, unmatched all-inclusive amenities and the best service in the industry.



**CASTLES ALONG THE RHINE**
8 Days | Basel to Amsterdam
*River Queen, S.S. Antoinette,*
or *River Empress*



**SPLENDORS OF EGYPT AND THE NILE**
12 Days | Cairo to Cairo
*S.S. Sphinx*



**PARIS & NORMANDY**
8 Days | Paris to Paris
*S.S. Joie de Vivre*

**AS A ROTARY CLUB MEMBER, SAVE 10% ON ALL UNIWORLD CRUISES.**

**To learn more, contact us at +91 9967552744 | harshali.darpel@ttc.com or visit Uniworld.com**



Rotary PEOPLE OF ACTION

# ரூ.1.5 கோடியில் 200 திட்டங்கள் பெங்களூரு சங்கத்தின் சாதனை

ரஷீதா பகத்



*பெங்களூரு அருகிலுள்ள அனேக்கலில் கல்யாணி என்னும் குளத்தை சங்கம் அழகுபடுத்தியுள்ளது.*

பெங்களூருவில் உள்ள பெங்களூரு லேக்சைடு ரோட்டரி சங்கம், RID 3190 செயல்படுத்தி வரும் பல்வேறு பெரிய திட்டங்களில் பங்கேற்று மின்னல் வேகத்தில் செயல்பட்டு வருகிறது. இந்த ஆண்டு மட்டும் நாங்கள் இதுவரை 200 சமூக நலத் திட்டங்களைச் செயல்படுத்தியுள்ளோம் என்கிறார் சங்கத்தின் தலைவர் காசிநாத் பிரபு. இதன் மொத்த மதிப்பு ரூ.1.5 கோடிக்கு மேலாகும்.

தமது சங்கத்தின் 5 அல்லது 6 திட்டச் செயல்பாடுகளை அவர் ரோட்டரி நியூஸ் உடன் பகிர்ந்து கொண்டார். ஒவ்வொன்றும் தனித்தனியாக அனுப்பி வைக்கப் பட்டது. அவை அரை பக்கத்தில், அல்லது ஒரு பக்கத்தில் காட்சிப் படுத்தப்பட்டிருக்கலாம் அல்லது சங்கத்தின் செய்திகளில் குறிப்பிடப் பட்டிருக்கலாம். இவை எதிலும் செலவுத் தொகை குறிப்பிடப் படவில்லை. நான் வெவ்வேறு மின்னஞ்சல்களை தீர படித்து செய்து பார்த்தபோது, 55 உறுப்பினர்களை

மட்டுமே கொண்ட இந்த சிறிய சங்கம் செய்திருக்கும் பணிகள் என்னை ஆச்சரியப்படவைத்தது. எல்லாவற்றையும்விட இந்த சங்கம் கார்ப்பொரேட் நிறுவனங்கள் மற்றும் தன்னார்வ தொண்டு நிறுவனங்களுடன் குறிப்பாக இன்ஃபோசிஸ் அறக்கட்டளை மற்றும் அஸிம் பிரேம்ஜி பிலந்த்ரோபிக் இனிஷியேடிவ் ஆகிய அமைப்புகளுடன் கூட்டாண்மை வைத்து செயல்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது.

பல கார்ப்பொரேட் நிறுவனங்களுடன் கூட்டாண்மை வைத்துள்ளதற்காக பிரபுவை நான் வாழ்த்திய போது, எங்களது அடிப்படை தகவல்கள் சரியான இடத்தில் இருக்கின்றன. நாங்கள் தேவையான அனுமதி மற்றும் சான்றிதழ்களுடன் அறக்கட்டளையை ஏற்படுத்தியுள்ளோம். எனவே கூட்டண்மைக்காக கார்ப்பொரேட் நிறுவனங்களை அணுகுவது எங்களுக்கு எளிதாக உள்ளது. அனைத்து விவரங்களும் முறையாக ஆவணப்படுத்தப்பட்டு கணக்குகள் தெளிவாக இருக்கும்போது, அவர்களின் தணிக்கை நோக்கங்கள் மற்றும் நிறவன விதிமுறைகளுக்கு இது எளிதாகிறது. எனவே அடுத்த ஆண்டும் அவர்கள் எங்களுடன் கூட்டாண்மை தேடி வருவார்கள். இது ஒரு நீண்டகால செயல்முறையாகும் என்றார் அவர்.

பல ஆண்டுகளாக இந்த சங்கம் தேர்ந்தெடுக்கப்பட்ட நீண்டகால மற்றும் நிலையான திட்டங்களை சமூகத்தில் நன்கு அறியப்பட்ட நல்ல பின்னணியைக் கொண்ட கூட்டாளர்கள் துணையுடன் செயல்படுத்தி வருகிறது. பிரபு தகவல் தொழில்நுட்ப வல்லுநராக இருப்பதால் அவரது சங்கம் நிதி திரட்ட தொழில்நுட்பத்தை புத்திசாலித்தனமாக பயன்படுத்தி வருகிறது. சில திட்டங்களை சங்கம் கூட்டு நிதி உதவி நிதி திரட்டியது. மேலும் ஒரு திட்டத்துக்கு ரூ.5 லட்சம் முதல் ரூ.10 லட்சம் வரை திரட்டி செயல்படுத்தி வருகிறது.

*கல்யாணி குளம் ரோட்டரியின் செயலிற்கு முன்.*



### குழந்தைகள் காப்பகம்

சங்கத்தின் முக்கியமான திட்டங்களில் ஒன்று சேரிகளில் வாழும் மக்கள் மற்றும் புலம் பெயர் தொழிலாளர்களின் குழந்தைகளுக் கான காப்பகங்களுக்கு நிதியுதவி அளித்து ஆதரவளிப்பதாகும். பெங்களூருவில் சேரி மக்கள் மற்றும் புலம்பெயர் தொழிலாளர்களின் குழந்தைகளுக்காக 7 காப்பகங்களை நடத்தி வரும் ''நவஜீவன் மஹிளா பிரகதி கேந்திரம்'' (NMPK) என்ற அமைப்புடன் ஐந்தாண்டுகளுக்கு முன்பு சங்கம் கூட்டாண்மை வைத்துக் கொண்டது. முதலில் உறுப்பினர்கள் இந்த அமைப்பின் சார்பில் நடைபெறும் காப்பக குழந்தைகளுக்கு உணவு அளிப்பது மற்றும் குழந்தைகளுக்கான நிகழ்ச்சிகளுக்கு ஆதரவு அளித்து வந்தனர். அதைத் தொடர்ந்து 8-வது காப்பகத்தை நிறுவி அதற்கு முழு நிதியுதவி அளிக்கவும் சங்கம் முடிவு செய்தது. இதற்காக பல்வேறு நிறுவனங்களின் உதவியுடன் கூட்டு நிதியாக ரூ.10 லட்சம் திரப்பட்டப் பட்டது. இந்த தொகை காப்பகங் களின் இரண்டு ஆண்டு செலவினங் களுக்கு போதுமானதாகும். ஏனெனில் ஒவ்வொரு காப்பகத்திலும் அதிகபட்சம் 50 குழந்தைகள் மட்டுமே உள்ளனர்.

8-வது குழந்தைகள் காப்பகம் இரண்டு ஆண்டுகளை நிறைவு செய்துள்ள நிலையில் அவற்றின் செயல்பாடுகள் தொடர்பான விவரக்குறிப்புகள் ஆவணப்படுத்தப்பட்டு "அஸிம் பிரேம்ஜி பிலாந்தெரபிக் இனிஷியேடிவ்" அமைப்பிடம் சமர்ப்பிக்கப்பட்டது. இந்த அறிக்கையை படித்துப் பார்த்த அஸிம் பிரேம்ஜி, அதனால் ஈர்க்கப்பட்டு அவரே நேரிடையாகச் சென்று காப்பகத்தை ஆய்வு செய்தார். அவரை சிறப்பு விருந்தினராக அழைத்து, எங்கள் உறுப்பினர்களுடன் ஒரு மிகப்பெரிய நிகழ்ச்சியை நடத்த திட்டமிட்டிருந்தோம். ஆனால், அவர் இதை விரும்பவில்லை. மிகவும் எளிமையானவர் அவர். எங்களது திட்டத்தால் ஈர்க்கப்பட்ட அவர், எங்களுடன் நீண்டகால கூட்டாண்மைக்கு முன்வந்தார் என்றார் பிரபு.



*பெங்களூர் லேக்ஸைட் நிறுவிய ஒரு குழந்தைகள் காப்பகம்.*

இந்தியாவின் தலைசிறந்த நன்கொடையாளர்களில் ஒருவரான அஸிம் பிரேம்ஜி, ரோட்டரி நடத்தி வரும் காப்பகங்களின் செயல்பாடு களைக் கண்டு வியந்து உடனடியாக மேலும் இரண்டு காப்பகங்கள் (9-வது மற்றும் 10-வது காப்பகங்கள்) அமைக்க ரூ.62 லட்சம் கொடுக்க முன்வந்தார். அதுமட்டுமல்ல, தற்போதுள்ள காப்பகங்களை மேம்படுத்தவும் கூடுதலாக நிதி கொடுத்தார். இப்போதுள்ள காப்பகங்களை ஒரு பெரிய வீட்டில், அனைத்து சுகாதார வசதிகளுடனும் ஏன் நடத்தக்கூடாது என்று கேள்வி எழுப்பினார். 9-வது காப்பகம் கடந்த ஆண்டு திறக்கப்பட இருந்தது. ஆனால் கோவிட் தொற்றுப் பரவல் காரணமாக திட்டச் செயல்பாடுகள் தாமதமானது. தொற்றுக்கு முன் இத்திட்டத்தை அஸிம் பிரேம்ஜி ஆய்வு செய்தார்.



*DG ஃபசல் மகமுது, கிட்வாய் மருத்துவமனை இயக்குனர் Dr C ராமசந்திரா மற்றும் RC பெங்களூர் லேக்ஸைட் தலைவர் காசிநாத் பிரபு சங்கம் புதுப்பித்த மருத்துவமனையின் சமையலறை துவக்க விழாவில்.*

சங்கத்தின் கூட்டாளியான NMPK உடன் இணைந்து கடந்த மார்ச் 1ம் தேதி, பெங்களூரு, ஆனந்தபுரம், ஜீவன் பீமா நகரில், மகாசிவராத்திரி அன்று திறந்து வைக்கப்பட்டது. இந்த காப்பகங்களில் குழந்தைகளுக்கு ஊட்டச்சத்துடன் கூடிய காலை உணவு, முட்டையுடன் மதிய உணவு வழங்கப்படுகிறது. மேலும் பாதுகாப்பான சூழலில், இரண்டு ஆசிரியர்கள் பணியில் அமர்த்தப்பட்டு அவர்கள் மூலம் குழந்தைகளுக்கு அடிப்படை கல்வி அறிவு கற்றுத்தரப்படுகிறது. வீட்டுவேலை செய்யும் பெண்கள் மற்றும் புலம்பெயர் தொழிலாளர்கள் தங்கள் குழந்தைகளை காலையில் இங்கு விட்டுச் செல்வார்கள். பின்னர்

மாலை 5 மணிக்கு மேல் இங்கு வந்து தங்கள் குழந்தைகளை அழைத்துச் செல்வார்கள். குழந்தைகளின் பெற்றோர்களுக்கு அவ்வப்போது தேவையான பயிற்சிகளும், ஆலோசனைகளும் வழங்கப் படுகின்றன. தீபாவளி, கிறிஸ்து மஸ் கொண்டாட்டங்களும் இங்கு நடைபெறும்.

RID 3190 மாவட்டம், பெங்களூரு லேக்ஸைடு ரோட்டரி சங்கத்துக்கு இது ஒரு முக்கிய திட்டமாகும். மாவட்டத்தில் இது போல் 100 காப்பகங்கள் நடத்த திட்டமிட்டுள்ளோம். இத்திட்டத்தில் பெங்களூரு லேக்ஸைடு ரோட்டரி சங்கம் முதன்மை இடத்தை வகிக்கிறது. அடுத்த ஒரு மாதத்தில் 10-வது காப்பகத்தை திறக்க முடியும் என்ற நம்பிக்கை ஏற்பட்டுள்ளது. இதற்கு நிதியுதவி அளிக்க அஸிம் பிரேம்ஜி பிலாந்தெரபிக் இனிஷியேடிவ் உறுதியளித்துள்ளது. சமூகத்தினரின் பங்களிப்பை அதிகரிக்க உள்ளூர் மக்கள் தங்கள் பிறந்தநாள் மற்றும் விசேஷ நாள்களில் குழந்தைகளுக்கு உணவு அளிக்க வாய்ப்பு தருகிறோம். அவர்கள் விரும்பினால் புத்தகங்கள் அல்லது வேறு உபயோகமான பொருள்களை நன்கொடையாக அளிக்கலாம் என்றார் பிரபு.

ஆனால், பெங்களூரு போன்ற பெருநகரங்களில் இத்தகைய காப்பகங்களை நிறுவிட, நிதி ஆதரவு அளிக்க ஆண்டுக்கு ஒரு காப்பகத்துக்கு ரூ.5-6 லட்சம் தேவைப்படும். அதற்கு எங்கள் மாவட்ட சங்கங்கள், கார்ப்பொரேட் நிறுவனங்களின் சமூக பொறுப்புணர்வுத் திட்டத்தின் கீழ் நிதிபெற அதிக கூட்டாளர்களைப் பெறவேண்டும் என்று பிரபு மேலும் கூறினார்.





பெண்களுக்கு மிதிவண்டி அளிக்கும் விழாவில் ரோட்டரியினர்.

**கேர்ள்ஸ் ஆன் வீல்ஸ்**

RID 3190 மற்றும் எங்கள் சங்கத்தின் மற்றொரு லட்சியம் மற்றும் மனதைக் கவரும் திட்டமானது கேர்ள்ஸ் ஆன் வீல்ஸ். RI சேகர் மேத்தா கவனம் செலுத்தி வரும் பெண்களை மேம்படுத்துதல் என்னும் குறிக்கோளுடன் இது தொடர்புடையது. அதாவது தொலைதூர கிராமங்களிலிருந்து பள்ளி சென்று படிக்கும் மாணவி களுக்கு சைக்கிள்கள் வழங்கும் திட்டம். இதன் மூலம் வயதுக்கு வந்த பெண்கள் (பூப்பெய்திய பெண்கள்) பள்ளிக்குச் செல்வதை நிறுத்திவிடாமல் பாதுகாப்பாக சைக்கிளில் பள்ளிக்குச் சென்று வர முடியும்.

இந்த ரோட்டரி ஆண்டில், கிராமப் புறங்களில் உள்ள பள்ளிகளில் 6 அல்லது 7ஆம் வகுப்பு மாணவிகள் 1,000 பேருக்கு சைக்கிள் வழங்கும் திட்டத்தை செயல்படுத்த திட்ட மிட்டுள்ளோம். இந்த திட்டத்திலும் பெங்களூரு லேக்ஸைடு ரோட்டரி சங்கம் தான் முதன்மை வகிக்கிறது. முதல் கட்டமாக இந்த சங்கம், ராஜ்மஹால் விலாஸ் ரோட்டரி சங்கம் மற்றும் பெங்களூரு பஸவங்குடி ரோட்டரி சங்கங்களுடன் இணைந்து பெங்களூருவிலிருந்து 80 கி.மீ. தொலைவில் உள்ள கொய்ரா கிராமத்தைச் சேர்ந்த 35 மாணவிகள் பள்ளி சென்றுவர சைக்கிள் வழங்கியுள்ளது. பாதுகாப்பான போக்குவரத்து இல்லாததால் பள்ளிக்குச் செல்வதை கைவிடும் 6 அல்லது 7 ஆம் வகுப்பு படிக்கும் பெண்களை அடையாளம் காணுமாறு மாவட்டத்தில் கிராமப்புற பகுதிகளில் உள்ள ரோட்டரி சங்கங்கள் கேட்டு கொள்ளப்பட்டுள்ளன. இதற்காக ரோட்டேரியன்கள் மூலம் ரூ.1.5 லட்சம் நிதி திரட்டி இந்த சைக்கிள்கள் வழங்கப்பட்டுள்ளன. இதன் மூலம் வளர் இளம் பருவத்தி னரின் அடிப்படை உரிமாயான கல்விக் கனவு நனவாகிறது.

நாங்கள் இந்த திட்டம் குறித்து முழுமையாக ஆய்வு செய்து, அதை ஹீரோ சைக்கிள்ஸ் போன்ற கார்ப்பொரேட் நிறுவனத்துக்கு எடுத்துச் சென்று அவர்களின் ஒத்துழைப்புடன் மாணவிகளுக்கு சைக்கிள் திட்டத்தைச் செயல்படுத்த முடிவு செய்துள்ளோம். இதன் மூலம் 1,000 மாணவிகள் கல்விக்கான அணுகலைப் பெறமுடியும் என்று சங்கத்தின் தலைவர் பிரபு மேலும் கூறினார்.

**முதியோருக்கு மருத்துவச் சேவை**

ஆற்றல்மிக்க, தொழில்நுட்ப திறன்படைத்த இந்த இளைஞர் இந்த ஆண்டு ரூ.1.5 கோடி மதிப்பில் 200 திட்டங்களைச் செயல்படுத்தியுள்ளார்.

கடந்த பிப்ரவரி 23ல் ரோட்டரி தனது 117வது ஆண்டை கொண்டாடிய நேரத்தில் இந்த சங்கம் சமூக பொறுப்புணர்வு திட்டத்தின் கீழ் Embitel மற்றும் Corsair Gaming ஆகிய கார்ப்பொரேட் நிறுவனங்களுடன் இணைந்து இரண்டு நடமாடும் மருத்துவச் சேவை பிரிவுகளைத் தொடங்கி யுள்ளது. இந்த திட்டத்துக்கு சுக் சந்தியா (Sukh Sandhya) என பெயரிடப்பட்டுள்ளது. இதற்கான முன்முயற்சிகளை எடுத்தது RID 3190 ஆகும். தொண்டு நிறுவனங்கள் மற்றும் முதியோர் இல்லங்களில் உள்ள முதியவர்களுக்கு மருத்துவச் சிகிச்சை அளிப்பதில் கவனம் செலுத்தி வரும் Dream India Network என்ற நிறுவனத்தின் ஆதரவுடன் இவை செயல்படுத்தப்பட்டுள்ளன.

Embitel Technologies நிறுவனம் பல்வேறு துறைகளில் நவீன தொழில்நுட்பம் மூலம் டிஜிட்டல் மாற்றத்தை ஏற்படுத்தி வருகிறது. Corsair Gaming அமெரிக்காவில் கலிபோர்னியாவை தலைமையிடமாகக் கொண்ட வன்பொருள் கணினி நிறுவனமாகும். பெங்களூரு லேக்ஸைடு ரோட்டரி சங்கம் இரு முதியோர் இல்லங் களுடன் இணைந்து செயல்பட்டு வருகிறது. அங்குள்ள முதியோர் களுக்கு பெட்ஷிட், போர்வைகளை தேவைப்படும் போது வழங்கி வருகிறது. ஆனால், அடுத்த கட்ட நடவடிக்கையாக எங்கள் சங்கம், Dream India Network நிறுவனத்துக்குச் சொந்தமான இரண்டு ஆம்புலன்ஸை மேம்படுத்த தலா ரூ.7.5 லட்சம் செலவிட்டுள்ளது. இந்த நிறுவனம் முதியோர்களின் மருத்துவத் தேவை களை கவனித்துக் கொள்கிறது. சாலையோரங்களில் அனாதையாக கிடக்கும் முதியோர்கள் நலனிலும் அக்கறை செலுத்தி வருகிறது.

இதுபோன்ற நேரங்களில் ரோட்டரி சங்கம், விவரங்களை DIN கவனத்துக்கு கொண்டு செல்கிறது. அவர்களுக்கு இரண்டு மருத்துவமனைகளுடன் தொடர்பு இருப்பதால் கைவிடப்பட்ட முதியவருக்கு அங்கு ஆரம்ப கட்ட சிகிச்சை அளிக்க ஏற்பாடு செய்கிறது. பின்னர் அவர்கள் முதியோர் இல்லத்துக்கு கொண்டு செல்லப்பட்டு பராமரிக்கப்படுகிறார்கள்.

சுக் சந்தியா திட்டத்தின் கீழ் சுமார் 50 முதியோர் இல்லங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன. மேலும் DIN உடன் இணைந்து பணியாற்றுவதன் மூலம் அவற்றை மகிழ்ச்சி நிறைந்த முதியோர் இல்லங்களாக மாற்றுவதற்கான

சவாலை ஏற்க பல்வேறு ரோட்டரி சங்கங்கள் அழைக்கப்படும். தரம் உயர்த்தப்பட்ட ஆம்புலன்ஸ் வாகனங்கள் சமீபத்தில் மாவட்ட ஆளுநர் ஃபஸல் மஹ்மூத், PDG கே.எஸ்.நாகேந்திரா மற்றும் எட்வர்டு தாமஸ் (DIN) மற்றும் பெங்களூரு லேக்ஸைடு ரோட்டரி உறுப்பினர்கள் முன்னிலையில் இயக்கிவைக்கப் பட்டன. இரண்டு ஆம்புலன்ஸ் மருத்துவ வாகனங்களும் மருத்து வர்கள் மற்றும் துணை மருத்து வர்களால் நிர்வகிக்கப்படும். அக்குழுவினர் முதியோர் இல்லங்களுக்குச் சென்று வழக்கமான பரிசோதனைகளை மேற்கொண்டு தேவைப்படுவோர்க்கு மருந்து, மாத்திரைகளை வழங்குவார்கள்.

### கணினி ஆய்வகம்

கடந்த மார்ச் மாதம் பெங்களூரு லேக்ஸைடு ரோட்டரி சங்கம், முல்பாகல் சென்ட்ரல் ரோட்டரி சங்கத்துடன் இணைந்து மற்றொரு திட்டத்தை செயல்படுத்தியது. அதாவது முல்பாகலில் உள்ள அரசு பாலிடெக்னிக் கல்லூரியில் 109 டெஸ்க்டாப் கணினிகளை நிறுவி, கணினி ஆய்வகத்தை திறந்துவைத்தது. அதாவது சங்கம் இதுவரை 337 கணினிகளை அரசு நிறுவனங்களுக்கு இலவசமாக வழங்கியுள்ளது. அதாவது இன்ஸ்டிடியூட் ஆஃப் டெக்ஸ்டைல் டெக்னாலஜி (33), ஜி.ஆர். இன்ஸ்டிடியூட் ஆஃப் கமர்ஷியல் பிராக்டீஸ் (62), முல்பாகல் அரசு பாலிடெக்னிக் கல்லூரி (109), கேஜிஎப் அரசு பாலிடெக்னிக் (133) என மொத்தம் 337 கணினிகள் வழங்கப்பட்டுள்ளன. இந்த திட்டம் இன்ஃபோஸிஸ் அறக்கட்டளை, கர்நாடக அரசின் தொழில்நுட்ப கல்வித்துறை ஆகியவற்றின் கூட்டாண்மையுடன் செயல்படுத்தப்பட்டது.

### மாவட்ட ஆளுநர் பாராட்டு

RID 3190 மாவட்ட ஆளுநர் ஃபஸல் மஹ்மூத் கூறுகையில், பிரபு உண்மையிலேயே ஒரு சிறந்த தலைவர். அவருக்கு நல்ல தொடர்பு உள்ளது. எந்த ஒரு திட்டமானாலும் அதை அதிவேகத்தில் செய்து முடித்துவிடுகிறார். சில சமயங்களில் 2 அல்லது 3 திட்டங்களை ஒரே நாளில் செயல்படுத்துகிறார். எல்லாவற்றையும்விட கார்ப்பொரேட் நிறுவனங்களின் கூட்டாண்மையைப் பெறுவதில் வல்லவர். உதாரணமாக அஸிம் பிரேம்ஜி பிலாந்தெரபிக் இனிஷியேடிவ் அமைப்பின் கூட்டாண்மையைப் பெறுவது அவ்வளவு எளிதான காரியமல்ல. ஏனெனில் அவர்கள் தங்களுக்கு உரித்தான வேலையைச் செய்பவர் கள். அவர்களுடன் கூட்டாண்மை பெறுவது என்றால் அதற்கு தனித்திறமை வேண்டும். அது பிரபுவிடம் இருக்கிறது. திட்டங்களில் இதர சங்கங்களை ஈடுபடுத்துவதிலும் அவர் கெட்டிக்காரர் என்றார்.

அவர் மேலும் கூறுகையில், இது ஒன்றும் பெரிய சங்கங்கள் அல்ல. ஆனால், அவர், தனது திட்டத்துக்காக நகருக்கு வெளியில் உள்ள இதர சிறிய சங்கங்களையும் ஈடுபடுத்துகிறார். அதாவது சகயோகா. பெங்களூருவில் உள்ள பெரிய சங்கங்கள், மாவட்டத்தில் உள்ள இதர சிறிய சங்கங்களுடன் இணைந்து செயல்பட வேண்டும் என்பதுதான் அவரது நோக்கமாகும். RID 3190 மாவட்டத்தில் மொத்தம் 162 சங்கங்கள் உள்ளன என்றால்





அவற்றில் 100 சங்கங்கள்தான் பெங்களூருவில் செயல்பட்டு வருகின்றன. இதர 62 சங்கங்கள் சின்ன சின்ன இடங்களில் செயல் படுகின்றன. இவை அனைத்தையும் பெரிய சேவைத் திட்டங்களில் ஈடுபடுத்துவதை சகயோகா நோக்கமாகக் கொண்டுள்ளது என்று அவர் விளக்கினார்.

**கோவில் குளத்தை புதுப்பித்தல்**

உலக தண்ணீர் தினத்தன்று பெங்களூரு லேக்ஸைடு ரோட்டரி சங்கம், பெங்களூர் பசவங்குடி மற்றும் பெங்களூர் ஸ்பந்தனா ரோட்டரி சங்கங்களுடன் இணைந்து பெங்களூர் புறநகர் பகுதியான ஆனேக்கல்லில் புதுப்பிக்கப்பட்டு அழகுற காட்சியளிக்கும் "கல்யாணி" குளத்தை திறந்துவைத்தது. மூன்று சங்கங்களும் தலா ரூ.50,000 நிதி திரட்டி, பஞ்சாயத்து தலைவர்கள், நகராட்சி ஊழியர்கள் மற்றும் உள்ளூர் சமூகத்தினர் ஆதரவுடன் குளம் தூர்வாரப்பட்டு புதுப்பிக்கப்பட்டது. குளத்தைச் சுற்றியிருந்த குப்பைகளும், மண் புதர்களும் அகற்றப்பட்டன. இனி அந்த குளத்துக்கு நல்ல நீர் வரும் வகையில் புதுப்பிக்கப்பட்டது. குளத்தின் சுற்றுச்சுவர்களில் வண்ண ஓவியங்களும் வரையப்பட்டன. உள்ளூர் தலைவர்கள், உள்ளூர் அமைப்புகள் மற்றும் உள்ளூர் மக்கள் முன்னிலையில் புதுப்பிக்கப்பட்ட கல்யாணி குளத்தில் கங்கா பூஜையும் நடைபெற்றது. உள்ளூர் மக்கள் மற்றும் தன்னார்வலர்கள் இணைந்த 7 வாரங்களில் குளத்தை தூர்வாரி, அடிப்படை வசதிகளை ஏற்படுத்தினர். ஆனேக்கல்லைச் சேர்ந்தவரும், மாவட்ட எழுத்தறிவு குழு தலைவருமான ரோட்டேரியன் குருநாகேஷ், இந்த திட்டத்தை சிறப்பாக செயல்படுத்துவதற்கான முயற்சிகளை மேற்கொண்டார்.

குளத்தில் எந்தவிதமான தடையும் இல்லாம் தண்ணீர் ஓடுவதற்கு இன்னும் சில வேலைகள் செய்யவேண்டியுள்ளது. எனவே இதை உறுதிசெய்ய ரோட்டேரியன் மற்றும் உள்ளூர் மக்கள் அடங்கிய குழு இதற்கென அமைக்கப்பட்டுள்ளது.





**இடது:** *சங்கத்தலைவர் காசிநாத் பிரபு மற்றும் சங்கத்தினர் புதுப்பிக்கப்பட்ட குளத்தின் கரையில்.*

**கீழே:** *குழந்தைகள் காப்பகத்தில் குழந்தைகள், தாய்மார்களுடன் ரோட்டரியினர்.*

**சமையலறை புனரமைப்பு**

மேலும் பெங்களூரு பசவேஸ்வரநகர் ரோட்டரி சங்கத்துடன் இணைந்து செயல்படுத்தப்பட்ட திட்டங்களையும் அவர் நினைவு கூர்ந்தார். கித்வாய் மருத்துவ மனையில் உள்ள சமையலறை புனரமைக்கப்பட்டது. இந்த மருத்துவமனை நோயாளிகளுக்கு துணையாக இருப்பவர்கள் 500 பேருக்கு தினமும் மூன்று வேளையும் இலவச உணவு வழங்கவும் திட்டமிட்டுள்ளது. நீங்கள் முழுநேர ரோட்டரி தலைவராகி விட்டீர்களா என்று அவரிடம் நான் வேடிக்கையாக கேட்டேன். இந்த ஆண்டு முடிவதற்கு இன்னும் மூன்று மாதங்களே இருந்த நிலையில் ஓராண்டில் 200 திட்டங்களைச் செயல்படுத்துவது என்பது முழுநேர வேலை இருந்தால் தான் சாத்தியம் என்று குறிப்பிட்டபோது, பிரபு சிரித்துக் கொண்டே, உண்மையில் கோவிட் தொற்று காலம்தான் எனக்கு இந்த வாய்ப்பை அளித்தது. ஏனெனில் நான் அப்போது வீட்டிலிருந்தபடி வேலை செய்து கொண்டிருந்தேன். அத்துடன் ரோட்டரி வேலைகளையும் கவனித்து வந்தேன். மேலும் தொலைபேசி மூலம் திட்டமிடல் மற்றும் ஒருங்கிணைப்பை மேற்கொண்டோம் என்றார்.

வடிவமைப்பு: N கிருஷ்ணமூர்த்தி

# பல சேவை திட்டங்களைச் செயல்படுத்தும் புனே இன்டராக்ட் கிளப்

ஜெய்ஸ்ரீ

கோவிட் தொற்றின் போது, புனேவில் உள்ள ஒரு இளைஞர் குழு, தங்கள் ரோட்டேரியன் பெற்றோர்களின் சேவையால் ஈர்க்கப்பட்டு, மருத்துவ முன்னணி ஊழியர்களுக்காக தங்களால் முடிந்த உதவியைச் செய்ய ஆர்வமாக இருந்தனர். எனது சங்கம் RC புனே டௌன்டவுன் மூலம் முகமூடிகள், PPE ஆடைகள் மற்றும் சானிடைசர்களை துப்புரவு மற்றும் முதல்நிலை ஊழியர்களுக்கு சேகரித்து விநியோகிப்பதில் நாங்கள் மும்முரமாக இருந்தபோது, என் மகளும் அவளது நண்பர்களும் தாங்களும் களமிறங்கி ஏதாவது செய்ய வேண்டும் என்று எங்களைத் தொந்தரவு செய்துகொண்டே இருந்தனர். அப்போது தான் சமூகம் சார்ந்த இன்டராக்ட் கிளப்பிற்க்கான யோசனையை எங்களுக்கு உருவானது என்கிறார் ஆஷிமா ஆகாஷே, இளைஞர் இயக்குனர், RC பூனா டௌன்டவுன், RID 3131.

விரைவில், பல்வேறு பள்ளிகளைச் சேர்ந்த குழந்தைகள் ஒன்று கூட பூனா டௌன்டவுன் இன்டராக்ட் கிளப் பிறந்தது, ‘‘மாவட்டத்தின் முதல் சமூக அடிப்படையிலான இண்டராக்ட் கிளப் இதுவாகும்’’. தற்போது செயின்ட் மேரிஸ், சிம்பியோசிஸ் மற்றும் குருகுலம் ஆகிய மூன்று பள்ளிகளைச் சேர்ந்த இரண்டு சிறுவர்கள் உட்பட 24 உறுப்பினர்கள் கிளப்பில் உள்ளனர். ‘‘கோவிட் தொற்றுநோய்க்குப் பிறகும் சங்கம் நடத்தப்பட வேண்டும், அதனை கைவிட கூடாது என்பதை நாங்கள் அவர்களுக்கு தெளிவுப் படுத்தினோம்,’’ என்கிறார் ஆஷிமா.

### பசுமை காலத் திட்டம்

இண்டராக்ட் கிளப் தனது சேவைப் பயணத்தை மாவட்டத்தின் முதன்மை திட்டமான ப்ராஜெக்ட் கிரீன் பீரியட்டுடன் தொடங்கியது. இண்டராக்டர்கள் தங்கள் வயதிற்கு நிகரான ஏழை குழந்தைகளை அணுக விரும்பினர். அவர்கள் பல்வேறு யோசனைகளில் விவாதித்து, சுற்றுச்சூழலை மையமாகக் கொண்டு மாதவிடாய் சுகாதாரத்தை தேர்வு செய்தனர். ‘‘இந்த யோசனை எங்களுக்கு உற்சாகத்தை அளிக்கிறது, ஏனெனில் செயற்கை சானிட்டரி நாப்கின்கள் மற்றும் டயப்பர்கள் எவ்வாறு மக்காதவை மற்றும் சுற்றுச்சூழலுக்கு தீங்கு விளைவிக்கின்றன என்பதைப் பற்றி பள்ளியில் படித்தோம்’’ என்கிறார் இண்டராக்ட் கிளப் தலைவர் அனன்யா ஆகாஷே.

இளம் உறுப்பினர்கள் இத்திட்டத்தைப் பற்றி ஒரு நிமிட வீடியோவை உருவாக்கி, சமூக

*RC பூனா டௌன்டவுன் உறுப்பினர்களுடன் சேர்ந்து இன்டராக்டர்கள் மரக்கன்றுகளை நடுகின்றனர்.*



ஊடகங்களில் நண்பர்கள் மற்றும் அண்டை வீட்டாரிடையே பரப்பினர். பிரச்சாரத்தின் முடிவில் ரூ.1 லட்சம் வசூலித்துள்ளனர். “இந்தக் குழந்தைகள் தொடர்ந்து திட்டமிட்டு அதை பின்பற்றுவதைப் பார்ப்பது மனதுக்கு இதமாக இருந்தது” என்கிறார் ஆஷிமா.

அடுத்த கட்டம் நாப்கின்களை சேகரிப்பது. மாவட்ட ரோட்டரியன்கள் செய்தது போல் பருவப் பெண்களுக்கு துணி நாப்கின்களை விநியோகிக்க ஆஷிமா பரிந்துரைத்த போது, பல கவலைகள் தெரிவிக்கப் பட்டன. “நீங்கள் துணி நாப்கின்களை பரிந்துரைக்கிறீர்கள் என்றால், அவை சுத்தமாக கழுவப்பட வேண்டும். பிறகு நீர் சேமிப்பு என்னவாகும்? வசதி படைத்த குடும்பங்களைச் சேர்ந்த நாங்கள் நாப்கின்களை தனி இடத்தில் உலர்த்தலாம். ஆனால் சேரிகளில் வாழும் பெண்களின் நிலை என்ன? அவற்றை உலர்த்து வதற்கு அவர்கள் ஒரு தனிப்பட்ட இடத்தை எங்கே கண்டுபிடிப்பார்கள்? என்று இன்டராக்டர்கள் என்னிடம் கேட்டார்கள், எனவே நான் வேறு சில தீர்வுகளைக் கொண்டு வர வேண்டியிருந்தது.

விரிவான ஆராய்ச்சிக்குப் பிறகு, மக்கக்கூடிய துணி நாப்கின்களை உருவாக்கும் 5–6 உற்பத்தியாளர்களை அவர் அடையாளம் கண்டார், அதிலிருந்து இன்டராக்டர்கள் நவி மும்பையை சேர்ந்த 100 சத வீதம் மக்கக்கூடிய நாப்கின்களை உருவாக்கும் ஒரு உற்பத்தியாளரைத் தேர்ந்தெடுத்தனர். 100 நாட்களுக்குள், உரம் குழியில் போடும் போது அது மக்க தொடங்குகிறது, மேலும் பயன்படுத்தப்பட்ட நாப்கினை செய்தித்தாளில் சுற்றி ஈரமான குப்பையுடன் கூட கலக்கலாம்.

ஆஷிமா மற்றும் இரண்டு ரோட்டேரியன்களுடன் இணைந்து இன்டராக்டர்கள், ஒரு நகராட்சிப் பள்ளிக்குச் சென்று, பெண்களுக்கு இந்த சானிட்டரி நாப்கின்களை வழங்கி, அவர்களின் மாதவிடாய் சுழற்சியின் போது எதிர்கொள்ளும் பிரச்சனைகள் குறித்து அவர்களுடன் உரையாடினர்.

பெரியவர்களுடன் பேச பெண்கள் வெட்கப்படுவார்கள், ஆனால் எந்த தடையும் இல்லாமல் இரு குழுக்களுக்கிடையில் இலவச கலந்துரையாடலைப் பார்த்தது மகிழ்ச்சியளிக்கிறது. இது எங்களுக்கு ஒரு பெரிய கண் திறப்பாக இருந்தது.” என்று ஆஷிமா கூறுகிறார்.



*பள்ளி சிறுமிகளுக்கு சானிடரி நாப்கின்கள் வழங்கும் விழாவில்.*

இன்டராக்டர்கள் பள்ளிக் குழந்தைகளுக்கு ஆறு மாதத்திற்கு தேவையான சானிட்டரி நாப்கின்களை கொடுத்துவிட்டு திரும்பி வருவதாக உறுதியளித்து விட்டு சென்றனர். மேலும் இது போன்ற பல பள்ளிகளை சேர்க்க அவர்கள் திட்டத்தின் அளவை அதிகரிக்க விரும்புகிறார்கள் என்கிறார் அனன்யா.

மற்றொரு திட்டம், புலம்பெயர்ந்த தொழிலாளர்களின் 50–60 குழந்தை களை பராமரிக்கும் ஒரு பகல் நேர பராமரிப்பு மையத்திற்கு பொம்மைகள் மற்றும் விளையாட்டு உபகரணங்கள் வழங்குவதாகும். மூன்று பெரிய அட்டைப்பெட்டிகள் நிறைய ஆடைகள் மற்றும் விளையாட்டு பொருட்கள் சேகரிக்கப்பட்டு மையத்திற்கு வழங்கப்பட்டது.

“எங்கள் அடுத்த திட்டம் முதியோர் இல்லத்திற்காக இருக்கும், மேலும் உறுப்பினர்கள் தங்கள் தேர்வுகளில் பரபரப்பாக இருப்பதால் அடுத்த இரண்டு மாதங்களுக்கு அனைத்து நடவடிக்கைகளையும் நிறுத்தியுள்ளனர், ஆனால் அவர்கள் தொடர்ந்து ஆன்லைனில் சந்திப்பதால் விரைவில் மீண்டும் சேவைகளை தொடங்குவார்கள்.” என்று அவர் கூறுகிறார்.

### சிறப்புக் குழந்தைகளுக்கான இண்டராக்ட் கிளப்

கடந்த டிசம்பரில் RC பூனா டௌன்டவுன் நிதியுதவி அளித்த மற்றொரு சிறப்பு சங்கம் இன்டராக்ட் கிளப் ஆஃப் சுந்தர்ஜி ஸ்டார்ஸ். அதன் அனைத்து உறுப்பினர்களும் மனநலம் பாதிக்கப்பட்டவர்கள் அல்லது ADHD போன்ற சில வளர்ச்சி கோளாறுகளைக் கொண்டவர்கள், ஆனால் அவர்களுக்கு உடல் ரீதியாகச் எந்த குறைபடும் இல்லை. இந்தக் குழந்தைகள் ஏதாவது ஒரு திறமையில் சிறந்து விளங்குவதை நாம் பார்க்கலாம். ஆனால் சாதாரண குழந்தைகளைப் போல சமூகத்தில் உள்ள மக்களுடன் பழகுவது அவர்களுக்கு மிக சிரமம். அவர்களில் சிலர் தங்களின் இடங்களில் இருந்து மாற்றப்படும் போது மௌனமாகின்றனர் என்கிறார் ஆஷிமா. திட்டங்களுக்காக வெளியூர் செல்லும்போது ஊழியர்கள் அவர்களுடன் செல்கிறார்கள்.




*சாலை பாதுகாப்பு முகாமில் இன்டராக்டர்கள்.*

அவர் தனது ரோட்டரியன் குழுவுடன் இணைந்து, போக்குவரத்து விழிப்புணர்வு பிரச்சாரத்திற்காக இன்டராக்டர்களை ஈடுபடுத்தினார். “பொறுப்பாளர் வினம்ரதா, குழந்தை களுக்கு புரியும் வகையில் திட்டத்தை விளக்கினார்.” சாலை பாதுகாப்பு குறித்த வாசகங்கள் அடங்கிய பலகைகளை குழந்தைகள் ஏந்தியதோடு, ரோட்டரியர்களும், வினம்ரதாவும் அவர்களுடன் இணைந்து பரபரப்பான போக்கு வரத்து சந்திப்புக்கு சென்றனர். “ஒவ்வொரு சிவப்பு சிக்னலிலும் அவர்கள் சாலையின் மையத்திற்குச் சென்று பலகைகளை பிடித்து நிற்பார்கள். ஹெல்மெட், முகமூடி, சீட் பெல்ட் அணிந்த யாரையாவது பார்த்ததும், அவர்களிடம் சென்று, தம்ஸ் அப் கொடுத்தனர். போக்கு வரத்து விதிகளை மீறுபவர்களுக்கு தம்ஸ் டவுன் கொடுத்தனர். அவர்கள் அதைச் செய்வதைப் பார்ப்பது மிகவும் இனிமையாக இருந்தது, மேலும் இது குழந்தைகளுக்கும் ஒரு கற்றல் அனுபவமாக இருந்தது.

ஒரு நகராட்சி பூங்காவில் துப்புரவு நடவடிக்கையையும் இன்டராக்டர்கள் மேற்கொண்டனர். “நாங்கள் அவர் களுக்கு விளக்குமாறுகள், முகமூடிகள் மற்றும் பெரிய குப்பைப் பைகளை வழங்கினோம், அவர்கள் 7–8 பைகள் பிளாஸ்டிக் கழிவுகளை சேகரித்தனர்.

இன்டராக்டர்கள் ஆனந்தவன் பாதுகாக்கப்பட்ட வனப்பகுதியில் மரக்கன்றுகளை நட்டனர் மற்றும் புலம்பெயர்ந்த தொழிலாளர்களின் குழந்தைகளுக்கான மையமான சாந்துலன் பவனுக்கு ஆடைகளை விநியோகிக்கச் சென்றனர். தங்கள் பள்ளியின் உடல்பயிற்சியாளரின் உதவியுடன், அவர்கள் சில வேடிக்கை யான உடற்பயிற்சி நடவடிக்கைகளில் குழந்தைகளை ஈடுபடுத்தினர்.■

# தொழுநோய் தினத்தை முன்னிட்டு தோல் மருத்துவ முகாம்

## ரோட்டரி செய்திக் குழு




உலக தொழுநோய் தினம் மற்றும் உலக புறக்கணிக்கப்பட்ட வெப்ப மண்டல நோய்கள் தினத்தை முன்னிட்டு, RC சென்னை பாரதி, RID 3232, தேசிய தொழுநோய் கல்வித் திட்டம் மற்றும் கிரேமால்ட்ஸ் மருத்துவமனை ஆகியவற்றின் ஆதரவுடன் நகரின் புறநகர்ப் பகுதியான புழலில் உள்ள அங்கன் வாடியில் தோல் பரிசோதனை முகாமை நடத்தியது. தோல் மருத்துவர் மற்றும் சங்கத்தின் சுகாதார சேவைகள் இயக்குனர் ரோட்டேரியன் Dr ரேணுகா ராமகிருஷ்ணன், தமிழ்நாடு மருத்துவ சேவைகள் துணை இயக்குனர் Dr தர்மலிங்கம் மற்றும் கிரேமால்ட்ஸ் மருத்துவமனை இயக்குனர் Dr மரியநாதன் ஆகியோர் நோயாளிகளை பரிசோதித்து மருந்துகளை வழங்கினர். அந்த இடத்தில் கோவிட் தடுப்பூசியும் போடப்பட்டது. சுமார் 200 நோயாளிகள் தோல் நோய்களுக்காக பரிசோதிக்கப்பட்டனர், அவர்களில் ஒருவர் தொழுநோயால் பாதிக்கப்பட் டுள்ளதை அடையாளம் கண்டனர். சுமார் 40 பேர் பங்கேற்ற ஆன்லைன் கூட்டத்தில் Dr ரேணுகா தொழுநோய் குறித்து சிறப்புரை ஆற்றினார்.■

# வாழ்க்கையை மாற்ற (ஒயின்) பரிமாற்றம்



ஜெர்மனியின் ஹாம்பர்க்-கனெக்ட் மற்றும் தென்னாப்பிரிக்காவின் கிரேட்டர் கேப் டவுனின் ரோட்டரி இ-கிளப்கள் இந்த கருப்பொருளைச் சுற்றி சரியான ஒரு நிதி திரட்டலைத் திட்டமிட்டுள்ளன. அதன் இறுதி முடிவு, ஆன்லைன் ஒயின் ருசிப் பார்ப்பு நிதி திரட்டல் நிகழ்ச்சி. அதில் வாழ்க்கையை மாற்ற ஒயின் வழங்கப்பட்டது.

ரோட்டரி சங்கங்கள், தன்னார்வ தொண்டு நிறுவனங்கள், வணிகங்கள் மற்றும் அவர்களது நண்பர்கள் ஜெர்மனி, நமீபியா மற்றும் தென்னாப்பிரிக்காவிலிருந்து அந்த ருசி அனுபவத்திற்காக ஒன்றாக கூடினர். ஒரே நேரத்தில் ஒரே ஒயின்னை அதன் தயாரிப்பாளரின் பேச்சைக் கேட்டு விருந்தினர்கள் சுவைத்தனர். இதற்கு கவனமான திட்டமிடல் தேவைப்பட்டது, ஆனால் அதன் விளைவு அற்புதமாக அமைந்தது.

விருந்தினர்கள் எதிர்காலத்தில் நிபுணத்துவம் வாய்ந்த ஒயின் அருந்துபவர்களாக மாற உதவுவதற்காக, மசாலாப் பொருட்கள் மற்றும் சுவைக் குறிப்புகள் அடங்கிய அழகான ஒயின் ருசிக்கும் பெட்டிகள் அனுப்பப்பட்டன. ஒயின் தயாரிப்பாளர் ருசிக்கும் செயல்முறையை அவர்களுக்கு கற்றுக்கொடுத்தனர். அதில் மதுவைப் பருகுவதற்கு முன்பு மசாலாப் பொருட்களை வாசனை பிடித்தல் மற்றும் சுவைத்தல், பின்னர் புலன்கள் மற்றும் ஒயின் குறிப்புகளை ஒப்பிடுதல் ஆகியவை அடங்கும்.

ருசித்தல் வெறும் மெய்நிகராக மட்டும் நடைபெறவில்லை. ஒவ்வொரு மெய்நிகர் விருந்தினர்களும் ருசி அனுபவத்தைப் பகிர்ந்து கொள்ள ஒரு சிறிய குழுவினரை தங்கள் வீட்டில் அழைத்திருந்தனர்.

தென்னாப்பிரிக்காவின் டர்பன்வில்லில் உள்ள நிடிடா ஒயின் பாதாள அறை, பண்ணை உணவகம் தயாரித்த பிரத்தியேகமான உணவை அருந்த மற்றும் ஒயின் ருசி பார்க்க அழைக்கப்பட்ட விருந்தினர்களால் உற்சாகமாக காட்சியளித்தது. இந்த விருந்தினர்களில் 9350 மாவட்ட கவர்னர் இயன் ராபர்ட்சன் மற்றும் அவரது மனைவி பார்பரா, முன்னால் மாவட்ட ஆளுநர் கார்ல்-ஹெய்ன்ஸ் டியூஸ்பெர்க் மற்றும் அவரது மனைவி கரோலின், பல ரோட்டேரியன்கள் மற்றும் வருங்கால ரோட்டரியன்கள் பங்கேற்றனர்.

நிகழ்ச்சியின் போது, ஆச்சரிய மூட்டும் வகையில் 2020–21 ரோட்டரி தலைவர் ஹோல்கர் நாக் ஜெர்மனியிலிருந்து கலந்து கொண்டு, ஒரு சிறப்பு செய்தியைப் பகிர்ந்தார். மேலும் மாலை முழுவதும் நிகழ்ச்சி ஆரவாரங்களில் பங்கேற்றார்.

தென்னாப்பிரிக்காவின் கோர்டன்ஸ் பே, டெம்பரன்ஸ் டவுனில் பராமரிப்பு மற்றும் புதுப்பித்தல்கள் தேவைப்பட்ட ஆரம்பகால குழந்தைப் பருவ மேம்பாட்டு மையத்திற்காக சுமார் 2,600 டாலர் திரட்டப்பட்டது. ரோட்ராக்ட் கிளப் ஆஃப் ஃபால்ஸ் பேயின் உறுப்பினர்கள் இந்த திட்டத்தில் பெரிதும் ஈடுபட்டு அதில் திறம்பட செயல்பட்டனர்.

©ரோட்டரி

# கிராமப்புற பெண்களுக்கான மாதவிடாய் சுகாதாரத்தில் கவனம் செலுத்தும் PDG

ரஷீதா பகத்

நான்கு ஆண்டுகளுக்கு முன்பு, RID 3132ன் PDG விஜய் ரதி, மகாராஷ்டிர மாநிலம், லத்தூருக்கு பயணம் செய்தார். அப்போது கிராமப்புற பகுதிகளில் மாதவிடாய் சுகாதாரம் கடைப்பிடிக்கப்படுவது பற்றி தெரிந்துகொள்வதில் ஆர்வமாக இருந்தார்.

எங்களுக்கு சொந்தமான நிலங்கள் லத்தூரில் இருந்தன. நான் எனது மகள் மற்றும் பேத்தியுடன் அடிக்கடி அங்கு பயணம் செய்வேன் இந்த விஷயம் பற்றி ஆணாகிய நான் பெண்களிடம் பேசுவதற்கு கூச்சமாக இருந்தது. எனவே எனது மகள் மற்றும் பேத்தியிடம் மாதவிடாய் காலத்தில் கிராமப்புறங்களில் பள்ளி மற்றும் கல்லூரி செல்லும் பெண்கள் சுகாதாரத்தை எப்படி பேணுகிறார்கள் என்று தெரிந்துகொண்டு வருமாறு கூறினேன்.

நாடு முன்னேறியுள்ள இன்றைய நிலையிலும் பல பெண்கள் சானிடரி பேடுகளை பயன்படுத்துவதில்லை. அவர்கள் அந்த நாட்களைப் போல் கந்தல் துணிகள், சாம்பல்கள், மரத்தூள், மண் போன்றவற்றை பயன்படுத்தி வருவது கண்டு அதிர்ச்சியடைந்தேன் என்கிறார் ரதி.

கடந்த 52 ஆண்டுகளாக ரோட்டரி உறுப்பினராக இருக்கும் விஜய் ரதி, உடலியல் சுகாதாரம் தொடர்பான திட்டங்களில் ஆர்வமுள்ளவர் என்பதால் அவர்களின் இந்த நிலையை மாற்ற முடிவு செய்தார். கிராமப்புற பெண்களில் பலர் மாதவிடாய் காலத்தில் சுகாதாரத்தை முழுமையாக பேண முடியாமல் இருப்பதற்கான காரணங்கள் வறுமை, அறியாமை, பழங்கால பழக்கத்தை கைவிட முடியாமை மற்றும் சுகாதாரக் கேடுகள் பற்றி சரிவர தெரிந்து கொள்ளாதது ஆகியவைதான் என்பதை நான் அறிவேன் என்று ரோட்டரி செய்தி இதழுக்கு அளித்த பேட்டியில் நினைவுகூர்ந்தார்.

இந்த பெண்களுக்கு உதவ வேண்டும் என்ற எண்ணம் அவரது மனதை உறுத்திக் கொண்டே இருந்தது. கூட்டுக் குடும்பமாக இருந்ததால் சானிடரி பேடுகள் தயாரிக்கும் திட்டத்தைச் செயல்படுத்துவது குறித்து குடும்பத்தாருடன் விவாதித்தார். குடும்பத்துக்கு கொஞ்சம் நிலம் இருந்ததால், அதில் 2.5 ஏக்கர் நிலத்தை சானிடரி பேடுகள் தயாரிக்கும் பிரிவு ஏற்படுத்துவதற்காக நன்கொடையாக வழங்கினார்.

குடும்பத்தில் உள்ள அனைவரும் ஒருமித்து எடுத்த முடிவால் நிலம் தானமாக வழங்கப்பட்டது. அதன் மதிப்பு ரூ.50 லட்சம் இருக்கும். இதையடுத்து ரதி, தனது திட்டத்தைச் செயல்படுத்துவதில் ஆர்வம் காட்டினார். தான் நிர்வாகக் குழு உறுப்பினராக இருக்கும் பார்வையற்றோருக்கான தேசிய சங்கத்திடம் திட்ட யோசனைகளை முன்வைத்தார். நிர்வாகக் குழுவும் ரதி நன்கொடையாக அளித்த இடத்தில் சானிடரி பேடுகள் தயாரிக்க 4,000 சதுர அடிபரப்பில் ஒரு கூடாரம்



**இடதிலிருந்து:** *DG ஓம்பிரகாஷ் மோட்டிபாவ்லே, லட்டூர் ஜில்லா பரிஷத் அதிகாரி அபிநவ் கோயல் மற்றும் PDG விஜய் ரதி எரியூட்டிகளுடன்.*

அமைக்க நிதியுதவி அளிக்க முன்வந்தது. இதைத் தொடர்ந்து பார்வையற்றோர் சிலர் மற்றும் கிராமப்புற மகளிருக்கு சானிடரி பேடுகள் தயாரிப்பது பற்றி பயிற்சி அளிக்கப்பட்டது. பின்னர் அதற்கான இயந்திரங்கள் உள்ளிட்ட கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்திய உடன் தயாரிப்புகள் தொடங்கப்பட்டன.

உள்ளூர் மக்கள் 7 பேருக்கு இதன் மூலம் வேலைவாய்ப்பு கிடைத்தது. இதுவரை 1.5 லட்சம் சானிடரி பேடுகள் உற்பத்தி செய்யப்பட்டுள்ளன. அவை தேவைப்படும் பெண்களுக்கு இலவசமாக வழங்கப்பட்டன. லத்தூர் ஹொரைஸான் ரோட்டரி சங்க உறுப்பினர்களும் இத்திட்டத்தில் தங்களை இணைத்துக் கொண்டனர். அது மட்டுமல்லாமல் மாதவிடாய் சுகாதார மேம்பாட்டின் அவசியம் குறித்தும் பெண்களிடம் விழிப் புணர்வை ஏற்படுத்தி வருகின்றனர்.

இந்த திட்டத்தில் தன்னார்வலராக தம்மை ஈடுபடுத்திக் கொண்டுள்ள முன்னாள் ரோட்டேரியனான மன்மோகன் சர்தா, உள்ளூர் ரோட்டேரியன்கள் இத்திட்டத்தில் ஈடுபாடு காட்டியதால் நாங்கள் பெண்களுக்கு சானிடரி பேடுகளை இலவசமாக வழங்கி வந்தோம். மாதவிடாய் காலத்தில் சானிடரி பேடுகளை பயன்படுத்துவதன் அவசியத்தை ரோட்டேரியன்கள், பெண்களிடம் எடுத்துக் கூறி ஊக்கப்படுத்தினர். மெல்ல மெல்ல இப்பகுதியில் பெண்கள் சானிடரி பேடுகளைப் பயன்படுத்துவது அதிகரித்து வருகிறது என்றார்.



*பள்ளி ஒன்றில் சானிடரி நாப்கின் மற்றும் எரியூட்டியை RC லட்டூர் மிட்-டவுன் தலைவர் சதீஷ் கடெல், திட்ட தலைவர் விஷால் அயச்சித் அளிக்கின்றனர்.*

### பயன்படுத்திய பேடுகளை என்ன செய்வது?

சானிடரி பேடுகள் உற்பத்தித் தொடங்கியவுடன், அடுத்த கட்டமாக உபயோகப்படுத்தப்பட்ட சானிடரி பேடுகளை என்ன செய்வது என்ற கேள்வி எழுந்தது. ஏனெனில் பெரும்பாலும் பயன்படுத்தப்பட்ட சானிடரி பேடுகள் கழிவறைகளில் போடப்படுவதால் வடிகால்கள் அடைத்துக் கொள்ளும் அபாயம் உள்ளது. மேலும் அவை குப்பைத் தொட்டிகளில் போடப்படுகின்றன அல்லது திறந்தவெளியில் வீசப்படுகின்றன. இதனால் சுற்றுச்சூழல் பாதிக்கப்படும்.

வழக்கமான எரியூட்டிகள் (incinerators) சந்தையில் கிடைத் தாலும் அவை மின்சாரத்தில் தான் இங்குகின்றன. மின் விநியோகம் நீண்ட நேரம் தடை படுவதால் இவற்றின் செயல்பாடுகளும் பாதிக்கப் படுகின்றன என்று விளக்கினார் ரதி.



### மாற்று ஏற்பாடுகள்

எரியூட்டிகளை இயக்க மின்சாரம் தவிர மாற்று ஏற்பாடு என்ன என்று அவர் சிந்திக்கத் தொடங்கினார். எனது மகன் ஒரு என்ஜினீயர் என்பதால் பேப்ரிகேஷன் தொழில் செய்து

வருகிறார். அதுமட்டுமல்ல லத்தூரில் காகித ஆலை நடத்தி வருகிறார். எனவே நண்பர்களுடன் சேர்ந்து மின்சாரம் தவிர்த்து வேறு ஆற்றல் சக்தியில் செயல்படும் ஒரு எரியூட்டியை உருவாக்கும் பணியில் ஈடுபட்டார்.

விறகு, திரவ எரிவாயு (எல்பிஜி) மற்றும் வேளாண் கழிவுகளில் (கிராமப்புறங்களில் இவை அதிகம் கிடைக்கும்) வேலை செய்யும் புதிய மாடல் எரியூட்டியை அவர்கள் தயாரித்தனர். மின்சாரம் மூலம் இயங்கும் எரியூட்டிகளின் கொள்திறன் எங்கள் யூனிட்டில் மூன்றில் ஒரு பங்குதான். விலையும் அதிகம். (அதாவது ஒரு எரியூட்டியின் விலை ரூ.5,000 இருக்கும். இது நாங்கள் தயாரித்துள்ளதைவிட ஐந்து மடங்கு அதிகம்). மேலும் நாங்கள் தயாரித்த எரியூட்டியைவிட மின்சார எரியூட்டியின் செயல்பாட்டு திறன், உத்தரவாதமும் குறைவுதான் என்று பெருமையுடன் குறிப்பிட்டார் ரதி.

இந்த திட்டத்தின் கீழ் இதுவரை 205 எரியூட்டிகள் தயாரிக்கப்பட்டு RID 3132 மூலம், பள்ளிகள், மகளிர் அமைப்புகள், தொண்டு நிறுவனங்கள், கிராமப் பஞ்சாயத்துக்கள் உள்ளிட்டவைகளுக்கு இலவசமாக வழங்கப்பட்டுள்ளன. இதற்கு பணம் எவ்வாறு திரட்டப்பட்டது என்றும் அவர் கூறினார். எங்கள் மாவட்ட ஆளுநராக சுஹாஸ் வைத்யா இருந்தபோது எங்கள் திட்டத்தால் ஈர்க்கப்பட்டு மாவட்ட தொகுப்பு நிதியிலிருந்து 44 எரியூட்டிகளுக்கான நிதியை வழங்கினார். AKS உறுப்பினரும், சாங்லி ரோட்டரி (RID 3170) சங்க உறுப்பினருமான கிஷோர் லுல்லா ரூ.1 லட்சம் நன்கொடையாக வழங்கினார். RPG அறக்கட்டளை ரூ.7 லட்சம் நிதியுதவி வழங்கியது. மும்பையில் உள்ள வேறு சில நிறுவனங்களும் இத்திட்டத்திற்கு நன்கொடைகள் வழங்கின என்றார் அவர்.



RC லட்டூர் ஹொரைஸன் ரோட்டரியினர் கல்லூரி மாணவிகளுக்கு சானிடரி நாப்கின் அளிக்கின்றனர்.

சர்வதேச மானிய உதவியை ஏன் நாடவில்லை என்று கேட்டபோது, நாங்கள் அதற்கான பெரு முயற்சி எடுத்தோம். இதற்காக வெளிநாட்டு கூட்டாளர் ஒருவரையும் சந்தித்துப் பேசினோம். ஆனால், எங்கள் கோரிக்கை நிராகரிக்கப்பட்டது. ஒருவேளை தொழில்நுட்ப சிக்கல்கள் இதற்கு காரணமாக இருந்திருக்கலாம் என்றார்.

ஆனாலும், நாங்கள் மனம் தளர்ந்து விடவில்லை. இத்திட்டத்திற்கான நிதியைத் திரட்ட ரோட்டேரியன்கள் கடுமையாக உழைத்தனர். கடந்த பிப்ரவரியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் சானிடரி பேடு மற்றும் எரியூட்டிகள் பல்வேறு நிறுவனங்கள், அமைப்புகளுக்கு விநியோகிக்கப்பட்டன.

மகாராஷ்டிர மாநில கல்வித்துறை ஆணையர் விஷால் சோலங்கி, 3132ன் மாவட்ட ஆளுநர் ஓம்பிரகாஷ் மோதிபவாலே, RPG அறக்கட்டளை மற்றும் நன்கொடை அளித்த நிறுவனங்களின் பிரதிநிதிகள், ஜில்லா பரிஷத் அதிகாரிகள் மற்றும் உள்ளூர் பிரமுகர்கள், ரோட்டேரியன்கள் இந்நிகழ்ச்சியில் பங்கேற்றனர். தங்களது புதிய மாடல் எரியூட்டிக்கு காப்புரிமை கேட்டு விண்ணப்பித்துள்ளதாகவும் விரைவில் அதற்கான உத்தரவு வரும் என்று எதிர்பார்ப்பதாகவும் ரதி மேலும் கூறினார்.

இந்த திட்டத்தை செயல்படுத்த விரும்பும் பிற ரோட்டரி சங்கங்கள் PDG ரதியை 94042 73778 என்ற எண்ணில் தொடர்பு கொள்ளலாம்.■



லட்டூரில் PDG ரதி நிறுவியுள்ள சானிடரி நாப்கின் ஆலை.

# இந்தியா-பாகிஸ்தான் எல்லையில் ரோட்டரி குளோபல் அமைதி பூங்கா அமைப்பு

ரோட்டரி செய்திக்குழு

RI இயக்குனர் மகேஷ் கோட்பாகி பாகிஸ்தானின் நரோவல் மாவட்டத்தில் உள்ள கர்தார்பூரில் "ரோட்டரி குளோபல் அமைதி பூங்கா" அமைக்கபட உள்ளதாக அறிவித்துள்ளார். அவர், தனது மனைவி அமிதா மற்றும் RID 3070ன் ரோட்டேரியன்களுடன், கர்தார்பூர் சாஹிப் குருத்வாராவுக்குச் சென்றார். அங்கே RID 3271, பாகிஸ்தானின் RIDE ஃபைஸ் கிட்வாய் அவர்கள், 3271 மற்றும் 3272 மாவட்டங்களைச் சேர்ந்த 350க்கும் மேற்பட்ட ரோட்டேரியன்கள் முன்னிலையில் அவர்களுக்கு உற்சாக வரவேற்பு அளித்தார். 25 உறுப்பினர்கள் கொண்ட பாகிஸ்தானின் RID 3272, RC சக்வாலுக்கு (RC லாகூர் கேரிஸன் நிதியுதவியுடன்) தற்காலிக சாசனம் வழங்கப்பட்டது இந்த வருகையை மறக்கமுடியாத அனுபவமாக மாற்றியது. புதிய சங்கம், இந்திய ரோட்டரி சங்கங்களுடன் இணைந்து எழுத்தறிவு மற்றும் இதய அறுவை சிகிச்சை தொடர்பான கூட்டு திட்டங்களை செயல்படுத்த திட்டமிட்டுள்ளது.■



*கர்தார்பூர் சாஹிப்பில் RI இயக்குனர் மகேஷ் கோட்பாகி, RIDE ஃபைஸ் கித்வாய் ஆகியோருடன் இந்தியா மற்றும் பாகிஸ்தானைச் சேர்ந்த ரோட்டேரியன்கள்.*

# RI தெற்காசிய அலுவலகத்தின் செய்தி

இந்தியக் கொடையாளர்களுடைய பங்களிப்புகளை TRF சார்பாக ரோட்டரி அறக்கட்டளை (இந்தியா) பெறுகிறது. பங்களிப்புகளைக் காசோலை/வங்கி வரவு வழியாக RI தெற்கு ஆசிய அலுவலகத்துக்கு அனுப்பி வைக்கலாம். இணையப் பரிமாற்றங்களை www.rotary.org வழியாகக் கடன்/பற்று அட்டை அல்லது இணைய வங்கிச் சேவையைப் பயன்படுத்திச் செய்யலாம், RF (I)க்கு வழங்கப்படும் பங்களிப்புகள் அனைத்தும் 1961 வருமான வரிச் சட்டத்தின் 80G பிரிவின்கீழ் 50% கழித்தலுக்குத் தகுதி பெறும்.

### பங்களிப்புகளை மறு வகைப்படுத்துதல்

இந்த ஆண்டுக்கான மறு வகைப்படுத்தல் கோரிக்கைகள் பரிசு பெறப்பட்ட நாளிலிருந்து 60 நாட்களுக் குள்ளும் அதே ரோட்டரி ஆண்டுக்குள்ளும் பெறப்பட்டால் ஏற்றுக்கொள்ளப்படும், பங்களிப்புகளை எந்தவொரு ரோட்டரி அறக்கட்டளை நிதி, திட்டம் அல்லது நிகழ்ச்சியிலிருந்தும் வேறு எந்த நிதி, திட்டம் அல்லது நிகழ்ச்சிக்கும் மறு வகைப்பாடு திருத்தம் செய்கிற முந்தைய ஆண்டுப் பரிமாற்றக் கோரிக்கைகள் அந்த நிதி ஆண்டு நிறைவுக்குப்பின் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

### மிகப் பெரிய கொடையாளர் அங்கீகாரம்

- தனி நபர்கள் தங்களுடைய தனிப்பட்ட பங்களிப்புகளின் அடிப்படையில் மிகப் பெரிய கொடையாளர்களாக அங்கீகரிக்கப்படுகிறார்கள். பிற கொடையாளர்கள் அல்லது ஒரு மாவட்டம், பிற அமைப்பு அல்லது பெருநிறுவனத்தின் பகுதியளவு அல்லது முழு இணை செய்யப்பட்ட பங்களிப்பின் ஆதரவு அடிப்படையில் மிகப் பெரிய கொடையாளர் நிலையை ஒரு தனி நபருக்கு வழங்க இயலாது.
- ஒரு பங்களிப்பு குடும்பத்தால் கட்டுப்படுத்தப்படும் ஒரு நிறுவனம் அல்லது குடும்ப அறக்கட்டளையால் செய்யப்பட்டிருந்தால், அந்த அறக்கட்டளையின் உரிமையாளர் அல்லது அறங்காவலருக்கு உண்மை அங்கீகாரம் வழங்கப்படவேண்டும் என்று அவர்கள் எழுத்தில் அலுவல்பூர்வமாகத் தெரிவிக்கலாம்.
- ஒரு தனி நபருடைய மிகப் பெரிய கொடையாளர் அங்கீகாரத்தில் துணைவருடைய பங்களிப்பை மட்டும் தான் இணைக்கலாம்.■

ADVT.

# Rotary RID 3120 MEMBERSHIP ACHIEVERS

## RID 3120 Memberhip Increase Star Performers

| Club | Club ID | Increase Member | Club President | Club Secreatry |
|---|---|---|---|---|
| RC Gorakhpur Mid Town | 60168 | 65 | Rtn. Raj Kumar Bathwal | Rtn. Neelmani Singhania |
| RC Varanasi Central | 23498 | 27 | Rtn. Anil Jajodia | Rtn. Jeevan Khanna |
| RC Lakhimpur (Kheri) | 15443 | 24 | Rtn. Wasif Khan | Rtn. Chandra Shekhar Singh |

## RI President EOBO Challenge Achievers

| Club | Club ID | Club President | Club Secreatry |
|---|---|---|---|
| RC Gorakhpur Mid Town | 60168 | Rtn. Raj Kumar Bathwal | Rtn. Neelmani Singhania |
| RC Varanasi Elite | 63134 | Rtn. Piyush Agrawal | Rtn. Amar Agrawal |

## Paul Harris Membership Increase Challenge Achievers

| Club | Club ID | Increase Member | Club President | Club Secreatry |
|---|---|---|---|---|
| RC Gorakhpur Yugal | 87978 | 21 | Rtn. Anurag Agrawal | Rtn. Rakesh Agrawal |
| RC Prayagraj Platinum | 223074 | 12 | Rtn. Ritesh Singh | Rtn. Shashank Jain |
| RC Varanasi East | 26797 | 8 | Rtn. Prabhakar Jaiswal | Rtn. Raju Rai |

## 100% Foundation Giving Club

**US $ 25 Every Member (Club Average Giving US $ 100 per Member)**

| Club | Club ID | Club President | Club Secreatry |
|---|---|---|---|
| RC Greater Lucknow | 31224 | Rtn. Amit Kumar | Rtn. Sumeet Agrawal |
| RC Mirzapur Elite | 89174 | Rtn. Sanjay Katare | Rtn. Ravi Kumar Jain |

## 100% EREY Club

**(US $ 25 Every Member)**

| Club | Club ID | Club President | Club Secreatry |
|---|---|---|---|
| RC Gorakhpur Mid Town | 60168 | Rtn. Raj Kumar Bathwal | Rtn. Neelmani Singhania |
| RC Pride Mau | 223164 | Rtn. Sushil Agrawal | Rtn. Jitendra Kumar Rakhaulia |
| RC Prayagraj Platinum | 223074 | Rtn. Ritesh Singh | Rtn. Shashank Jain |

Data updated upto 10-Apr-2022 • Creative by - **Rtn. Amit Ahuja** (District Secretary - Publications)

ADVT.

# Rotary RID 3120 TRF Achievements

## Highest Donors



**DGND Paritosh Bajaj**
Rotary ID : 5696557
US $10001.82
RC Mirzapur Elite (89174)




**AG Ashok Kumar Gupta**
Rotary ID : 5370513
US $ 8963.70
RC Greater Lucknow (31224)



**Rtn. Jyoti Bajaj**
Rotary ID : 8188044
US $ 5000.00
RC Mirzapur Elite (89174)



**DGN Sunil Bansal**
Rotary ID : 8750531
US $ 2333.33
RC Varanasi Greater (62374)




**Rtn. Vikram Jain**
Rotary ID :6884750
US $ 3466.67
RC Mirzapur Elite (89174)

## Paul Harris Society Member

### RC Greater Lucknow (31224)



**DG Samar Raj Garg**
Rotary ID : 3481845
US $1000.00



**Rtn. Prachi Garg**
Rotary ID : 8404544
US $1960.00



**Rtn. Ravi Kumar Sadh**
Rotary ID : 5794578
US $1000.00



**AG Ashok Kumar Gupta**
Rotary ID : 5370513
US $1000.00



**Rtn. I.D. Jaiman**
Rotary ID : 2469167
US $1000.00



**Rtn. Dheeraj Kr. Jain**
Rotary ID : 5794759
US $1000.00

### RC Mirzapur Elite (89174)



**Rtn. Anurag Tripathi**
Rotary ID : 8399330
US $ 1000.00



**DGND Paritosh Bajaj**
Rotary ID : 5696557
US $1000.00



**AG CA Shailendra Kr. Katare**
Rotary ID : 8078366
US $1000.00



**Rtn. Sanjay Katare**
Rotary ID : 8290796
US $1000.00



**Rtn. Jyoti Bajaj**
Rotary ID : 8188044
US $1960.00



**Rtn. Vikram Jain**
Rotary ID : 6884750
US $1000.00

### RC Mirzapur (15451)



**Rtn. Ashish Goenka**
Rotary ID : 6406267
US $1000.00



**Rtn. Mukesh Agrawal**
Rotary ID : 5722685
US $1000.00



**Rtn. Chandra Prakash Gupta**
Rotary ID : 2024018
US $1000.00



**Rtn. Neeraj Agrawal**
Rotary ID : 6406268
US $1000.00

### RC Varanasi Down Town (66236)



**AG Parashant Nagar**
Rotary ID : 8682364
US $1000.00

### RC Allahabad Mid-Town (15407)



**PDG Pradeep Mukherjee**
Rotary ID : 208175
US $1000.00

### RC Varanasi Greater (62374)



**DGN Sunil Bansal**
Rotary ID : 8750531
US $1960.00



**Rtn. Manishi Bansal**
Rotary ID : 10133480
US $1000.00

## Paul Harris Fellow

| | | |
|---|---|---|
| **RC Allahabad Royals (90070)** | | |
| AG Poonam Gulati | ID- 8936695 | US $ 500.00 |
| **RC Lakhimpur (Kheri) (15443)** | | |
| PDG Ajai Kumar Agha | ID- 2320384 | US $ 500.00 |
| Rtn. Amarjeet Singh Saluja | ID- 5662035 | US $ 500.00 |
| Rtn. Chandra Shekhar Singh | ID- 8524776 | US $ 500.00 |
| Rtn. Hukum Chand Agarwal | ID- 5662052 | US $ 500.00 |
| Rtn. Pawan Kapoor | ID- 11044130 | US $ 500.00 |
| Rtn. Sandeep Agarwal | ID- 8720673 | US $ 500.00 |
| Rtn. Sandeep Gupta | ID- 6878878 | US $ 500.00 |
| Rtn. Wasif Khan | ID- 6878874 | US $ 500.00 |
| **RC Prayagraj Platinum (223074)** | | |
| Rtn. Shashank Jain | ID- 9551006 | US $ 500.00 |
| **RC Pride Mau (223164)** | | |
| Rtn. Dr. Ritesh Kumar Agarwal | ID- 8774878 | US $ 500.00 |
| **RC Varanasi Central (23498)** | | |
| Rtn. Pradeep Agrawal | ID- 1137803 | US $ 500.00 |
| **RC Varanasi Vrinda (80791)** | | |
| AG Rachna Jain | ID- 9219487 | US $ 500.00 |

| | | |
|---|---|---|
| **RC Mirzapur (15451)** | | |
| Rtn. Ashutosh Agrawal | ID- 8068282 | US $ 500.00 |
| Rtn. Manish Sarraf | ID- 6288017 | US $ 500.00 |
| Rtn. Shashank Tandon | ID- 6814916 | US $ 500.00 |
| Rtn. Sumit Agarwal | ID- 9937938 | US $ 500.00 |
| **RC Mirzapur Elite (89174)** | | |
| Rtn. Meena Katare | ID- 10235844 | US $ 500.00 |
| Rtn. Ravi Kumar Jain | ID- 9472381 | US $ 500.00 |
| Rtn. Dr. Sanjay Musaddi | ID- 5179332 | US $ 500.00 |
| **RC Sultanpur (15474)** | | |
| Rtn. Dr Pooja Shukla | ID- 11269791 | US $ 500.00 |
| Rtn. Nimendra Goyal | ID- 10228748 | US $ 500.00 |
| Rtn. Pramod Malhotra | ID- 9769728 | US $ 500.00 |
| Rtn. Pratibha Singh | ID- 11037861 | US $ 500.00 |
| **RC Vindhyachal (51347)** | | |
| Rtn. Mahabir Prasad Sethia | ID- 8953794 | US $ 500.00 |
| Rtn. Prateek Agrawal | ID- 10876040 | US $ 500.00 |

Data updated upto 10-Apr-2022 • **Full year update in ROTARY NEWS September 2022 issue**



# AGEக்களுக்கு சொகுசுக் கப்பலில் பயிலரங்கம் RID 3211ன் புதுமையான முயற்சி

ரஷீதா பகத்



DG K ஸ்ரீனிவாசன், பீனா மற்றும் பாபுமோன் கப்பலில் பிற PDGக்கள் முன்னிலையில் கேக் வெட்டுகின்றனர்.




AGEக்களுடன் DGE பாபுமோன் மற்றும் அவர் மனைவி பீனா.

கோவிட் தொற்று முடிவுக்கு வருவது மற்றும் ரோட்டரியின் 117-வது ஆண்டை கொண்டாடும் வகையில், உதவி ஆளுநர்களுக்கான பயிலரங்கை நடுக்கடலில் கப்பலில் பிப். 23 முதல் 26 வரை கொண்டாட RID 3211 மாவட்டத்தின் உள்வரும் ஆளுநர் முடிவு செய்தார், அதற்கு சாகரா மதனம் என பெயரிடப்பட்டது. கார்டிலியா என்னும் சொகுசு கப்பலில் மாவட்ட ஆளுநர் ஸ்ரீனிவாசன் தலைமையில், DGE K பாபுமோன், அவரது மனைவி பீனா, மாவட்ட பயிற்சியாளர் PDG K P ராமச்சந்திரன் நாயர், DGN சுமித்ரன், DSGE விஜயலெட்சுமி நாயர் மற்றும் மாவட்ட அதிகாரிகள் மற்றும் தேர்ந்தெடுக்கப்பட்ட 36 உதவி ஆளுநர்கள் பங்கேற்றனர்.

ரோட்டரியின் ஆண்டு விழாவை யொட்டி தயாரிக்கப்பட்ட பெரிய அளவிலான கேக், கப்பல் தளத்திற்கு கப்பல் குழுவினரால் கொண்டு வரப்பட்டது. அந்த கப்பல் வண்ண வண்ண பலூன்கள், தோரணங்களால் அலங்கரிக்கப்பட்டிருந்தது. ஆழ்கடலில் அந்த சொகுசு கப்பல் கொச்சியிலிருந்து லட்சத்தீவு வழியாக மும்பைக்கு பயணமானது. மாவட்ட ஆளுநர் மற்றும் உள்வரும் மாவட்ட ஆளுநர் இருவரும் இணைந்து கேக்கை வெட்டினர். இதைத் தொடர்ந்து ரோட்டரியின் 117வது ஆண்டு கொண்டாட்டத்துக்கு வாழ்த்துக்கள் என ரோட்டேரியன்கள் பலத்த கோஷமிட்டனர். அந்த கோஷம் அரபிக்கடலில் தெறிக்கும் அலைகளில் எதிரொலித்தது.

இந்த நிகழ்ச்சியில் வேடிக்கையும் சிரிப்பும் கலந்திருந்தாலும் கற்றலும் இடம்பெற்றிருந்தது. இந்தியா முழுவதும் சுமார் ஆயிரம் பேர் கப்பலில் இருந்தனர். இது தவிர துறைமுகங்களைச் சேர்ந்த குழு உறுப்பினர்கள் 600 பேரும் பங்கேற்றனர். எங்கள் கொண்டாட்டங்களும், தோழர்களின் செயல்பாடுகளும் அவர்களின் கவனத்தை ஈர்த்தது. அவர்களில் பலர் ரோட்டரி அமைப்பு, அதன் சேவைகள் பற்றி தெரிந்துகொள்ள ஆர்வமாக இருந்தனர். சிலர் தங்கள் நகரங்களில் ரோட்டரி அமைப்பு செயல்படுகிறதா என்று தெரிந்துகொள்ள முற்பட்டனர். ரோட்டரியில் சேரும் ஆர்வத்தையும் வெளியிட்டனர் என்றார் DGE.

ரோட்டரி குழுமம் மிகப்பெரியது மட்டுமல்ல, திறம்படவும் செயல்பட்டு வருகிறது. இதில் சுமார் 360 பேர் இதில் இணைந்தனர். சொகுசுக் கப்பல் லட்சத்தீவை அடைந்ததும் உதவி ஆளுநர்கள் மட்டும் பயிற்சிக்காக கப்பலிலேயே இருந்தனர். அவர்களின் மனைவிமார்கள் மற்றும் குழந்தைகள் கரைக்குச் சென்று நீர் விளையாட்டு உள்ளிட்ட விளையாட்டுகளில் ஈடுபட்டனர்.

மும்பைக்கு சொகுசுக் கப்பல் சென்றதும் ரோட்டேரியன்களும் அவர்களின் குடும்பத்தினரும் மும்பையில் ஒருநாள் மெட்ரோ பயணம் செய்து பின்னர் விமானம் மூலம் கொச்சிக்குத் திரும்பினர். உள்வரும் உதவி ஆளுநர்கள் இந்த மூன்று நாள் பயிற்சிகள் திருப்திகரமாக இருந்ததாகக் குறிப்பிட்டனர். பயிற்சியில் பங்கேற்றவர்களுக்கு RI இயக்குநர் A S வெங்கடேஷ் கையொப்பத்துடன் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன என்றார் DGE.■

# பஞ்சாப் பெண்களுக்கு ஃபூல்காரி கைவினை பயிற்சி அளிக்கிறது RID 3090

**கிரண் ஜெஹரா**

பட்டியாலா அருகில் உள்ள கெரா கஜ்ஜு கிராமத்தில் RID 3090 மாதவ் ஸ்டெல்கோ-வுடன் இணைந்து, வருவாய் பெறவேண்டிய கட்டாயத் தேவையில் உள்ள பெண்களுக்கான தொழில் சார்ந்த பயிற்சி மையம் ஒன்றை அமைத்துள்ளது. அங்கு ஃபூல்காரி (மலர்க் கைவினை) பூத்தையல் கற்பதற்காக வருகிற மற்ற பெண்களையெல்லாம் விட சிந்தர் கௌர் சற்று கூடுதல் அதிர்ஷ்டம் பெற்றவர். என் கணவர் என்னை ஆதரிக்கிறார், நான் ஃபூல்காரி பூத்தையல் கற்பதற்காக இங்கு வரும்போது குழந்தைகளைக் கவனித்துக்கொள்கிறார். என் வகுப்பில் பல பெண்கள் இல்ல வன்முறையைச் சந்திக்கிறார்கள், தவறாகப் பயன்படுத்தப்படுகிறார்கள். அவர்களோடு ஒப்பிடும்போது என் வாழ்க்கை எவ்வளவோ பரவாயில்லை என்று நான் உணர்ந்தேன்'' என்கிறார் சிந்தர்.

இந்தத் தொழில் சார்ந்த பயிற்சித் திட்டத்தில் பதிவு செய்துகொண்டுள்ள ரஜ்னி வீட்டு வேலை செய்பவர். என் குடும்பத்தை நடத்துவதற்குத் தேவையானதை விட மிகக் குறைவாகதான் நான் சம்பாதிக்கிறேன்'' என்று



*கேரா கஜ்ஜு கிராமத்தில் உள்ள தொழில் மையத்தில் புல்காரி கற்கும் பெண்கள்.*

சொல்லும் இவரும் தான் அதிர்ஷ்டசாலி என்று உணர்கிறார். இவருடைய கணவர் மதுவுக்கு அடிமையானவர்; இவர் 2 குழந்தைகளை வளர்த்துப் படிக்க வைக்கவேண்டும். ஃபூல்காரி கற்றுக்கொண்டபின், பட்டியாலா-வில் நல்ல சம்பளம் கிடைக்கும் வேலை ஒன்றைக் கண்டறியலாம், கெரா கஜ்ஜூ-விலிருந்து வெளியேறலாம் என்று இவர் நம்புகிறார். ஆனால் இப்போதைக்கு, வகுப்புக்கு வந்து எல்லாப் பெண்களுடனும் பேசும்போது, நான் தனியாக இல்லை என்று அறியும்போது நான் மகிழ்ச்சியாக உணர்கிறேன்'' என்கிறார் இவர். இந்த வண்ணமயமான நூல்களைக் கொண்டு ஆடையில் அழகிய வடிவமைப்புகளை உருவாக்குவது என் அழுத்தத்தை விரட்டுகிறது.



இந்தத் தொழில் சார்ந்த மையத்தை ஃபிப்ரவரி 2022ல் மாதவ் ஸ்டெல்கோ இயக்குநர் மீனு கோயல் மற்றும் DG பர்வீன் ஜிந்தால் தொடங்கிவைத்தார்கள். இதற்கான ரூ.1,50,000 CSR நல்கை பொருட்கள், பயிற்சியாளர்கள் கட்டணம், தையல் இயந்திரங்களின் செலவுக்குப் பயன்படுகிறது. இப்போது 30 பெண்களுடன் பணியாற்றும் இந்த மையம் இந்தப் பெண்களுக்கு வடிவமைப்பு உதவியாளராக வேலை பெற்றுத் தருவதுடன், பாரம்பரியப் பஞ்ச ாபி கைவினைக் கலையாகிய ஃபூல்காரியை முன்னிறுத்துகிற நோக்கத்தைக் கொண்டுள்ளது. வணிக முறையில் தயாரிக்கப்படுகிற இயந்திரப் பூத்தையல் செய்யப்பட்ட துணிகளாலும் ஆடைகளாலும் ஃபூல்காரிக்கு இடம் இருப்பதில்லை. இந்தத் தொழில் சார்ந்த திட்டத்தால் நாங்கள் விழிப்புணர்வை உண்டாக்குகிறோம், இந்தப் பெண்களுக்கு வேலை பெறக்கூடிய திறன்களை வழங்குகிறோம்'' என்கிறார் திட்டத் தலைவர் AG ராஜீவ் கோயல்.

ஒருவர் இந்த மூன்று மாதப் பயிற்சித் திட்டத்தில் சேர்வதற்குப் பூத்தையலை முன்கூட்டியே அறிந்திருக்கவேண்டியதில்லை. இந்தக் கைவினைக் கலை மெதுவான மற்றும் முறை சார்ந்த கைப்பயிற்சியாக இருந்தாலும், இந்தப் பெண்கள் பூத்தையலை விரைவாகக் கற்றுக்கொண்டு நிலையான வேகத்தில் முன்னேறுகிறார்கள்'' என்கிறார் இத்திட்டத்தின் பயிற்சி யாளர், வழிகாட்டி ரேகா மான். இவர் RC பட்டியாலா ராயல் உறுப்பினர், தன்னுடைய ஃபூல்காரி வடிவமைப்புகளுக்கு ஒரு தேசிய விருது வென்றுள்ளவர். இந்தப் பெண்கள் விரைவில் பயிற்சியை நிறைவு செய்து, தங்களைத் தவறாகப் பயன் படுத்துகிற தங்கள் கணவன் மார்களிடமிருந்து நிதி விடுதலை பெற்று தங்கள் வாழ்க்கைத் தரத்தை மேம் படுத்த விரும்புகிறார்கள். இந்தத் திட்டத்தின்கீழ் இந்தப் பெண்களுக்கு ஆடைகள், சல்வார் சூட்களைத் தைத்து வடிவமைக்கவும் கற்றுத்தரப்படுகிறது. இதன்மூலம், அவர்கள் ஒரு முழு ஆடையையும் அவர்களே உருவாக்கலாம், அதன்மூலம் மேலும் பணம் சம்பாதிக்கலாம்'' என்று இவர் சுட்டிக் காண்பிக்கிறார்.

ரேகா இந்தப் பெண்களுடன் நெருங்கிப் பணியாற்றுகிறார், அவர்கள் தங்களுடைய முதல் ஆடைத் தொகுப்பை நிறைவு செய்வதற்கு, அவர்களுடைய தன்னம்பிக்கையை வளர்ப்பதற்கு உதவுகிறார். நாங்கள் இவர்களுக்காக ஒரு கண்காட்சி நடத்தப் போகிறோம்; இவர்களுடைய ஆடைகள் நல்ல விலைக்கு ஏலம் போகும் என்று நம்புகிறோம்'' என்கிறார் இவர்.

இந்த மாவட்டம் மாதவ் ஸ்டெல்கோ-வுடனான இன்னொரு தனி CSR நல்கையின்கீழ் 26 பெண்களுக்கு அழகுக் கலையில் பயிற்சி அளிக்கிறது. பங்குபெறுவோருக்குப் புத்தகங்கள், எழுதுபொருட்கள், ஒப்பனைப் பொதிகள், பிற துணைப் பொருட்கள் இலவசமாக வழங்கப்படுகின்றன; தோல் மற்றும் முடிப் பராமரிப்புத் தொழில் வல்லுனர்கள் இவர்களுக்கு நேரடிப் பணிப் பயிற்சி அளிக்கிறார்கள். இந்தத் திட்டத்திற்கு இதுவரை ரூ.50,000 செலவாகியுள்ளது. இதை RC ஃபரீத்கோட் ஆதரிக்கிறது.■

# எல்லோரும் நடனம் ஆடலாம்

ராஜேந்திர சாபூ

சில நாட்களுக்கு முன்பு, என் மகனும் மருமகளும் தங்கள் 40வது திருமண நாளை கொண்டாடினர். மகிழ்ச்சியான சூழ்நிலைக்கு மத்தியில், அவர்களது நண்பர்கள் திரைப்பட இசையின் தாளத்திற்கு ஏற்றவாறு மகிழ்ச்சியுடன் கைதட்டி நடனமாடிக் கொண்டிருந்தனர். அவர்கள் விடாப்பிடியாக எங்களை இழுக்க, தயக்கத்துடன் நாங்களும் நடனமாட ஆரம்பித்தோம், அதற்காக இளைஞர்களின் பாராட்டையும் பெற்றோம்.

நடனம் எங்கள் வாழ்வில் எப்படி வந்தது என்பதை நினைவு கூர்ந்தேன். எங்கள் இளமை பருவத்தில் அக்கா மற்றும் மைத்துனருடன் முசோரியில் விடுமுறைக்கு சென்றபோது நாங்கள் பால்ரூம் நடனம் கற்கத் தொடங்கினோம். நடன வகுப்புகளில் சேர்ந்து, ஃபாக்ஸ்ட்ராட், வால்ட்ஸ் மற்றும் சா-சா-சாவில் பாடம் பயில ஆரம்பித்தோம். நாங்கள் உற்சாகமாக இருந்தோம், ஆனால் முழுமையாக கற்றுக்கொள்ள நேரம் எங்களுக்கு இல்லை, சண்டிகருக்குத் திரும்பிய பிறகும், நாங்கள் எங்கள் பாடங்களைத் தொடர்ந்தோம் மற்றும் ஒரு நடன ஆசிரியரை நியமித்தோம், அவருக்கு “திரு நாச்சா சிங்” என்று செல்லப்பெயர் சூட்டினோம். எங்கள் நண்பர்களான நரேந்திரா, இந்து கோஸ்வாமி, லலித் மற்றும் உஷா சூரி ஆகியோரும் எங்களுடன் ஆர்வத்துடன் இணைந்தனர். எங்கள் தொழில்முறை வேலைக்கு அதிக நேரம் தேவைப்பட்டதால், மெதுவாக நடனத்தை கைவிட்டோம்.



1963ஆம் ஆண்டு வாக்கில், எங்களுடைய ஜெர்மனி வணிகப் பங்குதாரரான வில்லி டோவிடத், அவருடைய மகளின் திருமணத் திற்கு என்னை அழைத்தார். தேவாலயத்தில் நடந்த விழாவில் கலந்துக்கொண்டேன். மாலை வரவேற்பில், அனைத்து முக்கிய விருந்தினர்களும் மணமகளுடன் நடனமாட வேண்டும், எனக்கும் அந்த பாக்கியம் கிடைத்தது. இருப்பினும், இது எனக்கு ஒரு அமில சோதனை. மணப்பெண்ணுடன் நடனமாடுவதற்கான வரிசை குறைந்து வந்தது. மணமகள் நீளமான கவுன் அணிந்திருப்பதை கண்ட நான் அதனை மிதித்து விடுவேனோ என எண்ணி மேலும் பதற்றமடைந்தேன. என்னுடைய இக்கட்டான நிலையை ஒருவரிடம் விளக்கினேன். அவர் அமைதியாக என்னை வரியிலிருந்து மாற்றினார்.

மற்றொரு சந்தர்ப்பத்தில், அமெரிக்காவில் உள்ள சர்வதேச மன்றத்திற்கு ரோட்டரி இன்டர்நேஷனல் உள்வரும் தலைவராக நான் இருந்தேன். தலைவர் பாலோ கோஸ்டாவும் அவரது மனைவி ரீட்டாவும் நானும் என் மனைவி உஷாவும் அவர்களுடன் மேடையில் இணைய வலியுறுத்தினார்கள். நான் ரீட்டாவுடன், உஷா பாலோவுடன் நடனமாட வேண்டும். இது ஒரு பெரிய மரியாதை, ஆனால் எங்களுக்கு இது தர்மசங்கடமாக இருந்தது. அவர்கள் இருவரும் நடனம் ஆடுவதில் வல்லவர்களாக இருந்ததால் அவர்களுடன் சில நிமிடங்கள் ஆடுவது எங்களுக்கு எளிதாக இருந்தது. மேலும் பல ஜோடிகள் மேடையில் வந்ததும், நாங்கள் எங்கள் இருக்கைகளுக்கு திரும்பினோம்.

“பால்ரூம் நடனம்” என்பது லத்தீன் வார்த்தையான “பல்லாரே” என்பதிலிருந்து வந்தது, “ஆடுவது”

என்பது'' அதன் பொருள். பால்ரூம் நடனம் ஜெர்மனியில் 1580 இல் தோன்றியது. 1750இல், வால்ட்ஸ் நடனம் பிரபலமாகி, ஐரோப்பா மற்றும் இங்கிலாந்தின் பல பகுதிகளுக்கு பரவியது. பின்னர், டேங்கோ, ஃபாக்ஸ்ட்ராட், மாம்போ, ரம்பா, சம்பா, சா-சா-சா மற்றும் க்விக்ஸ்டெப் ஆகியவை பிரபலமடைந்தன.

இந்தியாவில், பல கிளாசிக்கல் மற்றும் நாட்டுப்புற நடனங்கள் உள்ளன. பொதுவாக இதுபோன்ற நடனங்கள் ஒரு புதிய பருவ வருகை, திருமணங்கள் மற்றும் திருவிழாக்களின் ஆடப்படுகின்றன. இவை முறையானவை, அங்கு ஆண்களும் பெண்களும் தனித் தனியாகவும், ஒன்று கூடியும் நடன மாடுகின்றனர். தற்போது, சமூகக் கூட்டங்களில் முறைசாரா நாட்டுப்புற நடனங்கள் பெருகி வருகின்றன.

எந்த இடமாக இருந்தாலும் சரி, நிகழ்வாக இருந்தாலும் சரி, முறையான அல்லது முறை சாரா கூட்டமாக இருந்தாலும் சரி, ஒரு காரணி அனைவருக்கும் பொது வானது – நடனம். இது மகிழ்ச்சி மற்றும் உற்சாகத்தின் வெளிப்பாடு. "வாழ்க்கையுடன் லேசாக நடன மாடுங்கள்; சாகசத்தின் பாடல்களைப் பாடுங்கள்; உங்கள் ஆன்மாவை உயர்த்துங்கள்; உங்கள் மகிழ்ச்சி யை வெளிப்படுத்துங்கள்." என்ற எழுத்தாளர் ஜொனாதன் லாக்வுட் ஹுயியின் வரிகள் அதனை நமக்கு உணர்த்துகிறது.

சிறியவராக இருந்தாலும் சரி, வயதானவராக இருந்தாலும் சரி, நடனமாடுவதில் நம் மகிழ்ச்சியை வெளிப்படுத்த வேண்டாமா?

எழுத்தாளர் முன்னாள் RI தலைவர் ஆவார்.

©தி ட்ரிப்யூன்

---

TRF உதவியுடன் நற்பணி

# NICU-வை தரம் உயர்த்திய புனே ரோட்டேரியன்கள்

ரோட்டரி செய்திக் குழு



PDG *கிரிஷ் குனே மருத்துவமனையில்* NICU*திறப்பு விழாவில்.*

பூனா மிட்டவுன் ரோட்டரி சங்கம் (RID 3131) அண்மையில் நகரில் உள்ள சேத் தாராசந்த் ராம்நாத் அறக்கட்டளை மருத்துவமனையில் பிறந்த குழந்தைகளுக்கான தீவிர சிகிச்சை பிரிவு வசதியை (NICU) சர்வதேச மானிய உதவியுடன் விரிவுபடுத்தியுள்ளது. PDG கிரிஷ் குணே இந்த மேம்பாட்டு வசதியைத் தொடங்கிவைத்தார்.

இந்த திட்டத்தின் மூலம் கூடுதலாக 8 படுக்கை வசதிகள் சேர்க்கப்பட்டு மொத்தம் 16 NICU படுக்கைகள் மற்றும் வெப்பமூட்டிகள், போட்டோதெரபி இயந்திரங்கள், இன்குபேட்டர்கள் (சிசுக்களின் உடலை ஒரே வெப்பநிலையில் பராமரிப்பதற்கான கருவி) உள்ளிட்ட பிறந்த குழந்தைகளின் உயிர்காக்கும் நவீன கருவிகள் வழங்கப்பட்டுள்ளன. இந்த நவீன வசதிகளை அடுத்து ஆண்டுக்கு 800 குழந்தைகளுக்கு இனி சிகிச்சை அளிக்க முடியும். ஏற்கெனவே 600 குழந்தைகளுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டு வந்தது என்கிறார் திட்ட ஒருங்கிணைப்பாளர் சுபோத் குலவாணி. மேம்படுத்தப்பட்ட இந்த வசதி பொருளாதாரத்தில் நலிவுற்ற சமூகத்தினருக்கு வரப்பிரசாதமாகும். ஏனெனில் சாதாரணமாக சிசுக்கள் பராமரிப்புக்கான இந்த வசதிக்கு மற்ற மருத்துவமனைகளில் ஒரு நாளைக்கு குறைந்தது ரூ.25,000 கட்டணமாக வசூலிக்கப்படுகிறது. ஆனால், இங்கு ரூ.6,000 மட்டுமே வசூலிக்கப்படுகிறது என்று அவர் மேலும் கூறினார்.

இந்த திட்டத்துக்கான செலவு 72,000 அமெரிக்க டாலர். பெத்லஹெம் ரோட்டரி சங்கங்கள், லெக்ஸிங்டன் ஆப்டர்-ஹவர்ஸ், லேக் நோனா லஞ்ச் மற்றும் அமெரிக்காவின் இன்டர்நேஷனல் வீ சர்வ் பவுண்டேஷன் ஆகிய அமைப்புகள் இதற்கு ஆதரவு அளித்தன. புனே ஈஸ்ட் மற்றும் புனே சவுத் ரோட்டரி சங்கங்கள் இந்த சர்வதேச மானிய திட்டத்துக்கு சினர்ஜி கூட்டாளர்களாக இருந்தனர். மாவட்டங்கள் 3131, 7430, 6740 மற்றும் 6060 ஆகியவை திட்டத்த்துக்கு தங்களின் DDF நிதி மூலம் ஆதரவளித்தன.

சங்கத்தின் மூலம் "நிரமாய்'' என்ற சேவை அமைப்புடன் தொடர்புடைய 1,200 அங்கன்வாடி ஊழியர்களுக்கு கர்ப்பிணிப் பெண்களை பராமரிப்பது, சுகப்பிரசவம் மற்றும் ஆரோக்கியமான குழந்தைகளை வளர்ப்பது குறித்து பயிற்சி அளிக்கப்பட்டது.■

# டாட்டின் கல்வியறிவு கனவை மேம்படுத்தும் MKD டேப்லேட்கள்

V முத்துகுமரன்



*ஜூன் 2018ல் கனடாவின் டொராண்டோவில் நடந்த RI மாநாட்டில் Rtn குல்பீர் டோட், அவரது உறவினர் Dr ஹேமா டாட் உடன், அப்போதைய TRF அறங்காவலர் தலைவர் பால் A நெட்சல் மற்றும் RI தலைவர் இயன் ரிஸ்லி ஆகியோரிடம் இருந்து AKS உறுப்பினர் மேற்கோளைப் பெறுகிறார்.*

தொழில்துறை பொறியாளர், 94 வயதான ரோட்டேரியன் குல்பீர் டாட் 20 ஆண்டுகளுக்கும் மேலாக MIT, பாஸ்டனில் உள்ள வைட்ஹெட் இன்ஸ்டிட்யூட் உட்பட அமெரிக்காவின் உயர்மட்ட நிறுவனங்களில் ஆலோசகராக உள்ளார். கல்வி மற்றும் தொழில் முறையில் சிறந்து விளங்கியதின் மூலம் அவர் வாழ்க்கையில் உச்சத்தை அடைந்தார். ஆனால் இந்தியாவில் அடிப்படை கல்வியறிவு அளவை மேம்படுத்துவதற்கான ஆர்வம் அவரை ஆக்கிரமித்து கொள்ள அவர் 1992ல் புனே திரும்பினார், அடுத்த ஆண்டு RC பூனா நார்த், RID 3131ல் உறுப்பினரானார். 2014ல் இந்தியாவில் கல்வியறிவை மேம்படுத்த MKD மல்டிமீடியா நால்லேஜ் டெலிவரி அறக்கட்டளையை நிறுவினார்.

அப்போதிலிருந்து, MKD – மீரா குல்பீர் டாட் – மஹாராஷ்டிராவின் புனே, சதாரா மற்றும் அகமதுநகர் மாவட்டங்களில் பிரபலமான சுருக்க சொல்லாக மாறியுள்ளது. ஆயிரக்கணக்கான கிராமப்புற மாணவர்கள், டாட்டின் தொண்டு அறக்கட்டளை அவரது சங்கமான RC பூனா நார்த், RID 3131 உடன் இணைந்து விநியோகித்த MKD கணினி டேப்லேட்களை நன்றாகப் பயன்படுத்துக்கின்றனர். “இது வரை டாட் TRFக்கு 528,000 டாலர் கொடுத்துள்ளார் மற்றும் அவரது கடைசி தவணையான 100,000 டாலருக்குப் பிறகு 2021ல் சேர்ஸ் சர்க்கிளில் (டபுள் AKS) சேர்க்கப்பட்டார். 2013 முதல், கிராமப் புறங்களில் உள்ள சுமார் 200 அரசு தொடக்கப்பள்ளிகளுக்கு 3,000 MKD மின்-கற்றல் டேப்லேட்கள் ஒவ்வொரு ஆண்டும் 10,000க்கும் மேற்பட்ட மாணவர்களைச் சென்றடைகின்றன, என்று டாட்டின் நம்பிக்கைக்குரியவரும், MKD அறக்கட்டளையின் அறங் காவலருமான ரோடேரியன் குமார் ஷினகரே கூறினார். மென் பொருள் அடங்கிய (மராத்தி மற்றும் ஆங்கிலம் ஆகிய இரண்டிலும்) மின்-கற்றல் சாதனங்கள் பள்ளிகளுக்கு வழங்கப் பட்ட அவை ஆசிரியர்களின் மேற்பார்வையின் கீழ் ஒரே நேரத்தில் 1 முதல் 7 வகுப்புகளில் பயிலும் 3–4 மாணவர்களால் பயன் படுத்தப்படுகின்றன. “மாநில அரசு பள்ளிப்பாடத்திட்டத்தில் சில மாற்றங்களைக் கொண்டு வரும் போதெல்லாம் டேப்லெட் மென் பொருளை நாங்கள் புதுப்பிப்போம்.”

டாட், ஐந்து ஆண்டுகளாக ஒவ்வொரு முறையும் 30,000 டாலர் TRFக்கு வழங்கியுள்ளார், அவற்றில் நான்கு நன்கொடைகள் MKD டேப்லெட் திட்டத்திற்கான உலகளாவிய மானியங்களாக மாற்றப் பட்டன மற்றும் ஐந்தாவது GG செய லாக்கத்தில் உள்ளது. "மெட்ரிக் குளோபல் என்ற ஒரு சுயாதீன நிறுவனத்தால் மேற்கொள்ளப்பட்ட தாக்க மதிப்பீட்டுக் கணக்கெடுப்பில், கிராமப்புற மாணவர்களின் கற்றலிலும், அனைத்துப் பள்ளி களிலும் கல்வியறிவு அளவை மேம் படுத்துவதிலும் சிறந்த முன்னேற்றம் அடைந்துள்ளது" என்று ஷினகரே கூறுகிறார். பள்ளிகளில் டேப்லெட் அறிமுகப்படுத்தப்பட்டதன் மூலம் பாடங்களைப் புரிந்து கொள்வது, தேர்ச்சி சதவீதம், வகுப்பு வருகை மற்றும் பள்ளி இடைநிற்றல் விகிதம் குறைப்பு ஆகிய அனைத்தும் மேம் பட்டுள்ளன. TCS உருவாக்கிய வயது முதிர்ந்தவர்களுக்கான கல்வியறிவு மென்பொருளை நாங்கள் சாதனங்களில் ஏற்றியுள்ளோம், இதனால் பள்ளிகள் படிப்பறிவற்ற பெற்றோருக்கு வகுப்பு நேரத்திற்குப் பிறகு அடிப்படையாக படிக்க, எழுத மற்றும் எண்கணிதத்தைச் செய்ய கற்றுக்கொடுக்க முடியும். MKD டேப்லெட்கள் மூலம் தங்கள் குழந்தைகளிடமிருந்து பெற்றோர்கள் பாடம் கற்றுக்கொள்வதில் மகிழ்ச்சி அடைகிறார்கள்.



MKD டேப்லெட்களில் பயிலும் பள்ளிக் குழந்தைகள்.

## நன்கொடை நிதி

MKD டேப்லெட் செயல்திறன் விருது என பெயரிடப்பட்ட ஒரு எண்டோவ்மென்ட் நிதியை அமைப்பதற்காக டாட் TRFக்கு 300,000 டாலர் நன்கொடை அளித்துள்ளார். RID 3131 மூலம் அதன் வருடாந்திர வருமானத்தில் (வட்டி, ஈவுத்தொகை, மூலதன ஆதாயங்கள் என) 50 சதவிகிதம் DDFஆகப் பெறப்படுகிறது, இது கல்வியறிவு திட்டங்களுக்கு மட்டுமே பயன்படுத்தப்பட வேண்டும் என்ற நிபந்தனையுடன் RC பூனா நார்த்-க்கு வழங்கபடுகிறது. "GG திட்டங்களுக்கு நிதியளிப்பதற்கும், டேப்லெட்டுகளை வாங்குவதற்கும், மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு மின்-கற்றல் கருவிகளை திறம்பட பயன்படுத்து வதற்கும் நாங்கள் DDF தொகையைப் பயன்படுத்துகிறோம்."

டேப்லெட்டுகளால் அறிமுகப் படுத்தப்பட்ட "குறிப்பிடத்தக்க மாற்றத்தை" தொடர்ந்து, கேரளா, டெல்லி மற்றும் கொல்கத்தாவைச் சேர்ந்த சங்கங்கள் தங்கள் பிராந்தி யங்களில் உள்ள அரசுப் பள்ளிகளுக்கு இந்த மின்-கற்றல் திட்டத்தைச் செயல்படுத்த விரும்புகின்றன. "MKDயின் வெற்றிக் கதையைப் அறிந்த பிறகு, மகாராஷ்டிரா அரசு எங்கள் திட்டத்தைப் ஆராய்ந்து, அதே மென்பொருளை வாங்கி, பழங்குடியின பள்ளிகளுக்கு 60,000 டேப்லெட்களை விநியோகித்துள்ளது."

RILM தலைவர் PRID கமல் சங்வி 2019–20ல் புனே வந்து, டாட், ஷினகரே மற்றும் அப்போதைய DRFC தீபக் ஷிகர்பூரை சந்தித்தார். அவர் "எங்கள் டேப்லெட் திட்டத்தால் மிகவும் ஈர்க்கப்பட்டார். இப்போது கிராமப்புற மாணவர்களுக்கு ஒரு லட்சத்திற்கும் அதிகமான MKD டேப்லெட்களை விநியோகிக்க அவர் திட்டமிட்டுள்ளார். வரும் ஆண்டு களில் இந்தியா முழுவதும் இந்த டேப்லெட் விநியோகிக்க RILM விரும்புகிறது என்று ஷினகரே கூறினார்.

## ஒரு புகழ்பெற்ற தொழில் வாழ்க்கை

MKDயில் உள்ள "M" என்பது டாட்டின் மனைவி Dr மீராவை குறிக்கும், மகப்பேறு மருத்துவரான அவரை, டாட் அமெரிக்கா செல் வதற்கு முன் ஜாம்ஷெட்பூரில் உள்ள டெல்கோ, இப்போது டாடா மோட்டார்ஸ், நிறுவனத்தில் பணியாற்றிய போது சந்தித்தார்.

1927 டிசம்பரில் லாகூரில் பிறந்த டாட், லாகூரில் உள்ள பஞ்சாப் பொறியியல் மற்றும் தொழில்நுட்பக் கல்லூரியில் படித்தார். ஓஹயோவில் உள்ள துலேடோ பல்கலைக்கழகத்தில் தொழில்துறை பொறியியலில் முதுகலைப் பட்டம் பெற்றார். அவர் 1990ல் அமெரிக்காவில் "இன்றைய தொழில்நுட்பத்தின் மூலம் கல்வி" என்ற நோக்கத்துடன் மல்டிமீடியா இன்டர்நேஷனல் ரிசர்ச் அசோசியேட்ஸ் என்ற தொண்டு அறக்கட்டளையைத் தொடங்கினார். இந்த தன்னார்வ தொண்டு நிறுவனம் "அந்த நேரத்தில் கல்வியறிவு இலக்கு களுடன் போராடிய அமெரிக்காவில் பாராட்டுக்குரிய பணிகளை செய்துள்ளது" என்று ஷினகரே கூறினார். மேலும் டாட் "கிராமப்புற ஏழைகளின் கல்வியறிவு தரத்தை உயர்த்துவதற்கான தீவிர ஆர்வத்து டன், அரசாங்க பள்ளிகளுக்கு MKD டேப்லெட்களை விநியோகிக்கும் நோக்கத்துடன் இருக்கிறார் என்றார்.■



RI இயக்குனர் A S வெங்கடேஷ் குத்துவிளக்கு ஏற்றி Rotasiaவை துவக்கி வைக்கிறார்.

# ரோட்ராக்டர்களின் பிணைப்பை வலுப்படுத்தும் ரோட்டாசியா

ஜெய்ஸ்ரீ

தெற்காசியாவைச் சேர்ந்த ரோட்ராக்ட் சங்கங்கள், ரோட்ராக்டர்கள் பங்கேற்ற நான்கு நாள் மெகா சர்வதேச மாநாடு (ROTASIA) கடந்த மார்ச் மாதம் சென்னையை அடுத்த மகாபலிபுரத்தில் நடைபெற்றது. RSAMDIO தலைவர் ஆர்த்தி கோஸ்வாமி மற்றும் SEARIC MDIO தலைவர் கௌஷல் சாஹு இருவரும் நிகழ்ச்சி அமைப்பாளர்கள். RID 3232 ஏற்பாட்டில் DRR G காமுவேல் தலைமையில் நடைபெற்ற இந்த மாநாட்டில், நான்கு நாடுகள், 32 ரோட்டரி மாவட்டங்களைச் சேர்ந்த 650-க்கும் மேலான ரோட்ராக்டர்கள் ஒன்றுகூடி கூட்டுறவு, கூட்டுச் செயல்பாடு மற்றும் கருத்துப் பரிமாற்றங்களை மேற்கொண்டனர். 13 ஆண்டுகளுக்குப் பிறகு சென்னையில் மெகா ரோட்ராக்ட் நிகழ்ச்சியை நடத்துவதில் நாங்கள் மகிழ்ச்சி அடைந்தோம். அனைத்து ரோட்ராக்டர்களும் இந்த மெகா நிகழ்ச்சியை எதிர்நோக்கியிருந்தனர் என்றார் அவர். ரோட்டேரியன் டேவிட் ரேனெல் தயாரித்த, சென்னையின் முக்கிய பகுதிகளில் ரோட்ராக்டர் களின் இசையுடன்கூடிய விளம்பர விடியோ தெற்காசிய ரோட்ராக்ட் சங்கங்களுக்கு விநியோகிக்கப்பட்டது.

RI இயக்குநர் A S வெங்கடேஷ் தலைமை விருந்தினராகக் கலந்து கொண்டு சிறப்பாக ஏற்பாடு செய்ததற்காக மாநாட்டு குழுவினருக்கு பாராட்டுத் தெரிவித்தார். DG J ஸ்ரீதர், (RID 3232) கௌரவ விருந்தினராகப் பங்கேற்றார். மாவட்ட ரோட்ராக்ட் குழு தலைவர் சேஷா M சாய், தனது நகைச்சுவையான பேச்சால் பார்வையாளர்களை மகிழ்வித்தார். மெட்ராஸ் மவுண்ட் ரோட்டரி சங்கத்தின் Rtn ராம் N ராமமூர்த்தி சிறப்பு அழைப்பாளராக பங்கேற்றார். ‘மாற்றம்’ அறக்கட்டளையின் நிறுவனர், AVP மற்றும் இன்போசிஸ் மனிதவள மேம்பாட்டாளர் PDRR சுஜித்குமார் சிறப்புரையாற்றினார். தனது கருத்துச் செறிவுள்ள பேச்சால் பார்வை யாளர்களை வெகுவாக கவர்ந்து அவர்களை ஊக்கப்படுத்தினார்.

இந்தியா, இலங்கை, நேபாளம், வங்கதேசம் உள்ளிட்ட நாடுகளின் ரோட்ராக்ட் மாவட்ட உறுப்பினர்கள் மாபெரும் கொடி அணிவகுப்பை நடத்தினர். மாநாட்டில் சிறந்த இசைக்கலைஞர் 17-வயதான லிடியன் நாதஸ்வரம் இளம் சாதனை யாளராக அங்கீகரிக்கப்பட்டார். கிளாஸிக் போலோவின் தலைமைச் செயல் அதிகாரி C R சிவராம்



இளைஞர்களுக்கான முன்மாதிரி விருது வழங்கி கௌரவிக்கப்பட்டார். நடப்பு ஆண்டின் DRRகள் அந்த ஆண்டில் அவர்களது மாவட்ட தலைமைக்காக பாராட்டப்பட்டனர்.

கோவிட் தொற்றுப்பரவலின் போது ரோட்ராக்டர்கள் செய்த அருஞ்சேவையை ரோட்டேரியன் பாபி விவரித்து அவர்களை கோவிட் வீரர்கள் என பாராட்டினார். 2019 CoLஇல் அறிமுகப்படுத்தப்பட்ட ரோட்ராக்ட் சங்கங்களை ரோட்டரி இன்டர்நேஷனலின் உறுப்பினர் வகையாக சேர்க்க சட்டங்களில் திருத்தம் கொண்டுவர வேண்டும் என்ற தீர்மானத்தின் மீதும் குழு விவாதம் நடைபெற்றது.

பல்வேறு கலாசார மற்றும் நடன நிகழ்ச்சிகள், நகைச்சுவை நிகழ்ச்சிகள் மற்றும் DJ இரவுகள் பார்வையாளர்களுக்கு உற்சாகமான பொழுதுபோக்கை வழங்கின. உள்வரும் DRR கௌதம் ராஜ் மற்றும் அவரது குழுவினருக்கு பாராட்டு தெரிவிக்கும் நிகழ்ச்சியுடன் மாநாடு முடிவடைந்தது.

ரோட்டாசியா எங்கள் அனைவருக்கும் உற்சாகமான அனுபவத்தை கொடுத்தது. மேலும் இது மொழி, கலாசாரம், எல்லைகளுக்கு அப்பாற்பட்டு நட்பை வளர்த்துக் கொள்ளவும், தலைமைத்துவ பண்புகளை மெருகூட்டவும் நல்வாய்ப்பாக அமைந்தது. இந்த நிகழ்ச்சி



DG J *ஸ்ரீதர், நிகழ்ச்சி தலைவர்* PDRR *சுரேஷ் மனோஹரன், நிகழ்ச்சி அமைப்பாளர் ஆர்த்தி கோஸ்வாமி,* DRRE *கௌதம் ராஜ் மற்றும் நிகழ்ச்சி செயலாளர் வினோத் நாகராஜன்* Rotasia t-shirt*களை அறிமுகப்படுத்துகிறார்கள்.*



RID 3232 DGE N *நந்தகுமார்,* DRR G *காமுவேல் மற்றும்* Rtn *ராம்* N *ராமமூர்த்தி.*



DRRE *கௌதம் ராஜ் அறிமுகப்படுத்தப்படுகிறார்.*

ரோட்ராக்டராக இருப்பதிலும், ரோட்டரியுடன் இணைந்திருப்பதிலும் பெருமை கொள்ளும் விதமாக இருந்தது என்கிறார் அம்பத்தூர் RAC தலைவர் சதீஷ்குமார்.

இந்த மெகா நிகழ்வு எங்களுக்கு மறக்கமுடியாத, நம்பமுடியாத ஒரு அனுபவம். இங்கு கிடைத்த அறிவும், அறிமுகமும் வாழ்நாள் முழுவதும் நினைவிலிருக்கும். ரோட்டாசியா 2022 எனக்கு முக்கியம் வாய்ந்தது. ஏனெனில் முதன் முறையாக மிகப்பெரிய ஒரு நிகழ்வுக்கு ஏற்பாடு செய்தவர்களில் நானும் ஒருவனாக இருந்தேன் என்றார் DRRE கௌதம் ராஜ்.■

# கர்நாடக விவசாயிகளுக்கு ஒரு “ஸ்மார்ட்” தண்ணீர் தீர்வு

கிரண் ஜெஹரா



DG கௌரிஷ் தோண்ட் நீர் வசதி திட்டத்தை சங்க தலைவர் மிலிந்த் படான்கர் செயலாளர் லஷ்மிகாந்தி நெடால்கர் ஆகியோர் முன்னிலையில் துவக்கி வைக்கிறார்.

கர்நாடக மாநிலம், பெல்காமிலிருந்து 15 கி.மீ. தொலைவில் உள்ள மஹாலேனஹட்டி என்னும் கிராமத்தைச் சேர்ந்த 29 வயது இளம் விவசாயியான அருண் கிருஷ்ணா, எங்களிடம் சக்தி உள்ளது (பவர் ஹமாரே ஹாத் மைன் ஹைன்) என்கிறார். எங்களது வயலுக்கு நீர்ப்பாசனம் செய்ய நாங்கள் மின்சாரத்தை நம்பியிருக்க வேண்டியிருந்தது. ஆனால், RC பெல்காம் (RID 3170) பாசனத் திற்காக “ஸ்மார்ட் அக்வா நெட்” என்னும் 10 கிலோவாட் சூரிய சக்தி மின்சார கருவிகளை நிறுவிய பிறகு நாங்கள் காலை 7 மணி முதல் மாலை 6 மணி வரை வேலை செய்ய முடியும். முன்பு எங்களுக்கு எப்போது மின்சாரம் வரும் என்பது தெரியாது. சில சமயங்களில் நள்ளிரவில் மின்சாரம் வரும். அப்போது வயலுக்கு ஓடிச் சென்று இருளில் வேலை செய்வோம் என்கிறார்.

திட்டத்தின் தலைவரும் பெல்காம் ரோட்டரி சங்கத்தின் தலைவருமான மிலிந்த் படான்கர் கூறுகையில், தலைமுறை தலைமுறையாக இங்கு விவசாயிகள் மழையை நம்பியே விவசாயம் செய்கிறார்கள். ஆண்டுக்கு ஒரு முறை நெல் அல்லது சோளம் பயிரிடுகிறார்கள். அறுவடை முடிந்த பிறகு அவர்கள் பக்கத்து நகரங்களுக்கு இடம்பெயர்ந்து கூலி வேலை செய்து வருகிறார்கள் என்றார்.

விவசாயியான எனது தந்தை, நான் வயலுக்கு வந்து வேலை செய்வதை விரும்பவில்லை என்கிறார் கிருஷ்ணா. நான் விவசாயம் செய்ய விரும்பியதால் அதில் இயற்கை விவசாயம் குறித்து ஆராய்ச்சி செய்தேன்.

சோதனை அடிப்படையில் மிளகாய், கேரட் மற்றும் உருளைக்கிழங்கு சாகுபடி செய்யத்

தொடங்கினார் கிருஷ்ணா. ஆனால், நீர்ப்பாசனம் என்பது பெரும் சவாலாக இருந்தது. இதற்கிடையில், பெல்காம் ரோட்டரி சங்கம் ஒரு புதிய தண்ணீர் மற்றும் சுகாதார மேலாண்மைத் திட்டத்தை தொடங்க திட்டமிட்டிருந்தது. படான்கர். சிவாஜிராவ் காக்னிகர் என்னும் சமூகசேவகரைச் சந்தித்தபோது விவசாயிகளின் பிரச்னைகளை எடுத்துக் கூறினார்.

இதையடுத்து சங்கம், பெங்களூரை அடிப்படையாகக் கொண்டு செயல்படும், கிராமப்புற மேம்பாடு மற்றும் நகர்ப்புற நிலைத்தன்மைக்கான ஆலோசனைகளை வழங்கி, தொழில்நுட்பம் மூலம் தீர்வு சொல்லும் சன் மோட்சா பவர் என்னும் நிறுவனத்துடன் தொழில்நுட்ப கூட்டாண்மையை செய்துகொண்டது. இதை விவசாயிகள் மற்றும் கிராம மக்களுக்கு எடுத்துச் செல்வதற்கு முன்னதாக நிலைத்தன்மை கொண்ட ஒரு மாதிரியை விளக்க நாங்கள் விரும்பினோம் என்கிறார் படான்கர். விவசாயிகளுக்கு ரோட்டரியினர் உதவ முன்வந்துள்ளதாகவும் அதற்கு பிரதிபலனாக எதையும் எதிர்பார்க்கவில்லை என்றும் காக்னிகர் விவசாயிகளிடம் எடுத்துரைத்தார். முதல் மாதிரி 6 பெண்கள் உள்பட 14 விவசாயிகளுக்குச் சொந்தமான 26 ஏக்கர் நிலப்பரப்பில் நிறுவப்பட்டு செயல்படுத்தப்பட்டது.



விவசாயி ஒருவர் புதிய சூரிய சக்தி மின்சார நீர்பாசனக் கருவியை இயக்குகிறார்.


ஸ்மார்ட் நீர்ப்பாசன மாதிரி, மண்வளம், தட்பவெப்பநிலை, மற்றும் நீரியல் நிலைமைகளின் அடிப்படையில் தேவையான அளவு தண்ணீரை பரிந்துரைக்கிறது. ஒவ்வொரு லிட்டர் தண்ணீருக்கும் உற்பத்தித்திறனை அதிகரிக்கிறது என்கிறார் படான்கர். நீர் பகிர்ந்தளிக்கப்படுவதையும் பாசனவளங்களை அதிகபட்சம் பயன்படுத்துவதையும் குறு விவசாயிகளுக்கு சமமான தண்ணீர் விநியோகத்தையும் உறுதி செய்கிறது என்றும் அவர் குறிப்பிட்டார்.


இந்த தானியங்கி நீர் மேலாண்மையானது கிளவுட் நெட்வொர்க்குடன் தொடர்பு கொள்ளும் சென்சார் மற்றும் மீட்டர்களின் நிகழ்நேர தரவுகளை அடிப்படையாகக் கொண்டது. இது நீரை சேமிக்கவும், பாசனத்திர்கு அதிகபட்ச பயன்பாட்டையும் உறுதி செய்கிறது. மேலும் நிலைத்தன்மை கொண்டதாகவும் விவசாயிகள் பயன்படுத்தும் தண்ணீருக்கு மட்டுமே கட்டணம் வசூலிக்கும் வர்த்தக நடைமுறையையும் உறுதி செய்கிறது. இதன் உள்கட்டமைப்பு வசதிகள் மூலம் அனைத்து பங்குதாரர்கள் இதன் செயல்பாட்டை தங்கள் இருப்பிடத்திலிருந்தே கண்காணிக்கவும், தனிப்பட்ட விவசாயிகளின் தண்ணீர் நுகர்வு, அதற்கான கட்டணம் உள்ளிட்ட தகவல்களையும் பெற வகைசெய்கிறது.



வசூலிக்கப்பட்ட பணம், மஹாலேஹட்டி கிராமத்தில் செயல்படும், கிராமக் குழுவினரால் நடத்தப்பட்டு வரும் கிருஷிதன் சஹயோகி சங்கத்தின் பெயரில் வங்கியில் டெபாசிட் செய்யப்படுகிறது. இந்தப் பணம் இத்திட்டத்தை பராமரிக்க பயன்படுத்தப்படுகிறது. அடிப்படை பிரச்னைகளைச் சமாளிப்பது குறித்து விவசாயிகளுக்கு பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

இந்த திட்டத்தை DG கௌரீஷ் தோண்ட் திறந்துவைத்தார். ■


Rtn Shekhar Mehta
RI President


Rtn Ramesh Meher
District Governor

# GLIMPSES OF

## RC Nagpur inaugurates Vocational Training Centre

RC Nagpur, now 77-year-old, has set up a Vocational Skills Training Centre at the Providence School Annexe, Civil Lines, Nagpur. DG Ramesh Meher inaugurated the vocational centre in a gala ceremony on Feb 23.

The skill centre is a first-of-its-kind in collaboration with the ICICI Foundation with the aim towards inclusive growth, thanks to the CSR wing of ICICI Bank Ltd. While the club is extending its premises, the ICICI Foundation will provide the faculty, training and placements. Electrical and Home Appliances Repair course (EHA) will be imparted to less privileged children who are looking for a vocation to earn gainful employment. The EHA course will train a batch of 60 students every quarter beginning from May 2022. The programme will train around 150–250 students in EHA every year and would be provided jobs with the efforts of the Foundation.

This will be the first EHA batch to be trained by the ICICI Foundation in partnership with the club. DG Meher praised the services of RC Nagpur as through this project 150–250 students from the economically weaker section of the society will get employed each year.

He expressed satisfaction that such a skilling project was being inaugurated on the Foundation Day of Rotary International. Sushmita Chuckerbutty, centre head, ICICI Academy for Skills, Nagpur, attended the programme and expressed her happiness over starting a unique centre in this city jointly with Rotary. ■



## RC Bhusawal Tapti Valley holds memory workshop for students



Memory master trainer Dr Bhagwan Gadhe urged the students to adopt various tricks to memorise their subjects. While rhymes and pictures are found in plenty in the books of Classes 1–5, these are reduced and paragraphs increase from Classes 6–8.

Addressing students at a special workshop, Dr Gadhe said they should focus on comprehension and extemporisation, rather than rote learning. The workshop was organised jointly by RC Bhusawal Tapti Valley and the Chate English Medium School. He demonstrated how to memorise the words and remember phone numbers which will be useful in our daily life. He listed various plans with solutions to tackle problems in subject study.

Around 4,000 students took part in the study workshop. Dr Gadhe advised the parents to guide their children on proper ways to memorise their subjects. Dr Sanju Bhatkar, president, RC Bhusawal Tapti Valley, said that as students have lost nearly two years of schooling due to the pandemic, some have dropped out of mainstream education due to many reasons. They were learning through online over the last two years, but this is not the proper way and students have to attend classes in regular schools for good education. Club treasurer Sunil Wankhede gave the vote of thanks. ■

# DISTRICT 3030

जीवन RID 3030 RY 2021-22
LIVE LIFE.... GIVE LIFE
SERVE TO CHANGE LIVES

## Sewing Training Centre at Kalwan

To provide a secure livelihood source to disadvantaged women, RC Kalwan joined hands with the Jankai Madhyamik Vidyalaya to start a Sewing Training Centre with the support of Singer Machine India Ltd. Jankai Sanstha chairman Chandrakant Kothavade led this project.

DG Ramesh Meher, Surgana MLA Nitin Pawar and RC Kalwan president Nilesh Bhamre were present at the inaugural ceremony of the tailoring centre. Rtn Vilas Shirore gave a presentation on the work done by Rotary in this project. MLA Nitin Pawar appreciated the work and dedication of the club. Women can become self-reliant after getting trained at this sewing class, he said, and expressed his readiness to help any project that empowered women. Club president Bhamre said the project would be sustained for five years.

He said it will provide self-employment to hundreds of women through modern fashion designing lessons at a reasonable fee. There are 21 machines available in the centre to train women and those who have completed the three-month course will be given a government-approved certificate. The Singer company will give the pass-out candidates with a sewing machine at a 50 per cent discount.

A galaxy of local officials, Rotarians, social activists, teachers, academicians, sewing class instructors and Inner Wheel club members took part at the inaugural ceremony. ■






## RC Nasik City hosts 'Jeevan Urja' RYLA







*Jeevan Urja*, a five-day RYLA, was organised by RC Nasik City for 45 NSS girls of ITI Girls College with DG Ramesh Meher inaugurating the youth programme. The RYLA was organised at the Laxman Pada, Trimbak, wherein the participants trained the Adivasi girls in beauty parlour, electrical and sewing courses.

Also, basic defence techniques, rangoli and drawing skills were imparted to tribal girls by student participants. The programme showcased human values and the club plans to lay at least 5km approach road to this tribal hamlet with the help of villagers. The club's vocational director Madhav, secretary Kiran, Rtns Chokani, Naresh and Amol were present at the closing session of *Jeevan Urja*.

The RYLA teams gave basic training on sewing machine to 10 girls; beauty parlour course was taught to another 10 girls; and electrical wiring skills were imparted to 15 beneficiaries. The club donated 10 sewing machine kits, two sewing machines, 10 beauty parlour kits and 10 basic electrical kits to Adivasi girls. Rotarians urged the beneficiaries to be financially independent through self-employment. A group of female doctors from Bosch company engaged the girls on menstrual hygiene which brought the curtains down on an eventful *Jeevan Urja*. ■



# வாட்டர் போலோ விளையாடிய புலி குட்டிகள்

சஞ்சய் டனைட்

வனவிலங்குகளை புகைப் படம் எடுப்பதில் எனது பயணம் 2006ல் தொடங்கியது. காட்டில் வாழும் விலங்குகளில் எனக்கு மிகவும் பிடித்தது புலி. கன்ஹா, நாகர்ஹோல், பென்ச், நக்சிரா, நவேகான், ரந்தம்போர், பாந்தவ்கர் மற்றும் தடோபா ஆகிய அனைத்து தேசிய பூங்காக்கள் மற்றும் புலிகள் காப்பகங்கள் - ப்ராஜெக்ட் டைகர் காடுகளுக்கு நான் சென்றுளேன். புலிகளின் வாழ்விடங்களில், பாந்தவ்கர், பென்ச் மற்றும் தடோபா ஆகியவை பசுமையான பன்முகத்தன்மைக்கு மத்தியில் புலிகளைப் பார்ப்பதற்கான சிறந்த வாய்ப்பை பார்வையாளர்களுக்கு வழங்குகின்றன.

காட்டில் புலியைப் பார்ப்பது அரிதான விஷயம் மற்றும் அதிர்ஷ்டமும். ஒரு சிறந்த வழிகாட்டியும் மற்றும் புகைப்படக் கருவிகளும் இருந்தால் நீடித்த நினைவுகளைப் பெறலாம். பாந்தவ்கர் தேசிய பூங்காவில் மறக்க முடியாத காட்சிகளைப் பார்பதற்கான அதிர்ஷ்டம் எனக்கு அமைந்தது. அதனால் தான் இந்த வாழ்விடம் எனக்கு மிகவும் விருப்பமானது. எனது கேமராவில் பதிவான, என்னுடைய சில பாந்தவ்கார் நினைவுகள், “நேச்சர் அண்ட் வைல்டு லைஃப் போட்டோகிராபி”யில் எனக்கு தேசிய மற்றும் உலகளாவிய விருதுகளைப் பெற்றுத்தந்தது.

### காத்திருத்தல்

மே 2019ல் பாந்தவ்கருக்கு நான் சென்றிருந்த போது, மகதி மண்டலத்தில் டாட்டி என்ற புலியும் அதன் குட்டிகளும் சுற்றித் திரிந்ததாக எங்களுக்குச் செய்தி கிடைத்தது. அந்தப் பகுதிக்குச் செல்ல முடிவுசெய்தேன். அது கோடைகாலமாக இருந்ததால், புலி, அதன் குட்டிகள் மற்றும் வேறு சில வேட்டையாடும் விலங்குகள் தங்கள் தாகத்தைத் தணிக்க நீர் நிலைக்கு வரும் போது அவற்றை காணமுடியும் என எனக்கு அதிக நம்பிக்கை இருந்தது.

காலை 6 மணியளவில் நாங்கள் சஃபாரியைத் தொடங்கியபோது, மான் மற்றும் சாம்பல் நிற லாங்கர்களின் (குரங்கு) சில எச்சரிக்கை அழைப்புகளைக் கேட்க ஆரம்பித்தோம். அழைப்புகள்



வலுப்பெற்றதால், மகதி பகுதியில் உள்ள நீர்நிலை அருகே காத்திருக்க முடிவுசெய்தோம். ஆனால், சிறிது நேரத்தில், எச்சரிக்கை அழைப்புகள் முற்றிலும் நின்றது. ஏறக்குறைய அரை மணி நேரம், எந்த வேட்டையாடும் விலங்குகளையும் எங்களால் பார்க்க முடியவில்லை. மற்ற சஃபாரி ஜிப்சிகள் அந்த இடத்தை விட்டு வெளியேறத் தொடங்கினர்.

ஆனால் நான் என் அதிர்ஷ்டத்தை நம்ப முடிவு செய்தேன். என் வழிகாட்டியிடமும் ஓட்டுநரிடமும் சஃபாரி காலியாக இருந்தாலும் பரவாயில்லை எங்கும் நகர வேண்டாம் என்று சொன்னேன். நல்லவேளையாக, அவர்களும் சம்மதிக்க, நாங்கள் அமைதியாக நீர்நிலையைச் சுற்றியுள்ள முட்செடிகளையும் புதர்களையும் கண்காணித்து அமர்ந்திருந்தோம்.

அன்று காலை 4 மணிக்கு நான் கண் விழித்ததால், ஒரு மணி நேரக் காத்திருப்புக்குப் பிறகு என் காதுகளும் கண்களும் தளர ஆரம்பித்தன. நான் ஏறக்குறைய உறங்கிய நிலையில் இருந்த போது, திடீரென்று, எனது வழிகாட்டி சார், புதர் உள்ளிருந்து அசையும் சத்தம் கேட்கிறது, தயாராக இருங்கள்!, அவர் தனது வார்த்தைகளை முடிக்கும்போது, எச்சரிக்கை அழைப்புகளை மீண்டும் கேட்க ஆரம்பித்தோம், குறிப்பாக லாங்கர்களிடமிருந்து அவை அதிகமாக வந்தது. புதர்களிலிருந்து பெரிய அசைவுகள் வர, கூக்குரல்கள் சத்தமாக வளர்ந்தன. நான் உஷாரானேன்; கேமரா பட்டன் மீது என் விரல்கள் தயார் நிலையில் இருக்க... சில நிமிடங்களில், ஒரு புலி தனது மூன்று அழகான குட்டிகளுடன் நீர்நிலையை நோக்கி வருவதை நாங்கள் கண்டோம்.

### தன் குட்டிகளுடன் வெளிப்பட்ட டாட்டி

இங்கே, எங்கள் கண்களுக்கு முன்னால் தன் குட்டிகளுடன் டாட்டி! குட்டிகள் சற்று வயது நிறைந்தவையே, கிட்டத்தட்ட 14–15 மாதங்கள் இருக்கும், மற்றும் விளையாட்டுத்தனமான மனநிலையில் இருந்தன. நீர்நிலையை நோக்கி வந்து கொண்டிருந்தபோது, அவற்றில் ஒன்று லங்கூர் குரங்கு ஒன்றை வேட்டையாடியுள்ளது என தெரியவந்தது. எச்சரிக்கை அழைப்புகள், குறிப்பாக லங்கூர் குரங்குகளால் ஏன் மிகவும் வெறித்தனமாக இருந்தன என்று அது விளக்கியது.

வேட்டையாடிய குட்டி மகிழ்ச்சியுடன் இருந்தது மற்றும் குடும்பத்தின் மற்ற உறுப்பினர்களுக்கு தனது வேட்டை இரையை பெருமையுடன் காட்டியது. நீர்நிலைக்குள் நுழைய விரும்பாத அவர்களின் தாய் டாட்டி, ஒரு மரத்தின் பின்னால் தூங்க முடிவு செய்தது. குட்டிகள் நீர்நிலையில் தங்கள் விளையாட்டு நேரத்தை அனுபவித்துக்கொண்டிருந்தனர், வேட்டையாடிய குட்டி மற்ற குட்டிகளுடன் "முடிந்தால் என்















இரையை பிடுங்கிக்கொள்'' விளையாட்டைத் தொடங்கியது. வாட்டர் போலோ விளையாட்டு நடப்பது போல் எனக்கு அந்த பயங்கர காட்சி தோன்றியது.

கேலிச் சண்டைகள், நீர் நிலைப்பகுதி முழுவதும் விளையாட்டுக் களமாக மாறியது. குத்துச்சண்டை, மல்யுத்தம், பந்தயம், குத்துதல், துரத்தல்... எந்த ஒரு புகைப்பட கலைஞனின் கண்களுக்கும் மகிழ்ச்சி அளித்திருக்கும். இந்த மறக்க முடியாத தருணங்களில் சிலவற்றை எனது கேமராவில் உறைய வைக்க முயற்சித்தேன். இது எனது சிறந்த காணல்களில் ஒன்றாக மாறியது.

நிகழ்ச்சி முடிவதற்குள், எனது கேமராவின் மெமரி கார்டில் பாதியை முடித்துவிட்டேன். எதிர்காலத்தில் நான் நிச்சயமாக பாந்தவ்கருக்கு வருவேன். ஆனால் இதுபோன்ற ஒரு அற்புதமான காட்சியை நான் மீண்டும் நேரில் பார்ப்பேனா?

எழுத்தாளர் RC கோரேகான் பார்க் உறுப்பினர், RID 3131

வடிவமைப்பு: S கிருஷ்ணப்ரதீஷ்

# அரசுப் பள்ளிகளில் கழிப்பறை கட்டும் சென்னை, இங்கிலாந்து ரோட்டரி

V முத்துகுமரன்

2011ம் ஆண்டு மக்கள்தொகை கணக்கெடுப்பின் படி இந்தியாவின் எழுத்தறிவு விகிதம் 74 சதவீதமாக இருப்பதை காட்டிய நிலையில், அரசுப் பள்ளிகளில் கழிப்பறைகள் கட்டுவதற்கும், மருத்துவ முகாம்கள் நடத்தவும் ஒரு முக்கிய முடிவை ரோட்டரி எடுத்தது. இந்தியா முழு எழுத்தறிவு பெற்ற நாடு என்ற சாதனையை எட்டும் நோக்கில் அடுத்த 10 ஆண்டுகளில் நாங்கள் 12,000 பள்ளிகளில் கழிப்பறைகள் கட்டினோம், மேலும் 24,000 மருத்துவ முகாம்களை நடத்தினோம். அப்போது எழுத்தறிவு விகிதம் 95 சதவீதமாக இருந்தது. இந்தியாவில் நாடு முழுவதும் உள்ள பள்ளிகளில் இதுவரை நாங்கள் 10,000 ஸ்மார்ட் வகுப்புகளை நிறுவியுள்ளோம் என்றார் RI இயக்குநர் A S வெங்கடேஷ்.

சென்னை புறநகர் பகுதியில் உள்ள சீதளாபுரத்தில் உள்ள அரசு உயர்நிலைப் பள்ளியில் மாணவர்களுக்கும், பல்துறை ஆசிரியர்களுக்குமான இரு கழிப்பறை தொகுதிகளைத் திறந்துவைத்து 900 மாணவர்கள், ஆசிரியர்கள், மாவட்ட கல்வி அதிகாரிகள் மற்றும் RID 3232 மாவட்டத்துக்கு உட்பட்ட மெட்ராஸ் ரோட்டரி சங்க உறுப்பினர்களிடையே பேசுகையில் அவர் இதைத் தெரிவித்தார். அவர் மேலும் கூறுகையில், போதிய கழிப்பறை வசதிகள் இல்லாத நிலையில் பெண்கள் நோய்களுக்கு ஆளாகிறார்கள். அதனைத் தொடர்ந்து அவர்கள் பள்ளிக்குச் செல்வதை விட்டு விடுகிறார்கள்.

மற்றொரு புறநகர் பகுதியான காட்டாங்குளத்தூரில் உள்ள பள்ளியில் மருத்துவ முகாம் நடத்திய போது, கடைசி பெஞ்சில் உட்கார்ந்து கொண்டு ஆசிரியரின் கேலிக்கு ஆளான 5ம் வகுப்பு மாணவருக்கு பார்வைக் குறைபாடு இருப்பது தெரியவந்தது. அவரால் கரும்பலகையில் எழுதியிருப்பதை தெளிவாகப் படிக்க முடியவில்லை. பின்னர் மருத்துவ முகாமில் அந்த மாணவருக்கு பார்வைக் கோளாறு இருப்பது கண்டுபிடிக்கப்பட்டு தேவையான சிகிச்சை அளிக்கப் பட்டது. அடுத்த சில மாதங்களில் அந்த மாணவர் வகுப்பில் நன்றாகப் படிக்கும் மாணவராக, தர வரிசையில் முன்னேறிய மாணவராக உருவானார். மாணவர்கள் கடுமையாக உழைத்துப் படிக்க வேண்டும். நல்ல மேற்படிப்பைத் தேர்ந்தெடுத்து படித்து வாழ்க்கையில் உயர்ந்த நிலையை அடைய வேண்டும். அதன் பின் ஏழைக் குழந்தைகளுக்கு உதவ வேண்டும் என்று அவர் கேட்டுக் கொண்டார். கழிப்பறைகளை முறையாக பராமரிக்கப்படுவதை உறுதிசெய்ய வேண்டும் என்று குறிப்பிட்ட அவர், 48 கழிப்பறைகளையும் பராமரிக்கும்

**இடதிலிருந்து:** RI *இயக்குனர்* A S *வெங்கடேஷ், வினோத் சரோகி,* DG J *ஸ்ரீதர் மற்றும் சங்கத்தின் தலைவர் தேர்வு ரவி சுந்தரேசன்.*



பொறுப்பை ஒவ்வொரு வகுப்புக்கும் ஒதுக்கவேண்டும். ஆண்டு இறுதியில் போட்டி நடத்தி கழிப்பறைகளை சிறப்பாக பராமரித்த மாணவர்க்கு பரிசு வழங்கலாம் என்றும் தெரிவித்தார்.

மாணவிகளின் முகத்தில் மகிழ்ச்சியின் வெளிப்பாட்டை காண முடிகிறது. இது எனது குழந்தைகால பருவத்தை நினைவு படுத்துகிறது. என்னுடைய கிராமத்தில் அப்போது பெண்கள் பல்வேறு காரணங்களுக்காக பள்ளிக்குச் செல்ல தயங்குவார்கள் என்று குறிப்பிட்டார் DG ஜெ. ஸ்ரீதர். சர்வதேச நிதியுதவி யுடனான இத்திட்டத்தை நான்கு ஆண்டுகளுக்குள் சிறப்பாக பூர்த்தி செய்தமைக்காக WASH திட்டத் தலைவர் மற்றும் தலைவராகத் தேர்வுபெற்றுள்ள ரவி சுந்தரேசனுக்கு அவர் பாராட்டுத் தெரிவித்தார்.

திட்டத்தை மேலோட்டமாக விவரித்தார் ரவி சுந்தரேசன். மெட்ராஸ் ரோட்டரி சங்கம், பாத் (RID 1200), Croydon Whitgift (RID 1145), Warwick (RID 1060), U.K மற்றும் அவர்கள் தொடர்புடையை RIDs ரூ.30 லட்சத்தில் கழிப்பறை தொகுதிகள் கட்டுவதற்கு ஒன்றிணைந்தன. மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு என இரு தொகுதிகளாக கழிப் பறைகள் கட்டப்பட்டன. இதில் மாணவ-மாணவிகளுக்கு என 6 கைகழுவும் நிலையங்களும், ஆசிரியர்களுக்கு 2 கைகழுவும் நிலையங்களும் ஏற்படுத்தப்பட்டன. அவற்றுக்கு போதுமான தண்ணீர் வசதியும் ஏற்படுத்தி தரப்பட்டது. 2016ம் ஆண்டு ரோட்டரி இண்டர் நேஷனலால் தொடங்கப்பட்ட WASH முன்னோடித் திட்டத்தில் மற்ற நாடுகளுடன் இந்தியாவும் இடம்பெற்றது. அடிப்படைக் கல்வி மற்றும் எழுத்தறிவு இலக்கு களுடன் ஒருங்கிணைக்கப்பட்ட பள்ளிகளில் குடிநீர் மற்றும் சுகாதாரத் திட்டங்களை செயல்படுத்துவது இதன் நோக்கமாகும் என்று ரவி குறிப்பிட்டார். பள்ளிகளில் ஆய்வு மேற்கொண்டு தேவைகளின் அடிப்படையில் WASH திட்டத்தை மெட்ராஸ் ரோட்டரி சங்கம் செயல்படுத்தி வருகிறது.

புதிய சுகாதார வசதிகளுடன் பள்ளி இப்போது 1,400 மாணவர் களுக்கு இடமளிக்கிறது மற்றும் UNICEF மற்றும் WHO தரக் குறியீட்டையும் கடந்துவிட்டது. இப்போது பள்ளி, மேனிலைப் பள்ளிக்கான முதன்மைத் தேவை களில் ஒன்றை பூர்த்தி செய்துள்ளது என்றார். “நலம்தானா” என்னும் சேவை நிறுவனம் கழிவறைகளை பயன்படுத்துவது, அவற்றை பராமரிப்பது குறித்து விழிப்புணர்வு அமர்வுகளை நடத்தியுள்ளது.

சங்கத்தின் தலைவர் மோகன் ராமன் உரையாற்றும்போது, இன்று கழிப்பறைத் தொகுதிகளை சிறப்பான முறையில் தொடங்கிவைப்பதற்கு காரணமான, இத்திட்டத்தை அடுத் தடுத்த கட்டங்களுக்கு வெற்றிகரமாக கொண்டு சென்ற முன்னாள் தலைவர்கள் என்.கே.கோபிநாத், எஸ்.என்.ஸ்ரீகாந்த், ரஞ்சித் பிரதாப் மற்றும் டாக்டர் விஜயபாரதிக்கு அவர் நன்றியும் பாராட்டும் தெரிவித்தார். மேலும் பள்ளியின் எதிர்காலத் தேவைகளை பூர்த்தி செய்ய தமது சங்கம் தயாராக இருப்பதாகவும் கூறினார். பல்வேறு பள்ளிகளில் 17 ஸ்மார்ட் வகுப்புகளை நிறுவவும் மேலும் 12 பள்ளிகளில் வகுப்பறைகளில் மின்விசிறி மற்றும் கரும்பலகை மற்றும் தேவை அடிப் படையில் WASH கட்டமைப்பு வசதிகளைச் செய்துதர தயாராக இருப்பதாகவும் அவர் கூறினார். இவை ஏப்ரல் மாதத்திற்குள் முடிவடையும் என்றும் மோகன் ராமன் குறிப்பிட்டார். ஆதிலெட்சுமி பில்டர்ஸ் நிறுவனம் சுகாதார கட்டமைப்புகளை ஏற்படுத்திக் கொடுத்தது. கழிப்பறைகள் அடுத்த மூன்றாண்டுகளுக்கு இலவசமாக பராமரிக்கப்படும் என்று அதன் உரிமையாளர் ஆர்.ரங்கசுவாமி உறுதியளித்தார்.

பள்ளிக்கு சுகாதார வசதிகளை ஏற்படுத்தித் தந்த ரோட்டரியினருக்கு நன்றி என்று மாவட்ட கல்வி அதிகாரி ஆர்.ராஜசேகரன் தெரிவித்தார். நாங்கள் இனி கழிப்பறைக்கு முன்னால் க்யூ வரிசையில் நிற்கவேண்டியதில்லை. முன்பு ஆண்களுக்கு 6, பெண்களுக்கு 4 கழிப்பறைகள் மட்டுமே இருந்தன. இப்போது புதிய கழிப்பறைகள் கட்டிக் கொடுத்துள்ளதால் நாங்கள் வகுப்புகளை தவறவிட வேண்டிய சூழ்நிலை ஏற்படாது என்று 8ம் வகுப்பு மாணவி கே.கீர்த்தனா மகிழ்ச்சி பொங்க தெரிவித்தார். பள்ளி முதல்வர் ஸ்வீட்லின் ராணி கூறுகையில், பள்ளிக்கு இன்னும் 8 வகுப்பறைகள், ஒரு அறிவியல் ஆய்வுக்கூடம், ஸ்மார்ட் வகுப்பறை தேவைப்படுகிறது. தற்போது 14 வகுப்பறைகள் உள்ளன. மொத்தம் 901 மாணவர்கள் படித்து வருகின்றனர். பள்ளி சுற்றுச்சுவரின் உயரத்தை சில மீட்டர்கள் அதிகரிக்க தேவை ஏற்பட்டுள்ளது என்றார்.

புகைப்படங்கள்: V முத்துகுமரன்

## தோற்றம்

*2015ம் ஆண்டில், மெட்ராஸ் ரோட்டரி சங்கம், அப்போதைய தலைவர் S N ஸ்ரீகாந்த் தலைமையில், உலகளாவிய போலியோ ஒழிப்பு ஜோதி ஓட்டத்துக்கு முன்முயற்சி மேற்கொண்டது. ரோட்டேரியன் N K கோபிநாத் “போலியோவை ஒழிப்போம்” ஜோதியை உலகம் முழுவதும் ஏந்திச் சென்றார்.*

*இங்கிலாந்து பயணத்தின் போது பாத் ரோட்டரி சங்கம் எங்கள் நிறுத்தங்களில் ஒன்றாக இருந்தது. இங்கிலாந்து சங்கத்தைச் சேர்ந்த ரோட்டேரியன் டேவிட் பிராட்டன், சுகாதாரத் திட்டம் குறித்து தன்னுடன் பேசும்படி, அவரது நண்பர் ரோட்டேரியன் பிரையன் ஜோகிம் இடம் கேட்டுக் கொண்டதாக கோபிநாத் நினைவுகூர்ந்தார். பிராட்டன் அங்கிருந்து ஜோதி ஓட்டத்தை கையாண்டார். அவர் என்னுடன் அடிக்கடி தொடர்பில் இருந்தார். கழிப்பறை தொகுப்பு கட்டுவது குறித்து முதன் முதலாக யோசனை தெரிவித்தவர் ஜோகிம்தான். அதற்கு, பிராட்டன் மற்றும் மெட்ராஸ் ரோட்டரி சங்கத்தின் முன்னாள் தலைவர்கள் ஆதரவு தெரிவித்தனர் என்று கோபிநாத் குறிப்பிட்டார்.*

# RID 2981 DisCon ல் குறிப்பிடத்தக்க சேவைகள் தொடங்கப்பட்டன

ரோட்டரி செய்திக்குழு




*தமிழக சபாநாயகர் M அப்பாவு நடமாடும் மார்பக புற்றுநோய் கண்டறிதல் சிகிச்சையகத்தை துவக்கி வைக்கிறார். (இடதிலிருந்து) DG S பாலாஜி, மாநாட்டு தலைவர் M A முகமது ஜியாவுதின், நீதிபதி R சுப்ரமணியன், RIPR V ராஜா சீனிவாசன் அவர் மனைவி ஜெயந்தி மற்றும் DRFC V ராமன்.*

DG S பாலாஜி தலைமையில் RID 2981, சென்னையில் மூன்று நாட்கள் மாவட்ட மாநாட்டை அண்மையில் கொண்டாடியது. இந்த நிகழ்வின் நினைவாக RI மாவட்டம் மூன்று மனிதாபிமான சேவைகளை தொடங்கி வைத்தது – ரூ.1.75 கோடி மதிப்பில் மார்பக புற்றுநோயை முன்கூட்டியே கண்டறிய உதவும் ஒரு மேமோகிராபி பேருந்து தமிழ்நாடு மற்றும் புதுச்சேரி முழுவதும் இயக்கப்படும். ரூ.2.25 கோடி மதிப்பிலான ப்ராஜெக்ட் ஆரஞ்ச் மூலம் தமிழகம் முழுவதும் 16 பார்வை மையங்கள் அமைக்கப்படும் மற்றும் நோயாளிகளுக்கு சேவை செய்ய 3 ஆம்புலன்ஸ்கள் இயக்கப் படும். மாநாட்டில் குலுக்கல் மூலம் தேர்ந் தெடுக்கப்பட்ட 3 ரோட்டரி சங்கங்களுக்கு ஆம்புலன்ஸ்கள் வழங்கப்பட்டன. அந்த வாகனங்களை வசதியற்ற நோயாளிகளுக்கு உதவ சங்கங்கள் பயன்படுத்தும். இத்திட்டங்களுக்கு உலகளாவிய மானியங்கள் மற்றும் ரோட்டேரியன்களின் கணிசமான பங்களிப்பு மூலம் நிதியளிக்கப்பட்டது.

DG பாலாஜி இந்த திட்டங்களுக்கு ரூ.1 கோடிக்கு மேல் பங்களிப்பு செய்து மாவட்டத்தின் முதல் AKS உறுப்பினரானார் என்று மாநாட்டின் RIPR ஆக இருந்த RID 3232 PDG ராஜா சீனிவாசன் தெரிவித்தார். ரோட்டரி தலைப்புகள் மற்றும் பிற அர்த்தமுள்ள அமர்வுகளையும் கொண்ட சமநிலையான மாநாட்டைப் பாராட்டிய அவர், இந்த நிகழ்வை சிறந்த மாநாடு களில் ஒன்றாக எளிதாக மதிப்பிட முடியும் என்றார். இந்த ஆண்டு, 1,500 புதிய உறுப்பினர்களைச் சேர்த்து 6,500 ரோட்டேரி உறுப்பினர்கள் கொண்ட மாவட்டம், ரோட்டரி அறக்கட்டளைக்கு சுமார் 300,000 டாலர் நன்கொடையளித்தது. 'இந்த மாவட்டத்தில் பெரிய நகரங்கள் எதுவும் இல்லை எனவே இது ஒரு இமாலய சாதனை' என்று RIPR கூறினார்.

RI மாவட்டத்தில் தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம், மயிலாடு துறை, கடலூர், புதுச்சேரி மற்றும் காரைக்கால் ஆகிய ஏழு வருவாய் மாவட்டங்களின் 135 ரோட்டரி சங்கங்கள் உள்ளடங்கும்.

மாநில சட்டப் பேரவைத் தலைவர் M அப்பாவு, தலைமை விருந்தினராகப் பங்கேற்று, மாவட்ட ரோட்டரி சங்கங்களின் சமூக சேவைப் பணிகளை பாராட்டினார், குறிப்பாக 135 பின்தங்கிய கிராமங் களைத் தத்தெடுத்தை பெரிதும் பாராட்டினார். கிராமங்களை மாற்று வதற்கும், முறையான உள்கட்டமைப்புடன் அவற்றைச் மேம்படுத்து வதற்கும் மாநில அரசின் திட்டத்தைப் போன்றே இத்திட்டம் இருப்பதாகவும் அவர் கூறினார். சிறப்பு விருந்தினராக சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளை நீதிபதி R சுப்பிரமணியன் கலந்து கொண்டார். ரோட்டரியின் பெண்கள் அதிகாரமளிக்கும் முயற்சி களைப் பாராட்டிய அவர், சுய சுகாதாரம் மற்றும் இளம் பருவத்தினரின் ஆரோக்கியம் குறித்து பள்ளி மாணவர் களுக்குக் கற்பிக்குமாறு ரோட்டரியன்களை வலியுறுத்தினார்.

மாநாட்டின் தலைவராக M A முகமது ஜியாவுதீன் தலைமை வகித்தார்.

பல்வேறு கலாச் சார நிகழ்ச்சிகள் மற்றும் பல்வேறு துறைகளில் இருந்து வரவழைக்கப் பட்ட சிறப்பு பேச்சாளர்கள் மாநாடு முழுவதும் பார்வையாளர்களை ஈடுபடுத்தி மகிழ்வித்தனர்.■

TRF உதவியுடன் நற்பணி

# ராசிபுரம் பள்ளியில் WinS திட்டம்

RC ராசிபுரம், RID 2982, புனித இதய உயர்நிலைப் பள்ளியில் ஒரு பன்னாட்டு நல்கைத் திட்டத்தைச் செயல்படுத்தி அதைப் பல புதிய தூய்மை வசதிகளைக் கொண்ட ஒரு மகிழ்ச்சிப் பள்ளியாக மாற்றியது. ரூ.27 லட்சம் மதிப்புள்ள இந்தத் திட்டம் 1,000க்கும் மேற்பட்ட குழந்தைகளுக்கு நன்மை தருகிறது.

ராசி ரோட்டரி மகிழ்ச்சிப் பள்ளித் திட்டத்தின்கீழ் இரண்டு அறிவார்ந்த வகுப்பறைகள், 25 மேசைக் கணினிகள், குடிநீருக்கான ஓர் RO அமைப்பு, சானிட்டரி பேட் எரியூட்டியுடன் பெண்களுக்கான ஒரு தனிக் கழிப்பறைத் தொகுதி, ஒரு கை கழுவும் நிலையம் ஆகியவை நிறைவேற்றப்பட்டன. சங்கத்தின் அறக்கட்டளைக் குழு இந்தப் பள்ளிக்குச் சென்று, பள்ளி மேலாண்மைக் குழு, தலைமை ஆசிரியருடன் உரையாடி ஒரு தேவை மதிப்பீட்டை நடத்தியது'' என்றார் இந்தச் சங்கத்தின் முதன்மைத் தொடர்பு நபர் N P ராமசுவாமி.



*புதிய ஸ்மார்ட் வகுப்பறையில் DG K சுந்தரலிங்கம், PDG K S வெங்கடேசன், சங்கத்தலைவர் அன்பழகன் மற்றும் N P ராமசாமி ஆகியோர்.*

அறிவார்ந்த வகுப்பறையைச் செயல்படுத்துவதுபற்றி டாடா எட்ஜ் நிறுவனம் ஆசிரியர்களுக்குப் பயிற்சியளித்தது. கணினிக் கல்விபற்றிய நேரடிப் பயிற்சியைக் கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி க்கான மாநில அவையைச் சேர்ந்த ICT ஆசிரியர்கள் வழங்கினார்கள். கை கழுவும் நிலையம், கழிப் பறைகளைச் செயல்திறனுடன் பயன்படுத்திக் கொள்வதுபற்றி மாணவர்களுக்குக் கற்றுத் தருவதற்காக இந்தச் சங்கம் ஒருங்கிணைக்கப்பட்ட மேம்பாட்டு முன்னெடுப்புகள் மற்றும் மாற்றுகள் அறக்கட்டளை (INDIA) என்ற NGO உடன் இணைந்து பணியாற்றியது.

இந்த WinS திட்டத்துக்காக $7,000 பங்களித்த பன்னாட்டுக் கூட்டாளர் RC கென்ட், RID 5030. நாங்கள் நான்கு மாதங்களில் இந்தத் திட்டத்தை நிறைவுசெய்தோம்; வசதிகளை ஒருங்கிணைத்தோம், கோவிடுக்காகப் பல காலம் மூடப்பட்டிருந்த பள்ளி மீண்டும் திறக்கப்படும்போது இந்த வசதி களைக் கிடைக்கச் செய்தோம்.

புதிய WinS வசதிகளின் தொடக்க விழாவில் DG K சுந்தரலிங்கம், IPDG K S வெங்கடேசன், மாவட்டப் பணிபுரிதல் தலைவர் PDG T S சண்முகசுந்தரம், DRFC பாபு கந்தசாமி கலந்துகொண்டார்கள். சங்கத் தலைவர் அன்பழகன் தொடக்க விழாவுக்குத் தலைமை தாங்கினார். முன்னாள் தலைவர் S கதிரேசன் மற்றும் திட்டத் தலைவர் S பாலாஜி செயல்படுத்தல் செயல்முறையைப்பற்றிப் பேசினார்கள்.■

# 25 ஆண்டுகளாக RCCயை பராமரித்து வரும் RC டியோனார்

**விவேக் கண்டேல்வால்**

25 ஆண்டுகளுக்கும் மேலாக, RC டியோனார், RID 3141ன் உறுப்பினர்கள், மஹாராஷ்டிராவின் ராய்காட் மாவட்டத்தின் கர்ஜத் தாலுகாவில் ரோட்டரி சமூகப் படையை (RCC) பராமரித்து வருகின்றனர்.

RCCயின் பணி என்பது ரோட்டேரியன்கள் மற்றும் அப்பகுதியில் வசிக்கும் கிராம மக்களைக் கொண்ட RCC குழுவும் சேர்ந்து செய்யும் கூட்டுப் பணியாகும். சங்கத்தின் தலையீட்டிற்குப் பிறகு டியோனாருக்கு அருகிலுள்ள கிராமங்கள் கணிசமான வளர்ச்சியைக் கண்டுள்ளன.

கர்ஜத் தாலுகாவில் உள்ள ஷெலு என்ற கிராமத்தில் சங்கம் தனது முதல் RCCஐ நிறுவியதே இதன் தொடக்கம். இன்று சங்கம் இந்த தாலுக்காவில் 46 கிராமங்களை உள்ளடக்கிய ஐந்து RCCகளை நிறுவியுள்ளது, இதனால் 100,000க்கும் மேற்பட்ட மக்களின் வாழ்க்கை மேம்படுத்தபட்டுள்ளது

போலியோவால் பாதிக்கப் பட்ட பல குழந்தைகள் கொண்ட கிராமங்களில் போலியோ ஒழிப்பை மையமாக வைத்து இந்தப் பயணம் தொடங்கியது.

RCCகளின் உதவியுடன் கிராமங்கள் முழுவதும் 130 போலியோ திருத்த அறுவை சிகிச்சைகளுக்கு சங்கம் நிதியுதவி செய்தது, இது உள்ளூர் மக்களிடையே ரோட்டரி உடனான பிணைப்பை ஆழப்படுத்த உதவியது.

இஸ்ரேல் சென்று விவசாய நடைமுறைகளைப் புரிந்துகொண்டு பயிர் விளைச்சல் மேம்படுத்துதலை கற்க உருவாக்கபட்ட தொழிற்பயிற்சிக் குழு (VTT) திட்டத்திற்கு தேவையான கிராமவாசிகளை அடையாளம் காண RCCகள் உதவியது. பல ஆண்டு களாக, உள்ளூர் உற்பத்திகளை மேம்படுத்துவதற்கு இக்கற்றல் பெரும் பங்காற்றியுள்ளது.

RCCக்கள் மக்களின் வாழ்க்கை தரத்தை உயர்த்துவதற்கு உதவிய மற்ற திட்டங்கள் இயற்கை விவசாயத்தை ஊக்குவித்தல் மற்றும் பெண்களுக்கு அதிகாரமளித்தல் ஆகும். கிராம மேம்பாட்டு முயற்சி களில் தடுப்பு அணை திட்டங்கள், கிராம சமூகங்கள் மற்றும் பள்ளி களுக்கு குடிநீர் வழங்குதல், பொது பயன்பாட்டு கழிப்பறைகள், மருத்துவ வசதிகள், பள்ளிகளில் உள்கட்டமைப்பை மேம்படுத்துதல், கிராமங்களில் விளையாட்டை ஊக்குவித்தல் மற்றும் இளைஞர்கள் மற்றும் பெண்களுக்கு தொழில் பயிற்சியளித்தல் ஆகியவை அடங்கும்.

மேற்கூறியவை ஒரு முழுமையான பட்டியலாக இல்லாவிட்டாலும், கருத்தாக்கத்தில் இருந்து நடைமுறைப்படுத்துதலுக்கு வழிவகுத்து, நிலைத்தன்மை கண் காணிக்கப்படுவதை உறுதி செய்வது மிகவும் முக்கியமானது.

சங்க உறுப்பினர்களான குல்பூஷன் ஜெட்லி, சதீஷ் லம்பா, ஜாங்கர் கட்கரி, அஜித் பப்பு, நாகேஷ் மற்றும் கண்ணன் ஆகியோர் தற்போதைய வளர்ச்சிக்கு மகத்தான பங்களிப்பை வழங்கியுள்ளனர். ஒவ்வொரு ஆண்டும் மாறும் ஒவ்வொரு சங்கத்தலைவர்களும் பல ஆண்டுகளாக இயங்கும் திட்டங்கள் மற்றும் முயற்சிகளின் தொடர்ச்சிக்கு வலுவான ஆதரவை வழங்கியுள்ளனர்.

உள்ளூர் மட்டத்தில் தலைமைத்துவ வளர்ச்சி ஒரு குறிப்பிடத்தக்க பங்கை வகிக்கிறது. அர்ஜுன் தாரே, சீதாராம் போன்ற தலைவர்கள் RCCகளை இன்றைய உயரிய நிலைக்கு கொண்டு சென்றுள்ளனர்.

இந்த அர்ப்பணிப்பு வேலையின் மூலம் வந்த குறிப்பிடத்தக்க மாற்றங்களில் ஒன்று புதிய தலை மைத்துவத்தை உருவாக்குதலாகும். அக்டோபர் 2021ல், RCC பிவ்புரி அதன் முதல் பெண் தலைவராக அர்ச்சனா தேஷ்முக்கை நியமித்தது.



1. Rtn *உஷா தேசாய் ஒரு கிராமத்தில்* RCC *அமைத்த ஆழ்துளை கிணற்றை துவக்கி வைக்கிறார்;* 2. *கிராம குழந்தைகள்* RCC *பதவியேற்பு விழா ஒன்றில்;* 3. AKS *உறுப்பினர் குல்புஷன் ஜெட்லி ஆழ்துளை கிணறு ஒன்றை துவக்கி வைக்கிறார்;* 4. RCC *கிராமப்பள்ளி ஒன்றுக்கு மேஜைகளை வழங்கியுள்ளது.*

இக்கட்டுரையின் எழுத்தாளர் RC டியோனார், RID 3141ன் உறுப்பினர்.



2




3


4

# பார்வைக் குறைபாடு கொண்டோருக்கு வழிகாட்டும் சோலாப்பூர் பள்ளி

V முத்துகுமரன்

கோவிட் நோய்ப் பரவலால் இரண்டு ஆண்டுகளாக மூடப்பட்டிருந்த சோலாப்பூரில் உள்ள பாய்ருரதன் தமானி பார்வைக் குறைபாடு கொண்டோர் பள்ளி ஃபிப்ரவரி முதல் வாரத்தில் மீண்டும் திறக்கப்பட்டது. இதையடுத்து, பார்வைக் குறைபாடு கொண்ட 48 சிறுவர்களும், சிறுமியரும் மகிழ்ச்சி, நிம்மதி உணர்வை வெளிப்படுத்தினார்கள். ஸ்மார்ட் ஃபோன்களைக் கையாளக்கூடிய மூத்த மாணவர்களுக்கு நாங்கள் ஸ்மார்ட்ஃபோன்களை வழங்கினோம், பார்வைக் குறைபாடு கொண்டோருக்காக வடிவமைக்கப் பட்ட ஒரு மொபைல் செயலி வழியாக அவர்கள் முடக்கத்தின் போதும் தடையின்றித் தங்கள் பாடங்களைக் கற்றுக்கொண்டார்கள்'' என்கிறார் 7ம் வகுப்புவரை உள்ள பிரெய்லி பள்ளியை நடத்தும் RC சோலாப்பூர் நார்த், RID 3132, தலைவர் டாக்டர் விஜய் தெகாவ்ன்கர்.

பார்வைக் குறைபாடு கொண்டோருக்கான இந்த உண்டுறை பள்ளி 1987முதல் இலவசக் கல்வி, உணவை வழங்கிவருகிறது. பார்வைக் குறைபாடு கொண்டோருக்குக் கல்வி வழங்குவதற்காக நாங்கள் நிலம், கட்டடத்தைத் தேடிவருகிறோம் என்று கேள்விப்பட்ட சோலாப்பூர் நகராட்சி 2.5 ஏக்கர் நிலத்தில் உள்ள சமூகக் கட்டடமான சமாஜ் மந்திரை எங்களுக்கு வழங்கியது'' என்று நினைவுகூர்கிறார் இவர். சோலாப்பூரில் நிறைய நிலத்துக்கு உரிமையாளர், ஒரு பஞ்சாலை




*சங்கத்தின் முன்னாள் தலைவர் Dr சித்தேஷ்வர் வாலே, லலிதா சோமானி, பிரகாஷ் சோமானி, சங்கத்தலைவர் Dr விஜய் தெகாவன்கர், பள்ளி செயலாளர் சந்தோஷ் பண்டாரி, பள்ளி தலைவர் பிரகாஷ் தர்ஷனலெ மற்றும் திட்டத் தலைவர் கதம் பள்ளி குழந்தைகளுடன்.*

உள்ளிட்ட பல தொழில்களை நடத்தி வருகிற தொழிலதிபர் பிரேம்ரதன் தமானி இந்த அரசுக் கட்டடத்தைப் புதுப்பிக்க முன்வந்தார், அதில் இன்னொரு தளத்தைச் சேர்த்தார். புதிய பள்ளிக்கு அவருடைய மறைந்த தந்தை பாய்ருரதன் பெயர் சூட்டப்பட்டது. இந்தப் பள்ளி பிரெய்லியில் பாடத்திட்டத்தைக் கற்பிப்பதுடன் ஊதுவத்திகள், மெழுகுவத்திகள், அலுவலகக் கோப்புகள் மற்றும் உறைகளைச் செய்வது போன்ற தொழில் சார்ந்த பயிற்சிகளையும் மாணவர்களுக்கு வழங்குகிறது. 2021ல் நாங்கள் மாற்றுத் திறனாளிகளுக்கு வசதியான நான்கு கைத்தறிகளை (கால் இல்லாத் தறிகள்) நிறுவினோம். பார்வைக் குறைபாடு கொண்ட மாணவர்கள் இதை எளிதில் கற்கலாம். வீணான துணிகளைப் பயன்படுத்தி மேசை விரிப்பு, குளியலறைப் பாய்கள், திரைச்சீலைகள், நாற்காலி, சோஃபா உறைகள், மற்ற தனித்துவமான ஆடைகள் நெய்யப்படுகின்றன'' என்றார் அவர்.

தீபாவளி, சுதந்திர தினம், குடியரசு நாள் போன்ற திருவிழாக்கள், சிறப்பு நிகழ்ச்சிகளின் போது மாணவர்கள் நடத்தும் பண்பாட்டு நிகழ்ச்சிகளை நாங்கள் ஆவலுடன் எதிர்பார்க்கிறோம். பார்வைக் குறைபாடு கொண்ட இந்தக் குழந்தைகள் மிகுந்த ஆர்வத்துடன் நிகழ்ச்சிகளை நடத்துகிற அர்ப் பணிப்பைப் பார்த்து நம் கண்கள் திறக்கின்றன'' என்றார் டாக்டர் தெகாவ்ன்கர். 80 மாணவர்களுக்குக் கற்றுத்தரும் வசதிகள் எங்களிடம் உள்ளன. ஆனால், நோய்ப்பரவலால் இப்போது 48 பேர்தான் இங்கு பயில்கிறார்கள்.

இந்தச் சங்கத்தின் முன்னாள் தலைவர் பூனம் தியோதாஸ் (தலா சுமார் ரூ.60,000 மதிப்புள்ள) இரண்டு கைத்தறிகளைக் கொடையளித்தார், மற்ற இரண்டு நெய்யும் கருவிகளை Rtnகள் டாக்டர் சித்தேஷ்வர் வாலெ, ஆனந்த் சதுல் ஆதரித்தார்கள். 7ம் வகுப்பிலிருந்து சராசரியாக 25 முதல் 30 மாணவர்கள் தேர்ச்சி பெறுகிறார்கள். இதுவரை சுமார் 400 மாணவர்கள் தங்கள் பள்ளிப் படிப்பை இங்கு நிறைவுசெய்திருப்பார்கள்''




*சங்கத்தலைவர் Dr விஜய் தெகாவன்கர், பள்ளி செயலாளர் பண்டாரி மற்றும் பள்ளி தலைவர் தர்ஷனலெ முன்னிலையில் டிஜிட்டல் கணினி இயந்திரத்தை பள்ளி மாணவர்களிடம் வழங்குகின்றார்.*

என்கிறார் சங்கத்தின் உறுப்பினர் நிலை இயக்குநர் M K அஷ்டாகி. உண்மையில், இந்தப் பள்ளியின் செயல்திறனைக் கண்டு நிறைவு கொண்ட மாநில அரசு, தரவுகளைப் (மொழி, கணக்கு) பிரெய்லி மொழிக்கு மாற்றக்கூடிய, ரூ.9 லட்சம் மதிப்புள்ள ஒன்பது டிஜிட்டல் கணினி நிரல் இயந்திரங்களைக் கொடையளித்துள்ளது. எங்கும் எடுத்துச் செல்லக்கூடிய இந்த டிஜிட்டல் இயந்திரங்கள் மாணவர் களுடைய அறிவை மேம்படுத்தும். ஏனெனில், இப்போது அவர்கள் இணையத்திலிருந்து பலதரப்பட்ட உள்ளடக்கங்களைப் பெறலாம், நூலகத்திலிருந்து பல துறைகளைச் சேர்ந்த நூற்றுக்கணக்கான நூல்களைக் காணலாம். அவர்கள் தங்களுடைய பாடங்களை இன்னும் நன்றாகப் புரிந்துகொள்ள இது உதவும்'' என்கிறார் Dr தெகாவ்ன்கர்.

இந்தப் பள்ளியின் தலைமை ஆசிரியர் பிரகாஷ் தர்ஷனலெ இதன் முன்னாள் மாணவர் ஆவார். ஆறு ஆசிரியர்களுடன் இவர் இந்தப் பள்ளியை நடத்துகிறார். இவர்களுடைய சம்பளங்களை மாநில அரசு வழங்குகிறது. மாணவர்கள் பள்ளியிலிருந்து தேர்ச்சி பெற்றதும், அவர்கள் மற்ற வழக்கமான பள்ளிகளில் அனுமதி பெறுவதற்குத் தலைமை ஆசிரியர் உதவுகிறார். பட்டம் பெற்றபின் அவர்களுக்கு MSCIT (மகாராஷ்டிர மாநிலக் கணினி இணையப் பயிற்சிச்) சான்றிதழ்கள் வழங்கப்படுகின்றன. அவர்கள் தனியார் நிறுவனங்கள் மற்றும் அரசு அலுவலகங்களில் வேலை வாய்ப்பு பெறுவதற்கு இவை உதவும். தமானி பள்ளி தன்னுடைய முன்னாள் மாணவர் கள் பட்டம் பெறும்வரை அவர் களுடைய அன்றாடச் செலவுகள், பயிற்சி கட்டணத்தைக் கவனித்துக் கொள்கிறது. இந்தப் பள்ளிக்குப் பொதுமக்களும் பெருநிறுவனங்களும் தொடர்ந்து நன்கொடைகளை அளிப்பதால் இந்த முன்னாள் மாணவர்கள் மேற்படிப்புக்குச் செல்லும் போது விடுதியில் தங்க அனுமதிக்கப்படுகிறார்கள். பள்ளி யுடனான இவர்களுடைய உறவு வாழ்நாள் முழுவதும் தொடர்கிறது. ஏனெனில், இந்தக் கல்வி நிறுவனம் பட்டம் பெற்ற மாணவர்கள் வேலை தேட உதவுகிறது, வலைப்பின்னலின் வழியாக அவர்களுக்குப் பொருத்த மான துணையைக் கண்டுபிடித்து, தாராளமான நிதி உதவியை வழங்கி அவர்களுக்குத் திருமணமும் செய்து வைக்கிறது என்கிறார் Dr தெகாவ்ன்கர்.

இந்தச் சங்கம் இந்தப் பள்ளியின்



*கைத்தறிகளை பள்ளிக்கு வழங்கும் விழாவில் பள்ளி மற்றும் சங்க குழுவினருடன் மறைந்த ப்ரேம்ரதன் தமானியின் மனைவி விமலாதேவி மற்றும் மகன் ராஜேஷ்.*

மாதச் செலவாகிய ரூ.40,000 முதல் ரூ.45,000 வரையிலான தொகையை உறுப்பினர் பங்களிப்புகள், பொதுமக்கள் நன்கொடைகள், பெருநிறுவனங்களுடைய நிதியளித்தலின் மூலம் பெறுகிறது. அத்துடன், மறைந்த நன்கொடையாளர் பிரேம்ரதன்

*7ம் வகுப்பிலிருந்து சராசரியாக 25 முதல் 30 மாணவர்கள் தேர்ச்சி பெறுகிறார்கள். இதுவரை சுமார் 400 மாணவர்கள் தங்கள் பள்ளிப் படிப்பை இங்கு நிறைவுசெய்திருப்பார்கள்.*

**MK அஷ்டாகி**
சங்கத்தின் உறுப்பினர்
நிலை இயக்குனர்.

குடும்பம் ஒவ்வோர் ஆண்டும் பள்ளிக்குக் குறைந்தது ரூ.2 லட்சம் வழங்குகின்றனர்'' என்கிறார் அஷ்டாகி. 1974ல் அமைக்கப்பட்ட இந்தச் சங்கத்தின் 75 உறுப்பினர்களும் ஒவ்வொரு மாதமும் பள்ளியின் நிர்வாகச் செலவுகளுக்குப் பங்களிக்கிறார்கள். இப்பள்ளியின் முன்னாள் மாணவர்கள் பலர் இப்போது மாவட்ட ஆட்சி தலைவர் அலுவலகங்களில் உயர்ந்த பொறுப்புகளில் உள்ளார்கள்; சிலர் பொறியாளர்களாக, அரசு ஊழியர்களாகச் சிறந்து விளங்குகிறார்கள்'' என்கிறார் இவர்.

இதற்கு இவர் சொல்லும் ஓர் எடுத்துக்காட்டு, சில ஆண்டுகளுக்கு முன், அதுல் தாகுர் என்ற மாணவருக்குப் பள்ளிகளில் அனுமதி கிடைக்கவில்லை. இதை எண்ணி அதுலின் பெற்றோர் மிகவும் வருந்தினார்கள். ஆனால், தமானி பள்ளியைச் சேர்ந்த ஆசிரியர் குழு ஒன்று பர்ஷி வட்டத்தில் உள்ள தாகுருடைய கிராமத்துக்குச் சென்றபோது, தாகுருடைய பெற்றோரிடம் பேசினார்கள், அவர்களுடைய இடத்திலிருந்து சுமார் 50 கிமீ தொலைவில் உள்ள தங்களுடைய உண்டுறை பள்ளிக்குச் சென்று தங்கிப் படிக்கத் தாகுரை அனுமதிக்கும்படி கேட்டு அவர்களைச் சம்மதிக்கவைத்தார்கள். இப்போது அவர் 7ம் வகுப்பு படித்துக் கொண்டிருக்கிறார். தாகுர் அவருடைய வகுப்பில் உயர்ந்த மதிப்பெண்களை வாங்குகிறார், மாவட்டச் சதுரங்க விளையாட்டு வீரராகவும் உள்ளார். இப்போது அவருடைய பெற்றோர் மிகவும் மகிழ்ச்சியாக இருக்கிறார்கள். ஏனெனில், அவர்களுடைய மகன் தனக்கென்று ஒரு நல்ல எதிர்காலத்தை அமைத்துக்கொள்ள இயலும்.

இந்தச் சங்கத்தின் இன்னொரு நிரந்தரத் திட்டம், ராதாகிசன் ஃபாம்ரா கேட்டல் குறைபாடு மற்றும் பேச்சுக் குறைபாடு கொண்டோர் பள்ளி. 1977ல் ஒரு தொண்டு அறக்கட்டளையிடமிருந்து இந்தப் பள்ளியை ஏற்றுக் கொண்டு நடத்திவருகிறது இந்தச் சங்கம். இப்போது இங்கு 87 பேர் பயில்கிறார்கள்.■

# திட்டங்களைப்பற்றிய அறிமுகங்கள்

ரோட்டரி செய்திக் குழு

## மகளிர்க்கு தொழில் பயிற்சி



*மாணவிகளுக்கு பயிற்சி சான்றிதழ்கள் வழங்கப்படுகின்றது.*

RID 3000-த்துக்கு உட்பட்ட திருச்சிராப்பள்ளி பட்டர்ஃபிளைஸ் ரோட்டரி சங்கம், நிப்பான் பெயின்ட்ஸ் என்ற தனியார் நிறுவனத்துடன் இணைந்து ஏழைப் பெண்கள் சுவரோவியம் கற்க 15 நாள் தொழிற் பயிற்சி அளித்தது. பயிற்சியை நிறைவு செய்த 8 பெண்களுக்கு சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

## விருது பெற்றார் PDG ராஜா ஸ்ரீனிவாசன்



PDG V *ராஜா சீனிவாசன் அவர்களுக்கு தமிழக ஆளுநர்* R N *ரவி விருது வழங்குகிறார்.*

அண்ணா பல்கலைக் கழகத்தின் அழகப்பா தொழில்நுட்பக் கல்லூரி, சென்னை மற்றும் அழகப்பா தொழில்நுட்பக் கல்லூரி முன்னாள் மாணவர்கள் சங்கம் இணைந்து சிறந்த மேலாண்மை மற்றும் தொழில் முனைவோருக்கான விருதை PDG V ராஜா ஸ்ரீனிவாசனுக்கு வழங்கி கௌரவித்தது. இந்த விருதை தமிழக ஆளுநர் R N ரவி வழங்கினார்.

## கேபினட் அமைச்சரான ரோட்டேரியன்



*சுகாதார அமைச்சராக பதவியேற்றுள்ள* Rtn Dr *விஜய் சிங்லாவுடன் ரோட்டரியினர்.*

RID 3090-க்கு உட்பட்ட மான்ஸா ரோட்டரி சங்கத்தின் உறுப்பினர் Dr விஜய் சிங்லா, பஞ்சாபில் சுகாதார அமைச்சராகப் பதவியேற்றுள்ளார். 1992ம் ஆண்டு பதிண்டா மாவட்டத்திலிருந்து மான்ஸா தனி மாவட்டமாக உருவான பிறகு, மாவட்டத்தில் கேபினட் அமைச்சரான முதல் MLA விஜய்சிங்லா என்பது குறிப்பிடத்தக்கது.

## காரமடையில் புதிய விளையாட்டு வசதி



DG K *சண்முகசுந்தரம் விளையாட்டு வதிகளை துவக்கி வைக்கிறார்.*

RID 3203-க்கு உட்பட்ட காரமடை ரோட்டரி சங்கம், வாலிபால், ஷட்டில் மற்றும் கிரிக்கெட் வலைப் பயிற்சி செய்வதற்கான பயிற்சி மைதானத்தை ரூ.7 லட்சத்தில் நிறுவியுள்ளது. இந்த புதிய விளையாட்டு வசதியை DG K சண்முகசுந்தரம் தொடங்கிவைத்தார்.

# பள்ளிகளில் WASH வசதிகளை நிறுவுகிறது RC மெட்ராஸ் சென்ட்ரல்


V முத்துகுமரன்

RC மெட்ராஸ் சென்ட்ரல் தன்னுடைய மகிழ்ச்சிப் பள்ளிகள் திட்டத்தின் முதல் கட்டத்தில், பள்ளிகளில் WASH (WinS) முன்னெடுப்பில் மூன்று அரசுப் பள்ளிகளில் பல தூய்மை வசதிகளைக் கட்டமைத்தது, வகுப்பறைகளைப் புதுப்பித்தது. சுமார் 4,400 மாணவர்களுக்குப் பயன்படும் இந்தத் திட்டம் பன்னாட்டு நல்கை ($31,000), CSR நிதி மற்றும் உறுப்பினர் பங்களிப்புகள் வழியாக நிறைவேற்றப்பட்டது.

DG J ஸ்ரீதர் ஷெனாய் நகர் சென்னை பெண்கள் HS பள்ளிக்கு மூன்று கை கழுவும் நிலையங்கள் (HWS), ஆறு RWH கிணறுகள், புதுப்பிக்கப்பட்ட ஒரு RO அமைப்பு, மற்றும் மதிய உணவுப் பகுதி ஆகியவற்றைத் தொடங்கி வைத்தார். இந்தச் சங்கம் 1,690 மாணவர்களைக் கொண்ட இந்தப் பள்ளியில் மின் இணைப்புகளையும் புதுப்பித்துள்ளது, இந்தத் திட்டத்தைச் சென்ற ஆண்டு இந்தச் சங்கத்தின் IPP சுப்ரியா சுந்தரராமன் தொடங்கினார்.

மாணவர்கள் முறையாகக் கை கழுவக் கற்றுக்கொள்ளவேண்டும், பின்னர் தனிப்பட்ட தூய்மையைப் பற்றிப் பள்ளி உங்களுக்கு என்ன கற்றுத்தந்தது என்று உங்கள் பெற்றோருக்குத் தெரிவியுங்கள், அது உங்கள் ஒட்டுமொத்தக் குடும்பத்துக்கும் நல்லது'' என்று கேட்டுக்கொண்டார் DG ஸ்ரீதர்.

இச்சங்கத்தின் சிறப்புத் திட்டங்கள் ஆலோசகர், இயக்குநரான வினோத் சரோகி பேசுகையில், மாதச் சுழற்சி தூய்மையை பற்றிய முறையான பயிற்சி மாணவிகளுக்கு வழங்கப்படும் என்றார். WinS திட்டத்தைச் செயல்படுத்துவதற்குத் தலைமை ஆசிரியை முழு ஒத்துழைப்பு, ஆதரவை வழங்கி யுள்ளார். இப்பள்ளி ஒரு மாதிரிப் பள்ளியாக இருக்கவேண்டும் என்று நாங்கள் விரும்புகிறோம். புதுப்பிக்கப்பட்ட மதிய உணவுப் பகுதி WASH வசதிகளில் மிகச் சிறந்த ஒன்றாகும்'' என்றார். வேர்ல்ட் விஷன் குழு ஒன்று HWSஐ முறையாகப் பயன்படுத்துதல் மற்றும் பராமரித்தலைப்பற்றி மாணவர்களுக்கு ஓராண்டுப் பயிற்சி வழங்கும் என்றார் அவர். அத்துடன்,



DG J *ஸ்ரீதர், சங்கத்தலைவர்* K A V *ரமேஷ்குமார், சங்க ஆலோசகர் வினோத் சரோகி மற்றும் சுப்ரியா சுந்தரராமன் ஆகியோரும் உள்ளனர்.*



DG J ஸ்ரீதர் பள்ளியில் மதிய உணவு கூடத்தை திறந்து வைக்கிறார். சங்க செயலாளர் ஹரிஷ்குமார், DRFC M அம்பலவாணன், சங்க தலைவர் ரமேஷ் குமார், வினோத் சரோகி, S N பாலசுப்ரமணியன் மற்றும் M கோபிநாத் ஆகியோரும் உள்ளனர்.

இந்தக் கற்றல் செயல்முறையைச் சாத்தியமாக்குவதற்குப் பெற்றோர் ஆசிரியர் அமைப்பு உதவும். ஒட்டு மொத்தத் திட்டச் செலவு சுமார் ரூ.45 முதல் ரூ.50 லட்சம் வரை இருக்கும் என்றார் சரோகி.

**மேலும் இரண்டு பள்ளிகள்**

புறநகர்ப் பகுதியாகிய பொன்னேரியில் ஜெய்கோபால் கரோடியா அரசுப் பெண்கள் HS பள்ளி, கத்திவாக்கத்தில் அரசு HS பள்ளியில் இதே போன்ற மகிழ்ச்சிப் பள்ளி வசதிகளைத் திறந்து வைத்தார் ஸ்ரீதர். ஜெய்கோபால் பள்ளியில் நான்கு புதிய HWSகள் அமைக்கப் பட்டன, இரண்டு கழிப்பறைத் தொகுதிகள், 40 வகுப்பறைகளைக் கொண்ட நான்கு கட்டடங்கள் புதுப்பிக்கப்பட்டன. கத்திவாக்கம் பள்ளியில் இந்தச் சங்கம் 15 வகுப்பறைகளையும் ஒரு பெண்கள் கழிப்பறைத் தொகுதியையும் புதுப்பித்தது, மூன்று HWSகளை வழங்கியது, ஒன்று கூடல் தளத்தைப் பழுது பார்த்தது.

இரண்டாவது கட்டத்தில் இந்தச் சங்கம் மேலும் மூன்று அரசுப் பள்ளிகளில் WinS மற்றும் இதர வசதிகளை அமைக்கும், கட்டடங்களைப் புதுப்பிக்கும். இந்தத் திட்டத்தின் பன்னாட்டுக் கூட்டாளர்கள், RCகள் கடாரக்யுய்-கிங்ஸ்டன், RID 7040, கனடா மற்றும் மெடிசின் ஹேட், RID 5360, ஆஸ்திரேலியா.

சங்கத் தலைவர் KAV ரமேஷ் குமார் பேசுகையில், எங்கள் சங்கத்துக்கு 40 வயதாகிறது, இங்குள்ள 95 உறுப்பினர்கள் நீடித்திருக்கிற, பன்முகத்தன்மை கொண்ட திட்டங்களை நடத்தி யுள்ளோம் என்றார். துணைக் கல்வி அலுவலர் N தங்கமணி, சங்கச் செயலாளர் ஹரீஷ் குமார், DRFC M அம்பலவாணன், பிற உறுப்பினர்கள் இந்த நிகழ்ச்சியில் பங்கேற்றார்கள்.■

# அரசு மருத்துவமனைக்கு மருத்துவ உபகரணங்களை பரிசாக வழங்கியது RC சண்டிகர்

ரோட்டரி செய்திக் குழு



PRIP ராஜேந்திர சாபூ மற்றும் சண்டிகர் ஆலோசகர் தரம்பால் HDU திறப்பு விழாவில்.

RC சண்டிகர், RID 3080, அரசு மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவ மனைக்கு ரூ.53 லட்சம் செலவில் காற்று நிறப்பட்ட மெத்தைகள் கொண்ட 16 இயந்திரமயமாக்கப்பட்ட படுக்கைகள், UPS பொருத்தப்பட்ட உயர்தர மானிட்டர்கள் மற்றும் ஒரு சிறிய எண்டோஸ்கோபிக் கருவி ஆகியவை கூடிய ஹை டிபென்டன்சி யூனிட்டை (HDU) நிறுவியது. சண்டிகரின் நிர்வாக ஆலோசகர் தரம் பால், HDUஐத் திறந்து வைத்து, மருத்துவமனையில் நோயாளிகளுக்கு போதுமான வசதிகளை வழங்குவதில் ரோட்டேரியன்களின் உடனடி செயல் பாட்டினை பாராட்டினார். RC கிரேட்டர் லேக் சார்லஸ், USA மற்றும் TRF ஆகியவற்றின் உதவியுடன் இந்த திட்டம் செயல்படுத்தப்பட்டது என்று திட்ட ஒருங்கிணைப்பாளர் PDG மதுகர் மல்ஹோத்ரா கூறினார். இந்த நிகழ்ச்சியில் PRIP ராஜேந்திர சாபூ, சங்கத் தலைவர் ஜஸ்பால் சிங் சித்து மற்றும் மருத்துவமனை அதிகாரிகள் கலந்து கொண்டனர்.■

இசையும் & இனிமையும்

# தலத் மஹ்மூத்: அவருக்கு நிகர் அவரே!

SR மது

மற்றவர்களால் நகல் எடுக்கமுடியாத ஒரே பாடகர் தலத் மஹ்மூத் என்று லதா மங்கேஷ்கர் ஒரு முறை குறிப்பிட்டார். பிரபல இசையமைப்பாளர் அனில் விஸ்வாஸ் கூறுகையில், ரஃபி, கிஷோர் மற்றும் முகேஷ் போன்று பாடக்கூடியவர்கள் பலர் இருக்கிறார்கள். ஆனால், தலத் மஹ்மூத் போல பாடக் கூடியவரை நாம் பார்க்க முடியாது. ஏனெனில் அவரது குரல் தனித்துவமானது என்றார்.

அவரது குரலின் இனிமை, ஏற்ற இறக்கம், உச்சரிப்பு இவற்றை யாராலும் காப்பியடிக்க முடியாது. ஆனால், மதுபாலாவின் அழகைவிட தலத்தின் பாடல்கள் ரசிக்கத்தக்கவை. தலத்தின் பாடல்கள், தண்ணீரில் மிதந்து செல்லும் நிலவொளியைப் போன்றவை என்று “அவுட்லுக்” பத்திரிகை விமர்சித்துள்ளது. ஈரமான பூமியில் மென்மையான இதழ்கள் போல அவரது பாடல்கள் கேட்பதற்கு இனிமையானவை என்கிறார் கணேஷ் அனந்தராமன்.

### கஜல் நாயகன்

கஜல் பாடல்களின் நாயகனாக கருதப்பட்டவர் தலத். (அன்பை வெளிப்படுத்தும் காதல் கவிதைகள், ஒருதலைக் காதல் மற்றும் காதல் தோல்வியை வெளிப்படுத்தும் பாடல்கள்). மன்னர்கள் பலர் அவரது ரசிகர்களாக இருந்துள்ளனர். ஆப்கானிஸ்தான் மன்னர் ஜாஹிர் ஷா, ஒரு பாரசீக கம்பளத்தையும், நேபாள மன்னர் வீரேந்திரா மணிமாலையையும் அவருக்குப் பரிசாக வழங்கியுள்ளனர். மன்னர் வீரேந்திரரின் பாடலுக்கு இசையமைத்து பாடி அவரை மகிழ்ச்சி கடலில் ஆழ்த்தியுள்ளார் தலத். அமெரிக்கர்கள் தலத் மஹ்மூத்தை, தங்கள் நாட்டின் பிராங்க் சினாட்ரா வுக்கு ஒப்பிட்டு பேசியதும் உண்டு. இந்தியாவின் பிராங்க் சினாட்ரா, 1998 ஆம் ஆண்டு மே மாதம் 9ம் தேதி இறந்தார். அமெரிக்காவின் பிராங் சினாட்ரா அதற்கு ஐந்து நாட்களுக்குப் பிறகு மறைந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

தலத் தனது 20 ஆண்டுக்கால இசை வாழ்க்கையில் 450 ஹிந்தி திரைப்படப் பாடல்கள் உள்பட 12 மொழிகளில் 747 பாடல்களைப் பாடியுள்ளார். லதா மங்கேஷ்கர், முகமது ரஃபி மற்றும் கிஷோர்குமாருடன் ஒப்பிடும்போது அவர் பாடிய பாடல்கள் மிகவும் குறைவுதான்!

ஆனாலும், உலகெங்கிலும் உள்ள லட்சக்கணக்கான ரசிகர்களின் மனதில் அவர் இடம்பிடித்திருந்தார். அவரது பெயரைக் கேட்டாலே ரசிகர்களின் கண்கள் குளமாகிவிடுகின்றன. அவர்கள், தங்களின் மறுவடிவமாகவே அவரை பார்க்கின்றனர். அவரது மென்மையான, இனிமையான குரல், சோகத்தை வெளிப்படுத்தும்



தன்மை, இசையுடன் கலந்த உச்சரிப்பு ஆகியவை அதிர்வை ஏற்படுத்தும். காதல், சோகம், உருக்கம் கலந்த பாடல்கள் ரசிகர்களை மயங்கவைத்து விடும். அவர் ஒரு “தன்னிகரில்லாத பாடகர்” என்கின்றனர் அவரது ரசிகர்கள்.

### சிறு வயதிலேயே இசையில் ஆர்வம்

கடந்த 1924ம் ஆண்டு பிப்ரவரி 24ல், உத்தரப்பிரதேச மாநிலம், லக்னோளவில் ஷேக் மன்சூர் மஹ்மூத்தின் 6-வது குழந்தையாக, பிறந்தார் தலத் மஹ்மூத். சிறு வயதிலிருந்தே அவருக்கு இசையில் ஆர்வம் இருந்தது. இரவு முழுவதும் இசைக் கலைஞர்களின் பாடல்களைக் கேட்டு மகிழ்வார். இந்த நிலையில் தந்தை அவருக்கு ஒரு கிராமபோன் இசைக் கருவியையும், K L சைகால் பாடிய பாடல்களின் இசைத் தட்டுகளையும் வழங்கினார். கிராமபோனில் இசைத் தட்டுகளை போட்டு பாடல்களை கேட்பதையே



அவர் பொழுதுபோக்காக கொண்டிருந்தார். மேலும் சைகலின் பாடல்களை உள்வாங்கி மனப்பாடம் செய்துவந்தார்.

பின்னர் லக்னோவில் உள்ள மாரிஸ் இசைக் கல்லூரியில் இசை பயின்றார். நுழைவுத் தேர்வில் அவர் தோல்வி அடைந்தார். ஆனால், செய்முறைத் தேர்வில் அவரது குரல் வளத்தைக் கண்டு அதிகாரிகள் வியப்படைந்தனர். அவரிடம் தனித் திறமை இருப்பதை அதிகாரிகள் உணர்ந்து கொண்டனர். அவரிடம் அசாத்திய திறமை இருப்பதைத் தெரிந்து கொண்ட அகில இந்திய வானொலி, லக்னௌ, அவருக்கு மிர்ஸா காலிப் உள்ள கவிஞர்களின் கஜல் பாடல்களைப் பாடும் வாய்ப்பை அளித்தது. 1941ல் தனது 17வது வயதில் அவர் முதல் இசை ஆல்பத்தை வெளியிட்டார். 1944ம் ஆண்டு, 20 வயதில் தலத் பாடிய தஸ்வீர் தெரி தில் மேரா பெஹ்லானா சகேகி என்ற பாடல் பெரும் வெற்றியைப் பெற்றது. அந்த பாடலின் இசைத்தட்டு 1,00,000 பிரதிகள் விற்பனையானது. திரைப்படப் பாடல் அல்லாத அந்த பாடல் தான் இன்றளவும் அதிகம் விற்பனையானது என்பது குறிப்பிடத்தக்கது. தலத் மஹ்மூத்திடம் அசாத்திய திறமைகள் இருப்பதை அறிந்து கொண்ட கொல்கத்தா திரையுலகம், அவரை நடிக்க அழைத்தது. கொல்கத்தாவில் 13 திரைப்படங்களுக்கு பின்னணி பாடிய அவர், அதில் மூன்று படங்களில் நடிக்கவும் செய்தார். ஏக் பங்களா பனே நயாரா என்னும் பாடல் பதிவின்போது இசையமைப்பாளர் சைகலை சந்தித்ததை தனது வாழ்நாளின் மறக்கமுடியாத நிகழ்வாக அவர் கருதினார்.

1949ம் ஆண்டு தலத் மும்பைக்கு குடிபெயர்ந்தார். அப்போது சைகல் உயிருடன் இல்லை. இந்த சூழலில் புதிய கஜல் பாடகராக முத்திரை பதிக்க இதுவே சிறந்த தருணம் என்பதை அவர் உணர்ந்து கொண்டார். அந்த ஆண்டே திலீப் குமார் நடித்த ஆர்ஸோ படத்திற்கான சோகப்பாடலை அனில் விஸ்வாஸ் இசையமைப்பில் தலத் பாடினார். அந்த பாடல் பெரும் வெற்றியைப் பெற்றது. ஆயே தில் முஜ்ஹே அய்ஸி ஜகா லே சல் ஜஹான் கோயி நா ஹோ என்ற அந்த பாடல் பிரபலமானது. அடுத்தடுத்த ஆண்டுகளில் திலீப் குமாருக்காக தலத் குரல் கொடுத்த பாடல்களில் இது முதன்மையானது. துனியா பதல் கயி மற்றும் மேரா ஜீவன் சதி பிசாத் கயா (பாபுல்-1950), நயீன் மிலே நயின் ஹூ பாவ்ரே மற்றும் சீனே மெய்ன் சுலாகதே ஹைன் அர்மான் (தரானா (1951) படத்துக்காக - லதாவுடன் பாடிய டூயட் பாடல்), ஆயி மேரே தில்



காஹின் அவுர் சல (டாக்-1952), யே ஹவா யே ராத் யே சாந்தினி (சாங்தில்-1952), ஷாம் ஏக்ஹம் கி கஸம் (புட்பாத்-1953) ஆகிய பாடல்கள் குறிப்பிடத்தக்கவை. திலீப் சோகக் காதலன் என்கிற பிம்பத்தை அழியாமல் நிலை நிறுத்த உதவியது தலத்தின் குரல்கள்.

தனக்கு எப்போதும் தலத் பின்னணி பாட வேண்டும் என்று விரும்பினார் திலீப். ஆனால், திலீப் குமாருக்கு மிகவும் நெருக்கமான இசையமைப் பாளரான நௌஷத்துக்கு எரிச்சலூட்டும் விதத்தில் தலத் நடந்து கொண்டார். ஒரு முறை பாபுல் படத்திற்கான பாடல் பதிவின் போது படப்பிடிப்பு தளத்தில் புகைத்தபடியே இருந்தார் தலத். இது நௌஷத்துக்குப் பிடிக்கவில்லை. இதையடுத்து அவரை தனது குழுவிலிருந்து ஒதுக்கினார் நௌஷத். தொடர்ந்து திலீப் நடிக்கும் படங்களிலிருந்தும் அவர் வெளியேற்றப்பட்டார்.

ஆனால், தலத்தின் அற்புதமான குரல்வளமும், அதன் தாக்கமும் திரையுலகை கவர்ந்தன. அவர், 1954ல் தேவ் ஆனந்த் நடித்த டாக்ஸி டிரைவர் படத்தில் S D பர்மன் இசையில் ஜாயேன் து ஜாயென் கஹான் என்ற காலத்தால் அழியாத பாடலைப் பாடினார். மன்ஹர் குமாரின் மாதோஷ் (1951) படத்தில் வரும் மேரி யாத் மெய்ன் தும் நா அன்ஸு பஹானா, ராஜ்கபூருக்காக ஆஷியானா (1952) படத்தில் வரும் மயின் தில் ஹூன் ஏக் அர்மான் பாரா பாடல், சல் தியா கார்வான் (லைலா மஜ்னு-1953), மற்றும் ஷம்மிகபூருக்காக ஆயே காம்-இ-தில் க்யா கரூன் (தோகர்-1954), அசோக் குமாருக்காக (ஏக் ஸால்-1957) படத்தில் வரும் சப் குச் ஹூதா கி ஹோஷ் மே ஆயே து க்யா ஹுவா உள்ளிட்ட பாடல்கள் மறக்கமுடியாதவை.


லதா மங்கேஷ்கருடன்.

## நடிப்பில் சோபிக்கவில்லை

தலத் புகழின் உச்சியில் இருந்தாலும் அவரது நடிப்பு ரசிக்கும் படியாக இல்லை. அவரது அழகான முகம், எடுப்பான தோற்றம், பாடும் திறமை ஆகியவற்றை வைத்து ஆதாயம் பார்க்கலாம், படத்துக்கு கூட்டம் வரும் என்று தயாரிப்பாளர்கள் நம்பினார்கள். மேலும் தலத்தும் நடிப்பதற்கு ஆசைப்பட்டார். தில்-இ-நாதன் (1953) படத்தின் தயாரிப்பாளர் மற்றும் இயக்குநருமான ஏ.ஆர்.கர்தார், தலத்துடன் கதாநாயகியாக நடிக்க ஒரு அழகுப் போட்டியையே நடத்தினார் என்றால் பார்த்துக் கொள்ளுங்கள். இறுதியில் பீஸ் கன்வால் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

1951 மற்றும் 1958 ஆண்டு களுக்கு இடையில் தலத் 10 படங்களில் நடித்திருந்தார். மதுபாலா, சியாமளா, பீஸ் கன்வால், நதிரா, சுரையா, மலாசின்ஹா மற்றும் நூதன் ஆகியோருடன் அவர் ஜோடியாக நடித்திருந்தார். அந்த படங்கள் பிரபலமாகவும் இல்லை, ரசிகர்களிடையே வரவேற்பும் பெறவில்லை. ஆனால், தலத் பாடிய சில பாடல்கள்– ஜிந்தகி டெனேவாலே சுன் (தில்-இ-நாடன்), ஜூமி ரே (ஏக் காவ்ன் கி கஹானி) மற்றும் பியார் பர் பஸ் து நஹின் ஹெய்ன் மேரா லெகின்ஃபிர் பி (சோனே கி சி டியா) ஆகிய ரசிகர்கள் மனதில் பிரபலமாயின.

திரைப்படங்களில் நடிப்பது என தலத் எடுத்த முடிவு தவறானது. அவரது நடிப்பு ரசிகர்களை உற்சாகப்படுத்த வில்லை. மேலும் பின்னணி பாடும் நேரமும் குறைந்து கொண்டே வந்தது. விரை விலேயே திலீப்குமாரின் கவர்ச்சி, தேவ் ஆனந்தின் வசீகரம் மற்றும் சுறுசுறுப்பு, ராஜ்கபூரின் நடிப்புத் திறனுக்கு தாம் ஒருபோதும் இணையாக முடியாது என்பதை விரைவில் தலத் உணர்ந்து கொண்டார். ஷம்மி கபூர் ஒரு முறை தலத்திடம், நன்றாகப்



*தேவ் ஆனந்த், திலீப் குமார், ராஜ் கபூர் மற்றும் ஷம்மி கபூர் ஆகியோருக்கு சில மறக்க முடியாத பாடல்களை உருவாக்க தலத் மஹ்மூத் குரல் கொடுத்துள்ளார்.*

பாடத்தெரிந்த நீங்கள் ஏன் நடிப்பதில் நேரத்தை வீணடிக் கிறீர்கள் என்று கேட்டார்.

### காலம் கடந்த செயல்

தலத் மீண்டும் பின்னணி பாடுவதில் கவனம் செலுத்த முடிவு செய்தார். ஆனால், காலம் கடந்து விட்டது. பின்னணி பாடுவதில் முகமது ரஃபி ஆதிக்கம் செலுத்தினார். தயாரிப்பாளர்களின் விருப்பமும் அவராக இருந்தார். ரசிகர்களின் ரசனையிலும் மாற்றம் ஏற்பட்டது. மெல்லிசை, தாளத்திற்கு வழிவிட்டது. கஜலுக்கு பதிலாக ஜாஸ் மற்றும் பாப் இசைப் பாடல்களை வந்தன. மேலும் டிஸ்கோ பாடல்களை இளம் தலைமுறையினர் ரசிக்கத் தொடங்கினர். மென்மையான காதல் பாட்டுகள் விடைபெற்று வண்ணங்கள், கவர்ச்சிகள் உள்ளே புகுந்தன. 1954ல் தோகர் படத்தில் தலத் பாடிய ஆயி காம்-இ-தில் க்யூ-கரூன் என்னும் இதயத்தை உருக்கும் கஜல் பாடலை பாடிய ஷம்மி கபூர், இப்போது ரஃபி மூலம் யாஹூ பாடலைப் பாடுவதை தலத் உணர்ந்து கொண்டார்.

தலத், அங்கும் இங்கும் அலைந்து திரிந்து ஒரு சில பாடல்களைப் பாடினபோதிலும் அவரால் புதிய அலையை உருவாக்க முடியவில்லை. ஹம்ஸே ஆயா நா கயா (படம் தேர் கபீரா ரோயா-1957) சிறந்த பாடல். ஜல்தே ஹைன் ஜிஸ்கே லியே (சுஜாதா-1960) என்ற மனதை மயக்கும் பாடல் காலத்தால் அழியாதது. தொலைபேசியில் நூதனிடம் பாடும் பாடல், சுனில் தத்துக்கு பெரும் புகழைத் தேடித்தந்தது. ஆயிரக்கணக்கான இளைஞர்கள் இந்த காதல் பாடலை, தங்கள் காதலிக்கு போனில் பாடியுள்ளனர். ஆனால், இதனால் எல்லாம் இசையமைப்பாளர்கள் தலத்தை அழைக்க முன் வரவில்லை.

யாஹூதி (1958) படத்தில் வரும் யே மேரா திவானாபன் ஹை பாடலை தலத் பாட வேண்டும் என்று திலீப் விரும்பினார். ஆனால், அந்த பாடலைப் பாட முகேஷை அழைக்கும்படி தலத் கூறிவிட்டார். தலத்தின் புகழ் மென்மையான குரலில் மட்டும் அடங்கிவிடவில்லை. அவரது செயலிலும்தான் என்கிறார் கணேஷ் அனந்தராமன். அந்த பாடல் பிரபலமானதுடன், முகேஷின் திரையுலக வாழ்வை புதுப்பிக்கவும் உதவியது. அவர், தலத்துக்கு நன்றி உணர்வுடன் இருந்தார்.

தயாரிப்பாளர் முகமது ரஃபியை விரும்பியபோதிலும் ஜஹன் ஆரா (1964) படத்தின் சில பாடல்களுக்கு தலத்துக்கு வாய்ப்புக் கொடுத்தார் இசையமைப்பாளர் மதன் மோகன். பிர் வோஹி ஷாம் வோஹி காம் என்ற முத்தாக அமைந்தது. மேலும் தெரி ஆங்க் கி ஆன்ஸோ பீ ஜாவோ என்ற பாடலும் மறக்கமுடியாத பாடலாக




அமைந்தது. ஆனால், படம் தோல்வி அடைந்தது. இந்த படம் தலத், மதன்மோகன் இருவருக்கும் எந்த வகையிலும் உதவவில்லை.


### வெளிநாட்டுப் பயணம்

ஜஹன் ஆரா படத்தின் தோல்வியால் தலத் மனமுடைந்தார். 1960-களின் மத்தியில் திரைப்படங்களுக்குப் பின்னணி பாடுவதை நிறுத்திவிட முடிவு செய்தார். ஆனால், தொடர்ந்து மேடைகளில் பாடி வந்தார். வெளிநாட்டு நிகழ்ச்சிகளிலும் பங்கேற்றார். ஏனெனில் அவருக்கு அங்கு நல்ல வரவேற்பு இருந்தது. 1956ல் தலத், கிழக்கு ஆப்பிரிக்கா சுற்றுப்பயணத்தில் 45 இசை நிகழ்ச்சிகளில் பங்கேற்றார். (ஆரம்பத்தில் 6 நிகழ்ச்சிகளுக்கு மட்டுமே திட்டமிடப்பட்டிருந்தது.). இந்திய திரைப்பட பின்னணிப் பாடகர் ஒருவரின் முதல் வெளிநாட்டுச் சுற்றுப்பயணம் அதுதான்.

தலத், பாகிஸ்தானுக்கு அடிக்கடி சென்று வந்தார். அங்கு அவர் ஒரு வழிபாட்டுக்குரிய நபராகவே இருந்து வந்தார். 1961ம் ஆண்டு, கராச்சி மைதானத்தில் நடந்த அவரது இசை நிகழ்ச்சியைக் காண 58,000த்துக்கும் மேலான ரசிகர்கள் திரண்டனர். கராச்சி நிகழ்வில் அவர், இஎம்ஐ நிறுவனம் வெள்ளித்தட்டு பரிசாக வழங்கி கௌரவிக்கப்பட்டார். லாகூரிலிருந்து நூர்ஜஹான், தன்னுடன் ஒரு நிகழ்ச்சியில் கலந்துகொள்ளுமாறு தலத்துக்கு அழைப்புவிடுத்தார். அதற்காக தொகை நிரப்பப்படாத வெற்று காசோலையை வழங்கவும் அவர் தயாராக இருந்தார். ஆனால், மும்பையில் தனக்கு இருந்த வேலைப்பளு காரணமாக தலத் அவரது கோரிக்கையை ஏற்க மறுத்துவிட்டார்.



தலத் மஹ்மூத் (நடுவில்) திலீப் குமார் (வலது) மற்றும் மகன் காலித் மஹ்மூத் ஆகியோருடன்.



தலத் மஹ்மூத் தனது மகன் காலித்தின் முடியை சீவுகிறார்.

### ஹீரோ வரவேற்பு

1968ம் ஆண்டு டிரினிடாடுக்கு அவர் இசை நிகழ்ச்சிகள் நடத்த மேற்கொண்ட சுற்றுப் பயணம் மறக்க முடியாதது. ஆயிரக்கணக்கான ரசிகர்கள் பேட்ஜ் அணிந்து கொண்டு ஒரு ஹீரோவுக்கு அளிப்பதுபோல அவருக்கு உற்சாக வரவேற்பு அளித்தனர். இசைக்குழு ஒன்று காலிப்ஸோ பாடலைப் பாடி அவரை பரவசப்படுத்தியது.

தலத், 1969 மற்றும் 1991ம் ஆண்டுகளுக்கு இடையே 7 முறை அமெரிக்காவுக்கும் கனடாவுக்கும் சுற்றுப்பயணம் மேற்கொண்டார். மாடிஸன் சதுக்கம் உள்ளிட்ட பிரபல அரங்குகளில் நடைபெற்ற நிகழ்ச்சிகளில் பாடினார். 1979ம் ஆண்டு லண்டனில் புகழ்பெற்ற ராயல் ஆல்பர்ட் அரங்கில் அவரது நிகழ்ச்சி அரங்கேறியது. இதற்கான டிக்கெட்டுகள் இரண்டு வாரங்களுக்கு முன்பே விற்றுத்தீர்ந்தன. அதன் பிறகு அவர் ஆசியா, ஐரோப்பா மற்றும் மத்திய கிழக்கு நாடுகளுக்கும் சுற்றுப்பயணம் மேற்கொண்டார்.

1992ம் ஆண்டு தலத் மஹ்மூத் பத்மபூஷண் விருதுபெற்றார். மேலும் மகாராஷ்டிர அரசின் விருது, லதா மங்கேஷ்கர் புரஸ்கார் விருதும் அவருக்கு வழங்கப் பட்டது. ஜக்ஜித் சிங் மற்றும் மெஹ்தி ஹஸன் ஆகிய கஜல் பாடகர்கள் மீது அவர் அதிக மதிப்பு வைத்திருந்தார்.

### ஜென்டில்மென்

தலத் ஒரு ஜென்டில்மென் என்று திலீப்குமார் அடிக்கடி கூறுவார். பாலிவுட்டில் அனைவரின் அன்புக்குரியவராகவும் அவர் இருந்தார் என்பார். தலத்தின் வசீகரம், அவர் மற்றவர்கள் மீது வைத்திருந்த மரியாதை அவருக்கு நல்ல பெயரைத் தேடித்தந்தது.

தலத்தை நேசித்தவர்களில் கிஷோர்குமாரும் ஒருவர். ஒருமுறை நிகழ்ச்சியின் போது மேடையில் கிஷோர் அமர்ந்திருந்தார். அப்போது அவரிடம், தலத் ரசிகர்களில் ஒருவராக அரங்கத்தில் இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது. (அவரது மகள் சபரினாவுடன் அந்த நிகழ்ச்சிக்கு தலத் வந்திருந்தார்.) இதையறிந்த கிஷோர் குமார், சிறந்த பாடகர் தலத் மஹ்மூத் இந்த அரங்கத்திற்கு வந்துள்ளார் என்று கூறியதுடன் அவரை மேடைக்கு அழைத்தார்.

கஜல் ராணி பேகம் அக்தர் இங்கு வந்திருந்தபோது அவருக்கு மதன்மோகன் விருந்து கொடுத்தார். விருந்துக்கு முன்னர் தலத் பாடினார். அப்போது ரஃபி மற்றும் மன்னாடேவுக்கு இடையில் அமர்ந்திருந்த கிஷோர், நாம் இங்கிருந்து வெளியேறி விடுவோம், தலத்தின் குரலைக் கேட்க வந்திருக்கும் விருந்தினர்களை நம்மால் பிரிக்க முடியாது என்றார்.



### தனிப்பட்ட தேர்வுகள்

தலத்திற்கு பிடித்தமான வெளிநாட்டு பாடகர்கள், நாட் கிங் கோல், பாட் பூனி, பிங் கிராஸ்பை, எல்விஸ் பிரஸ்லி மற்றும் கோனி பிரான்சிஸ் ஆகியோர். சார்லி சாப்ளின் மற்றும் லாரல் ஹார்டி திரைப்பட ஆல்பங்களை அவர் சேகரித்து வைத்திருந்தார். காரில் பயணம் செய்வது அவருக்கு மிகவும் பிடிக்கும். அடிக்கடி அவர், தனது குடும்பத்துடன் சுற்றுப்பயணம் செய்வார். இனிப்புகளை விரும்பிச் சாப்பிடுவார். அவரது சாப்பாட்டில் இனிப்பு இல்லாமல் இருக்காது. ரசகுல்லா, கீர், காரட் அல்வா அவருக்கு பிடித்தமான இனிப்புகள்.

தலத் அடிக்கடி புகைப் பிடிக்கும் பழக்கம் உள்ளவராக இருந்தார். அவரது உடல்நிலை மோசமாக இதுவும் ஒரு முக்கிய காரணம். பின்னாளில் அவர் பார்கின்ஸன் நோயால் தாக்கப்பட்டு பேசுவதற்குகூட தடுமாறினார். தனது மென்மையான குரலால் உலகின் ரசிகர்களை ஈர்த்த தலத்துக்கு இப்படி ஒரு நிலை ஏற்பட்டது கண்டு நண்பர்கள் மனம் வருந்தினர். 1998ம் ஆண்டு தனது 74வது வயதில் அவர் மறைந்தார். அவரது ரசிகர் பட்டாளம், அவரின் தலை சிறந்த படைப்பான மேரி யாத் மெய்ன் தும் நா அன்ஸூ பஹானா பாடலைப் பாடி கண்ணீருடன் அவரை நினைவுகூர்ந்தனர்.



**வலதிலிருந்து:** *தலத் மஹ்மூத், பின்னணிப் பாடகர்கள் மதன் மோகன், லதா மங்கேஷ்கர் மற்றும் அனில் பிஸ்வாஸ்.*

கட்டுரையாளர் RC மெட்ராஸ் சவுத் உறுப்பினர் மற்றும் மூத்த பத்திரிகையாளர்.

வடிவமைப்பு: N கிருஷ்ணமூர்த்தி

# Subscribe NOW!




## for Rotary News Print Version & e- Version

## For the Rotary year 2022 – 2023

**Annual Subscription (India)**

| Print version | e-Version |
|---|---|
| ₹480/- | ₹420/- |

Print version ☐ e- Version ☐

| | English | Hindi | Tamil |
|---|---|---|---|
| No. of Copies | | | |

For every new member the pro-rata is ₹40 a month.

- **Newsprint is in high demand and the prices have increased steeply. Beginning this year RNT will be spending an additional ₹50 lakh for the paper alone.**
- **As concerned citizens of the world, those of you who are alarmed at the degradation of the environment and slaughter of trees, kindly opt for our e-version.**

Please attach the TYPED list of individual members with their complete address, PIN code, Mobile number and e-mail ID. Intimate language preference (English/Hindi/Tamil) against each member's name.

Rotary Club of ........................................ RI District ..............................

Name of the President/Secretary ........................................

Address ........................................

........................................

........................................

City .............................. State .............................. PIN ☐☐☐☐☐☐

STD Code .............................. Phone: Off. .............................. Res. ..............................

Mobile .............................. E-mail ..............................

Cheque/DD No. .............................. Dated .............................. for Rs. ..............................

Drawn on ........................................

in favour of "**ROTARY NEWS TRUST**" is enclosed.

Date: President/Secretary

**Payments can be made online at HDFC Bank, Montieth Road, Egmore, Chennai – Rotary News Trust, SB A/c No 50100213133460; IFSC HDFC0003820. Email us the UTR Number, Club Name, President/Secretary's name, Amount and Date of Transfer.**

Mail this form to:
Rotary News Trust, Dugar Towers, 3rd Floor, 34, Marshalls Road, Egmore, Chennai 600 008.
Tamil Nadu, India. Ph: 044 4214 5666, e-mail: rotarynews@rosaonline.org

# சந்தாதாரர்களின் கவனத்திற்கு

1. சந்தா ரோட்டரி ஆண்டுக்கானது (ஜூலை முதல் ஜூன் வரை).
2. ஒவ்வொரு ரோட்டரியனும் ஒரு ரோட்டரி இதழுக்குக் கண்டிப்பாகச் சந்தா செலுத்தவேண்டும்.
3. ஓர் உறுப்பினருக்கு அச்சு இதழுக்கான ஆண்டுச் சந்தா ₹480 மற்றும் மின் இதழுக்கு ₹420.
4. முழு ஆண்டுக்கான சந்தாவைப் பரிந்துரைக்கப்பட்ட படிவத்தில் ஜூலை மாதத்தில் அனுப்பவேண்டும்.
5. ஜூலைக்குப் பிறகு சேர்கிறவர்கள் மீதமுள்ள ரோட்டரி ஆண்டுக்கு அச்சு இதழ் ஓர் இதழுக்கு ₹40 மற்றும் மின் இதழ் ஓர் இதழுக்கு ₹35 என்ற விலையில் பணம் செலுத்தலாம்.
6. ரோட்டரி நியூஸ் உடன் சங்கத்துக்கு உள்ள சந்தாக் கணக்கு தொடர்ந்து செயல்படும் கணக்காகும். அது ஒவ்வோர் ஆண்டும் ஜூன் மாத முடிவில் முடிவடைவதில்லை.
7. அனைத்து உறுப்பினர்களுடைய பெயர்கள், அவர்களுடைய **முழு அஞ்சல் முகவரி, அஞ்சல் குறியீட்டு எண், மொபைல் எண்,** மின்னஞ்சல் ID ஆகியவற்றைப் படிவம் மற்றும் DD அல்லது எங்கும் கூடுதல் கட்டணமின்றி மாற்றக்கூடிய காசோலையுடன் அனுப்பவேண்டும். இணையப் பரிமாற்றங்களை GPAY அல்லது இணைய வங்கிச்சேவை வழியாகச் செய்யலாம். நீங்கள் இணையத்தில் பணம் செலுத்தும் போது, UTR எண், உங்கள் சங்கத்தின் பெயர், செலுத்திய தொகையை உடனடியாக வாட்ஸாப் (9840078074) அல்லது மின்னஞ்சல் (*rotarynews@rosaonline.org*) மூலம் எங்களுடன் பகிர்ந்து கொள்ளுங்கள். இதைச் செய்யாவிட்டால், நீங்கள் செலுத்திய பணம் எங்கள் கணக்கில் வரவு வைக்கப்படாது; உங்கள் சங்கம் செலுத்தவேண்டிய தொகை நிலுவையில் உள்ளது என்று காண்பிக்கப்படும்.
8. உறுப்பினர் பெயருடன் மொழி விருப்பம் **(ஆங்கிலம், இந்தி அல்லது தமிழ்)** தெரிவிக்கப்படவேண்டும்.
9. இதழைத் தொடர்ந்து பெறுவதற்கு, உங்கள் உறுப்பினர்களுடைய அஞ்சல் முகவரி, தொடர்புத் தகவல்களை ஒவ்வோர் ஆண்டும் ரோட்டரி நியூஸிற்கு நேரடியாகத் தெரிவியுங்கள். RI உறுப்பினர் தகவல்களை எங்களுடன் பகிர்ந்துகொள்வதில்லை.
10. உறுப்பினர்கள் தங்கள் சங்கம் எங்களுக்கு அனுப்பும் சந்தாதாரர்கள் பட்டியலில் தங்கள் பெயர்கள் சேர்க்கப் பட்டிருப்பதை உறுதி செய்யவேண்டும். நீங்கள் பணம் செலுத்திவிட்டீர்கள், ஆனால், உங்கள் பெயரை உங்கள் சங்கம் எங்களுக்கு அனுப்பவில்லை என்றால், உங்களுக்கு இதழின் பிரதி கிடைக்காது.
11. நீங்கள் அச்சு பிரதியிற்கு சந்தா கட்டியிருந்து இதழ் உங்களுக்கு கிடைக்கவில்லை என்றால் சங்கத் தலைவரிடம் உங்கள் சங்கம் 'e-version'க்கு மாறியுள்ளதா என்று கேட்டறிந்து கொள்ளுங்கள்.
12. உறுப்பினர் நிலையில் ஏற்படும் மாற்றங்களைப்பற்றிச் சங்கங்கள் உடனடியாக எங்களுக்குத் தெரிவிக்க வேண்டும், அப்போதுதான் எங்களால் புதிய உறுப்பினர்களுக்கு இதழை அனுப்ப இயலும்.
13. ரோட்டரி நியூஸ் அறக்கட்டளையிடம் உள்ள பட்டியலின்படி நாங்கள் அனுப்பும் இதழ்களின் எண்ணிக்கைக்குப் பணம் செலுத்தும் கட்டுப்பாடு சங்கங்களுக்கு உண்டு.
14. சங்கங்கள் செலுத்தாத தொகைகள் அந்தச் சங்கங்களின் கணக்கில் நிலுவைத் தொகையாகக் காண்பிக்கப்படும். அதன்பிறகு பெறப்படும் தொகை அனைத்தும் முந்தைய நிலுவைத் தொகைகளுக்கு சரி செய்யப்படும்.
15. சந்தாத் தொகையைச் செலுத்தாத சங்கங்களின் தகவல்கள் RI உடன் பகிர்ந்துகொள்ளப்படும், அவர்கள் இடைநிறுத்தப்படக்கூடும். தகவல்களுக்கு, எங்களுடைய ஃபிப்ரவரி மற்றும் மார்ச் 2022 இதழ்களுடைய பின் அட்டையைப் பாருங்கள்.
16. சங்கங்கள் எங்களுடன் பகிர்ந்துகொள்ளும் பட்டியலை நாங்கள் அவ்வப்போது RIன் தரவுகளுடன் உறுதிப்படுத்துகிறோம், விடுபட்ட சந்தாதாரர்களைக் கண்டறிகிறோம்.
17. உறுப்பினர் ஒருவர் ஒரு மாதத்துக்கு இதழைப் பெறாவிட்டால் எங்களுக்கு அதை உடனடியாகத் தெரிவியுங்கள், நாங்கள் பிரச்சனையைத் தீர்க்க இது உதவும். இதழ்கள் விலைச் சலுகை கொண்ட நூல் அஞ்சல் வழியாக அனுப்பப்படுகின்றன. அதனால், அஞ்சலைப் பின்தொடர இயலாது. உங்கள் சங்கம் உங்களுடைய சந்தாவை எங்களுக்கு அனுப்பாவிட்டால், நீங்கள் உங்களுடைய இதழைப் பெறாமலிருக்கலாம். அதனால், தயவுசெய்து உங்கள் தலைவர் அல்லது RNT இடம் பேசுங்கள், சந்தாதாரர்கள் பட்டியலில் உங்களைச் சேர்க்கச் சொல்லுங்கள்.
18. சில பகுதிகளில் தபால் கொடுப்பதில் பிரச்சனைகள் இருக்கலாம். அப்படிப்பட்ட சூழ்நிலையில், சங்கங்கள் பிரதிகளை மொத்தமாகப் பெறத் தேர்ந்தெடுக்கலாம். அதற்குக் கூடுதல் கட்டணங்கள் பொருந்தும்.

**இதழ் பற்றி CoL செய்தி**

- CoL-ல் **கண்டிப்பாக** ஒவ்வொரு ரோட்டரி உறுப்பினரும் ரோட்டரி இதழுக்கு சந்தா செலுத்த வேண்டும் என்று தீர்மாணிக்கப்பட்டுள்ளது.
- உறுப்பினர்கள் e-magazine-ஐ இலவசமாக பெற்று கொண்டு தேவையெனில் அச்சு இதழிற்கு சந்தா செலுத்திப் பெறலாம் என்பதும் நிராகரிக்கப் பட்டுள்ளது. ஆகையால், ஒவ்வொரு உறுப்பினரும் e-version அல்லது அச்சு இதழிற்கு கண்டிப்பாக சந்தா செலுத்த வேண்டும்.

# உங்கள் தட்டில் எவ்வளவு கார்பன் உள்ளது?

ப்ரீதி மேஹரா

நீங்கள் என்ன சாப்பிடுகிறீர்கள் என்று சொல்லுங்கள். நீங்கள் எப்படிப்பட்டவர் என்பதை நான் சொல்லுகிறேன். இந்த சொற்றொடர் 1826 ஆண்டு பிரெஞ்சு வழக்குரைஞர் அந்தெல்மி பிரில்லட் சாவரின் என்பவரால் உருவாக்கப் பட்டது. அவரது வார்த்தைகள் இன்றளவும் உண்மையாக உள்ளன. சுற்றுச்சூழல் பாதுகாப்பு நிறைந்த உலகில் நாம் உண்ணும் உணவில் கார்பன் உமிழ்வுகள் முக்கிய காரணியாக உள்ளதாக பார்க்கப்படுகிறது.

நாம் உட்கொள்ளும் இயற்கை உணவுகளின் உற்பத்தி, அவற்றின் சாகுபடி, பேக்கிங் மற்றும் விநியோகம் என விவசாய முறைகள் அனைத்தும் ஒரு உணவை இறுதியாக பரிமாறும் போது, அவை சுற்றுச்சூழலுக்கு பாதுகாப்பானது என்பதை தெரிந்து கொண்டால் பலருக்கும் வியப்பாக இருக்கும். இந்த காரணிகள் குறித்து இப்போது நாம் கவனம் செலுத்துவது போல் ஒரு தசாப்தத்திற்கு முன்பு செய்யப்படவில்லை.

ஆனால், காலம் மாறிவிட்டது. நாம் சாப்பிடும் உணவில் உள்ள கார்பன் வெளிப்பாடுகளை குறைக்க வேண்டும் அப்போதுதான் நிலையான வாழ்க்கையை வாழமுடியும் என்ற நிபுணர்களின் கருத்துடன் நாம் உடன்படுகிறோம். ஆனால் சுற்றுச் சூழலுக்கு உகந்த உணவைத் தேர்ந் தெடுப்பதற்கு முன்னதாக கார்பன் வெளிப்பாடு எதனால் ஏற்படுகிறது என்பதை நாம் தெரிந்துகொள்ள வேண்டும்.

ஒரு குறிப்பிட்ட உணவுப்பொருள் சூப்பர் மார்க்கெட் அல்லது மளிகைக் கடைக்கு வருவதற்கு முன்னதாக அவை எப்படி பதப்படுத்தப்படுகிறது என்பதை நாம் கவனத்தில் கொள்ள வேண்டும். உணவுப் பொருள் உறைந்த நிலையில் உள்ளதா, பேக் செய்யப்பட்டதா, பதப்படுத்தப் பட்டதா, முன்னரே சமைக்கப் பட்டதா அல்லது புதுப்பிக்கப்படாத எரிசக்தியைப் பயன்படுத்தி குளிரூட்டப்பட்டதா? உயிரி படிமங்கள் மூலம் நீண்டதூரம் எடுத்துச் செல்லப்பட்டதா அல்லது விமானம் மூலம் அனுப்பப்பட்டதா? அந்த உணவு தானியம் இயற்கை உரங்கள் மற்றும் போதுமான தண்ணீர் ஊற்றி இயற்கையான முறையில் சாகுபடி செய்யப்பட்டதா? என்பதைப் பார்க்க வேண்டும். ஏனெனில் இந்த காரணிகள்தான் உணவில் கார்பனின் பங்கை உறுதிசெய்கின்றன.

இறைச்சி, பட்டாணி, பீன்ஸ், பருப்பு வகைகள், தானியங்கள், அயல்நாட்டு காய்கறிகள், பேக் செய்யப்பட்ட உணவுடன் சேர்த்து சாப்பிடும் சுவையூட்டிகள் (ஸாஸ்), சட்னிகள், ஊறுகாய்கள் அல்லது உடனடி உணவுகள், உணவின் சுவை மாறாமல் இருப்பதற்காக பயன்படுத்தப்பட்ட பொருள்களுடன் கூடிய பொருள்கள், புட்டிகளில் அடைக்கப்பட்ட பானங்கள் இவையெல்லாம் கார்பன் வெளிப்பாடு களுக்கான காரணிகள். இவற்றில் சிலவற்றில் கார்பன் அதிகமாகவும் சிலவற்றில் குறைவாகவும் இருக்கலாம்.

இங்கே நீண்ட ஆராய்ச்சிகள் மூலம் நமது உடலுக்கு ஏற்ற பசுமை யான உணவுகளைப் பற்றித் தெரிந்து கொள்வோம்:



**உடனடி உணவு வகைகளை குறைத்துக் கொள்ளுங்கள்:** அலுவலக வேலைப்பளு காரணமாக வீட்டில் உணவு சமைக்க நேரமில்லாமல் வேலைக்குச் செல்லும் தம்பதிகள் உடனடி உணவை வசதியாகவும், விருப்பமாகவும் தேர்ந்தெடுக்கிறார் கள். ஆனால், குறுக்கு வழியை



தேர்ந்தெடுப்பதற்கு முன்னதாக பசுமைக் குடிமகனாக இருப்பதற்கான உங்கள் உறுதிப்பாட்டை கைவிடுவதுடன், உங்கள் குடும்ப ஆரோக்கியத்திலும் சமரசம் செய்துகொள்கிறீர்கள் என்பதை நினைவில் கொள்ளுங்கள். முன்னதாகவே பேக்கிங் செய்யப்பட்ட, சூடுபடுத்தப்பட்ட உணவுப் பொருள்களில் ஊட்டசத்து குறைவாகவும், எண்ணெய் மற்றும் உப்பின் அளவு சற்று அதிகமாகவும், உணவு கெட்டுப்போகாமல் இருக்க சில இரசாயனப் பொருள்கள் கலக்கப்பட்டதாகவும் இருக்கும். இவை உடல்நலனுக்கு ஏற்றதல்ல. மேலும் புதிதாக சமைக்கப்பட்ட உணவை விட இதிலிருந்து வெளிப்படும் கார்பனின் அளவும் அதிகமாக இருக்கும்.

ஆனால், உடனடி உணவை முழுவதுமாக தவிர்ப்பது என்பது சாத்தியமில்லை. ஒரு சில நாள்களில் எளிமையான உணவை சமைத்துச் சாப்பிடக்கூட நேரம் இருக்காது. அந்த மாதிரியான சூழலில் சூப்பர் மார்க்கெட்டுகளில் கிடைக்கும் ஆயத்த உணவைத் தான் நாம் தேடவேண்டியிருக்கும். பச்சை காய்கறிகளுடன்கூடிய சாலட்டுகள், முளைகட்டிய பயிர்கள் மற்றும் வீட்டில் தயாரிக்கப்பட்ட தயிர் ஆகியவைதான் நம் விருப்பமாக இருக்கும். இதில் நாம் தெரிந்து கொள்ள வேண்டிய முக்கியமான அம்சம் என்னவெனில் சோம்பல் உங்களை வெல்ல அனுமதிக்கக் கூடாது.

**உள்ளூர் பொருள்களை வாங்குங்கள்:** இந்தக் காலத்தில் பழங்கள் மற்றும் காய்கறிகளை ஆன்லைன் மூலம் ஆர்டர் செய்து வாங்குவதை சிலர் வழக்கமாகக் கொண்டுள்ளனர். நல்ல பசுமையான காய்கறிகள் மற்றும் பழங்களை வாங்க வேண்டும் என்றாலும், அன்றாடத் தேவைக்கும் உங்கள் வீட்டுக்கு அருகில் உள்ள கடைகளுக்கு நேரில் சென்று வாங்குங்கள் அல்லது உங்கள் பகுதியில் உள்ள உழவர் சந்தைக்குச் சென்று வாங்குங்கள். உள்ளூரில் உற்பத்தியான பொருள்களை நீங்கள் வாங்கும்போது உணவுப் பொருள்களை சந்தைக்கு கொண்டுவருவதற்கான எரிபொருள் மிச்சமாகிறது. மேலும் சிறு உற்பத்தி யாளர்களுக்கு வாழ்வாதாரத்தை வழங்குகிறது. இயற்கை விவசாயம் மூலம் கிடைத்த விளைபொருள்கள் அருகிலேயே கிடைக்குமானால் அதுவும் ஒரு சிறந்த வாய்ப்பாகும்.



**பருவக்காலத்துக்கு தகுந்தபடி சாப்பிடுங்கள்:** கோடையின் மத்திய பகுதியில் ஸ்டிராபெர்ரியும், குளிர்காலத்தில் மாம்பழங்களும் கிடைக்கும். அவற்றை வாங்கிச் சாப்பிடுங்கள். ஆனால், இவற்றில் கார்பன் தடத்தின் அளவு அதிகமாக இருக்கலாம். புதியது என்று அழைக்கப்படும் பொருள்கள் பல மாதங்கள் உறையவைக்கப்பட்டு மால்களை அடைவதற்கு முன் அவை செயற்கை முறையில் பாதுகாக்கப்பட்டிருக்கலாம். அவுரி, நெல்லி, ஆப்பிள், அவோகாடோ போன்ற மருத்துவ குணம் நிறைந்த பழங்கள் வெளிநாடுகளிலிருந்து வரவழைக்கப்பட்டு விற்பனை செய்யப்படுகின்றன. அந்தந்த பருவத்துக்கு ஏற்ற வகையில் உள்ளூரிலேயே உற்பத்தியாகும் அல்லது கிடைக்கும் பசுமையான காய்கறிகளையும், பழங்களையும் வாங்கிச் சாப்பிடுவதுதான் சிறந்தது.

**உணவுக் கலவையை சரியாகப் பெறுங்கள்:** 80 சதவீதம் தாவரங்கள் அடிப்படையிலான உணவு சுற்றுச் சூழலுக்கும் உடலுக்கும் நல்லது என்று ஆராய்ச்சிகள் கூறுகின்றன. இப்போதெல்லாம் ஊட்டசத்து நிபுணர்கள் பதப்படுத்தப்பட்ட தானியங்கள், குளூட்டன் அதிகம் கலந்த உணவுகளை தவிர்த்து விட்டு உடலுக்கு ஆரோக்கியமான, பழங்கால உணவுகளான தினை மற்றும் பழுப்புநிற அரிசியை பயன்படுத்த பரிந்துரைத்து வருகின்றனர். யூ டியூப்பில் விதம் விதமான சமையல் செய்வது எப்படி என்று விளக்கப்படுகின்றன. கம்பு, சோளம் போன்ற தானியங்களை எப்படி சமைப்பது என்று அதைப் பார்த்து நீங்கள் தெரிந்துகொள்ளலாம்.

**பானங்கள் தேர்வுசெய்தல்:** இங்கே மீண்டும் பானங்கள் பல மைல்கள் பயணிக்கின்றன. அவை நம்மைத் தேடி வரும்போது அவற்றில் சர்க்கரை அதிகம் உள்ளது. அதுமட்டுமல்ல, உங்கள் உடலில் கலோரிகள் அதிகரித்து எடை கூடுவதற்கு வழிவகுத்து, கார்பன் தடத்தையும் அதிகரிக்கிறது. அடுத்த முறை பசுமைச்சமையல் செய்வது எப்படி என்பது பற்றி பார்ப்போம். அது வரை உங்கள் சிந்தனைக்கு கொஞ்சம் உணவு கொடுங்கள்.

எழுத்தாளர் மூத்த இதழாளர்,
சுற்றுச்சூழல் பிரச்சனைகளைப்பற்றி
எழுதிவருகிறார்.

# மாற்றுத் திறனாளிகளுக்கு ஒரு சிறப்பு நாள்

ரோட்டரி செய்திக் குழு

RID 3141 பன்னாட்டு மாற்றுத் திறனாளிகள் நாளைக் கொண்டாடு வதற்காக உள்ளூர் NGOக்கள், மாவட்டத்தின் பல ரோட்டரி சங்கங்களுடன் இணைந்து இயலும் என்பதிலிருந்து திறமைவரை என்கிற தன்னுடைய புதிய திட்டத்தின் கீழ் பல தொடர் நிகழ்ச்சி களை நடத்தியது. RC பாம்பே பொவாய் முன்னணிச் சங்கமாகச் செயல்பட்டது.

நகைச்சுவைச் சிகிச்சையாளர் பகவான் பாபர் அன்றாட வாழ்க்கையின் கடினங்கள், சவால் களுக்கு நடுவில் மகிழ்ச்சி, நலன், அன்பைக் கண்டறிதல்பற்றி ஒரு பயிலகத்தை நடத்தினார். சுமார் 160 மாற்றுத் திறனாளிகள், பெற்றோர், கவனித்துக்கொள்கிறவர்கள், ரோட்டரியன்கள் பயிற்சியாளருடன் உரையாடினார்கள், சிரிப்பு நிகழ்ச்சி யை அனுபவித்தார்கள்'' என்கிறார் RC தியோனரைச் சேர்ந்த விவேக் கன்டேல்வால்.

இந்தச் சங்கம் கண் பார்வைக் குறைபாடு கொண்ட மக்களுக்கு 150க்கும் மேற்பட்ட பகிர்வுப் பொருள் பொதிகளைக் கொடையளித்தது; இவர்கள் மனித நலன் தொண்டு அறக்கட்டளை நடத்திய இசை நிகழ்ச்சியில் பார்வையாளர்களை வியக்கவைத்தார்கள். மன நலச் சவால்கள், நோய்ப் பரவலின்போது ஊனத்தைக் கையாளுதலைப்பற்றிய குழு விவாதம் மாற்றுத் திறனாளிகள் சந்திக்கும் அன்றாடத் தொந்தரவுகளைப்பற்றிய விழிப் புணர்வை உருவாக்கியது.

RC பல்கார் ஐந்து மாற்றுத் திறனாளி இணையர்களுடைய திருமணங்களை ஆதரித்தது, அவர்களுக்கு வீட்டுத் தேவைப் பொருட்களை வழங்கி உதவியது. இந்தச் சங்கம் பல்கார் SDSM கல்லூரியில் ஒரு கணினிப் பயிற்சி திட்டத்தைத் தொடங்கி, கேட்டல் மற்றும் பேச்சுக் குறைபாடுள்ள 25 பேருக்குப் பயிற்சி அளித்துள்ளது.



*மாற்றுத்திறனாளி தம்பதியரின் திருமணத்தை ரோட்டேரியன்கள் சிறப்பாக நடத்துகின்றனர்.*

மாற்றுத் திறனாளித் தடகள வீரர் கீதா சௌஹான் தேசிய, பன்னாட்டு விளையாட்டு நிகழ்ச்சி களில் பங்கேற்பதற்காகச் சிறப்பாக வடிவமைக்கப்பட்ட சக்கர நாற்காலி ஒன்றைக் கொடையளித்தது RC காட்கோபர் வெஸ்ட்.

இந்த ஒருநாள் நிகழ்ச்சி, RID 3141ன் "இயலும் என்பதிலிருந்து திறமைவரை" மற்றும் RID 3232ன் "மாற்றுத் திறனாளிகளுக்கு ஆற்றல் அளிப்போம்" ஆகியவை பொது நோக்கத்துக்காக மெய்நிகர் தளத்தில் ஒருங்கிணையும் நிகழ்ச்சியுடன் நிறைவுபெற்றது'' என்றார் கன்டேல்வால். சென்னை, மும்பை, USஐச் சேர்ந்த 100க்கும் மேற்பட்ட ரோட்டரியன்கள் கலந்துரையாடிய இந்த மெய்நிகர் சந்திப்பில் RID 3141 DG ராஜேந்திர அகர்வால், RID 3232 DGN N S சரவணன் கலந்து கொண்டார்கள்.

### நான்கு சாதனையாளர்கள் பெருமைப்படுத்தப்பட்டார்கள்

கீதா சௌஹான் (கூடைப்பந்து), சித்தார்த் சஞ்சய் ம்ஹாத்ரெ (மாற்றுத் திறனாளிச் செயல்பாட்டாளர்), பிரியா கடா (நடனக் கலைஞர்), திவ்யா K (சக்கர நாற்காலி ஓட்ட வீரர்) ஆகியோர் தங்களுடைய உடல் சார்ந்த கட்டுப்பாடுகளை மீறிப் பெரிய அளவில் சாதித்த உறுதி மற்றும் நம்பிக்கைக்காகப் பாராட்டப் பட்டார்கள்.

ஆர்வமூட்டிய நிகழ்ச்சி கள் நிறைந்த இந்த நாள், இளம் மாற்றுத் திறனாளிக் குழந்தைகளின் "ஸ்மைலிங் சோல்ஸ்" குழு வழங்கிய இசை நிகழ்ச்சியுடன் நிறைவுபெற்றது. திட்ட இயக்குநர் A V சுரேஷ் (RC தியோனர்), இணைத் தலைவர் M ஹரி பிரகாஷ் (RC IT சிட்டி சென்னை) இந்த நிகழ்ச்சியை ஒருங்கிணைத்தார்கள். ■

# இந்தியாவில் நீரிழிவு மேலாண்மைக்கான கோட்டையை உருவாக்கிய குடும்பம்

ரஷீதா பகத்

Published by
**Penguin India**

Pages: **194**

Price : ₹**699**


இந்தியாவில் நீரிழிவு நோய் தடுப்பு மற்றும் பராமரிப்புக்கான சிறந்த மையமாக சென்னை எவ்வாறு மாறியது என்பதை நீங்கள் அறிய விரும்பினால், இது உங்களுக்கான புத்தகம். 'மேக்கிங் எக்செலன்ஸ் எ ஹாபிட்' என்ற நூலில், சென்னையில் உள்ள ஒரு சிறந்த நீரிழிவு மருத்துவரான Dr V மோகன், இந்தியாவில் நீரிழிவு மருத்துவத்தின் முன்னோடியான தனது தந்தை, Dr M விஸ்வநாதன் அவர்களின் சுவாரசியமான வாழ்கையை பற்றியும், எப்படி ஒரு சிறந்த எழுத்தாளராக வேண்டும் என்ற தனது கனவை தன் தந்தை சாமர்த்தியமாக மருத்துவ அறிவியலுக்கு திசைத்திருப்பினார் என்பதை பற்றியும் கூறுகிறார். 1968ம் ஆண்டு ஆங்கில இலக்கிய புத்தகங்களை ஏந்தியபடி பள்ளி மாணவனாக கோடை விடுமுறைக்கு வீடு திரும்பிய போது, புனைகதை அல்லது கவிதைகள் எழுதும் ஆர்வத்தை மருத்துவ அறிவியலில் ஆய்வுக் கட்டுரைகளை எழுத திசை திருப்புமாறு அவரிடம் உறுதியாக கூறப்பட்டது.

இந்தியாவிலேயே முதல் நீரிழிவு சிகிச்சையகத்தை தான் பணியாற்றிய ஸ்டான்லி மருத்துவக் கல்லூரியில் தொடங்கி முன்னோடியாக திகழ்ந்தவர் Dr விஸ்வநாதன். இந்த சிகிச்சையகம் சிறிது காலத்தில் நீரிழிவு நோய்க்கான ஒரு துறையாக உருவானது, சமீபத்தில், நீரிழிவு நோய்க்கான ஒரு நிறுவனமாக மேம்படுத்தப்பட்டது.

ஆனால் இதற்கெல்லாம் முன்பு 1960களில், அரசாங்கக் கொள்கைகள் மாறியபோது, விஸ்வநாதன் ஸ்டான்லி மருத்துவமனையிலிருந்து வெளியேறி, சென்னை ராயபுரத்தில் தனது சொந்த நீரிழிவு சிகிச்சை யகத்தை நிறுவினார், இந்தியா முழுவதும் நீரிழிவு நோயால் பாதிக்கப் பட்ட மக்களுக்கு இது கிட்டத்தட்ட ஒரு மெக்காவாக மாறியது. அதற்கு பின்னரே, பல நகரங்கள் அவர்களின் சொந்த நீரிழிவு சிகிச்சையகங்களை தொடங்கியது.

RC மெட்ராஸ் ஈஸ்டின் கௌரவ உறுப்பினரான Dr மோகன், தனது தந்தையின் ஆராய்ச்சி ஆர்வம் தனக்கு எப்படி தொற்றியது மற்றும் நோயாளிகளின் வழக்கு ஆய்வுகளை உன்னிப்பாகப் பராமரிப்பதன் முக்கியத்துவம், அவற்றால் பெறும் தகவல்களால் ஒரு மருத்துவரின் அறிவு எப்படி வளம் பெறுகிறது என்பதை பற்றியும் கூறுகிறார்.

இளம் வயது மோகன் தனது சக மருத்துவ மாணவி ரீமாவின் இதயத்தை எவ்வாறு வென்று தனது மனைவியாக்கி கொண்டார் என்பது பற்றிய ஒரு காதல் குறிப்பைத் தொடுத்த பிறகு, தானும் தன் மனைவியும் எப்படி தனது தந்தையின் மையத்திலிருந்து பிரிந்து, வெறும் ஸ்டெதாஸ்கோப் மற்றும் வங்கி கணக்கில் 80,000 ரூபாயுடன் வெளியேறி சென்னையில் சொந்தமான நீரிழிவு மையத்தை நிறுவினார் என்பதை பற்றி கூறுகிறார்.




புத்தகத்தின் எஞ்சிய பகுதி மருத்துவ தொழில்முனைவோராக இருப்பதன் அபாயங்களைப் பற்றியது; நில உரிமையாளர்கள் மற்றும் வங்கியாளர்களை கையாள் வதில் ஏற்படும் சிக்கல்கள் மற்றும் அவரது நோயாளியான ஒரு பெரிய நிதி நிறுவனத்தின் தலைவர் அவரது முழு மருத்துவமனைக்கும் நிதியளிக்க முன்வந்து அவரை ஆச்சரியப் படுத்தியது போன்ற சம்பவங்கள் அவற்றில் உள்ளடங்கும்.

முதல் வெற்றிக்குப் பிறகு, சூர்யா ஜுன்ஜுன்வாலா உட்பட பல பங்குதாரர்கள் மற்றும் நன்கொடையாளர்கள் அவரது மருத்துவமனைக்கு ஒரு தனி ஆராய்ச்சி கட்டிடத்தை அமைப்பதற்கு நன்கொடை அளித்தனர். பின்னர் சிறுசேரியில் அறிவியல் பின்புலம் கொண்ட பெண் தொழில்முனைவோருக்கான மகளிர் பயோடெக் பூங்காவில் ரீமா அவர்களுக்கு நிலம் ஒதுக்கப்பட்டது. அவருக்கு ஒதுக்கப்பட்ட 6.5 ஏக்கர் நிலத்தில் 32,000 சதுர அடியில் நீரிழிவு ஆராய்ச்சிக்காக பிரத்யேகமான மையம் அமைக்கப்பட்டது.

எழுத்தாளரின் எளிமையான நடை, அதில் அவர் பொதித்திருக்கும் கதைகள், நகைச் சுவை மற்றும் நீரிழிவு நோயைக் கையாள்வது பற்றிய எளிய உண்மைகள் இந்த புத்தகத்தின் சிறந்த அம்சங்கள்.

ஆனால் இவை அனைத்தும் நிதியுதவி பெறுவதில் ஏற்படும் விரக்தியுடன் எப்படி கைகோர்த்து கொள்கின்றன என்பதும் புத்தகத்தில் கூறபடுகிறது. தொழில்முனைவு கடினமானது; மருத்துவ தொழில் முனைவு அதை விட கடினமானது, இந்த புத்தகம் அதை உங்களுக்கு எடுத்துரைக்கும்.■



# எல்லா அழுத்தமும் கெடுதல் இல்லை

ஷீலா நம்பியார்

பொதுவாக நாம் அழுத்தத்தையும் அழுத்தம் தரும் நிகழ்வுகளையும் வலுவிழக்கச் செய்கிறவையாகப் பார்க்கப் பழக்கப்பட்டுள்ளோம். அழுத்தம் நம் நலனுக்கு, உறவுகளுக்கு, பணிக்கு, அறிவாற்றலுக்கு, நீடித்திருத்தலுக்கு மோசமானது என்று பலரும் நம்புகிறார்கள். ஆனால், இது எப்போதும் உண்மை இல்லை. நம்முடைய இலக்குகளைச் சாதிக்கும் பயணத்தின் போது சிறிதளவு அழுத்தத்தை உணர்வது உண்மையில் நல்லதுதான், அது நாம் இன்னும் நன்கு கவனம் செலுத்தவும் இன்னும் விரைவாக முன்னேறவும் உதவும்.

நம் உடல் அழுத்தத்துக்கும் அதன்பிறகு நடக்கிறவற்றுக்கும் எப்படி எதிர்வினையாற்றுகிறது என்பது ''மன அமைப்பு'' என்கிற ஆழமான வேர் கொண்ட நம்பிக்கை அமைப்பைச் சார்ந்திருப்பதாகத் தோன்றுகிறது.

மன அமைப்பு என்றால் என்ன? நலன், உணவுப் பழக்கம், அழுத்தம், உடற்பயிற்சி, அரசியல் போன்ற பரவலான தலைப்புகளைப்பற்றிய ஒருவருடைய மனத்தின் இயல்பு நிலை அமைப்புதான் அது. இது போன்ற தலைப்புகளை நாம் ஒட்டுமொத்தமாக எப்படிப் பார்க்கிறோம் என்பதுதான் மன அமைப்பு. ஒரு தலைப்பின் மீதான நம் பார்வையை, அதைச் சுற்றி நாம் எடுக்கும் தீர்மானங்களை, நாம் எடுக்கும் தீர்மானங்களுக்கு நம் உடல் எப்படி எதிர்வினையாற்றுகிறது என்பதைக்கூட இது கட்டுப்படுத்துகிறது. எடுத்துக்காட்டாக, உடற்பயிற்சி என்பது வலி மிகுந்தது, சலிப்பூட்டுவது என்கிற மன அமைப்பு நம்மிடம் இருந்தால், நாம் அதை மகிழ்ச்சியாக அனுபவிக்காமலிருக்க அல்லது அதிலிருந்து போதுமான பலன்களைப் பெறாமலிருக்க வாய்ப்பு உண்டு. ''நலமான உணவு'' என்பது சுவையற்றது, சலிப்பூட்டுவது என்ற மன அமைப்பு நமக்கு இருந்தால், நாம் நலமான உணவுப் பழக்கத்தைத் தொடர்கிற அல்லது அதன்மூலம் மன நிறைவை உணர்கிற வாய்ப்புகள் குறைவு. மன அமைப்புகள் பொதுவாக நம் இளமைப் பருவத்தில் நமக்குள் பதிக்கப்படுகின்றன, நம்மைச் சுற்றி நாம் பெறும் செய்திகளிலிருந்து உள்ளுக்குள் உருவாகின்றன. இதை ஒருவர் எப்போதும் உணர்ந்திருப்பதில்லை. பல நேரங்களில், ஒரு விஷயத்தைப்பற்றிய நம்முடைய மன அமைப்பு நமக்குத் தெரிந்திருப்பதில்லை, நாம் அதைப்பற்றி நேரடியாகச் சிந்தித்து, நம்மை நாமே கேள்வி கேட்டுக்கொண்டால்தான் அது தெரியவரும். பல நேரங்களில், நம்முடைய தீர்மானங்கள் ஏற்கெனவே தீர்மானிக்கப்பட்ட நம் மன அமைப்புகளை அடிப்படையாகக் கொண்டுள்ளன என்று உணராமலே நாம் தீர்மானம் எடுக்கிறோம்.

மிகவும் அதிர்ச்சி தருகிற, அழுத்தம் தருகிற ஒரு நிகழ்வுக்குப் பிறகும் சிதைந்துபோகாமல் மேம்படுகிற உடலின் திறனைத்தான் அதிர்ச்சிக்குப் பிந்தைய வளர்ச்சி என்கிறோம். அதுபோன்ற நிகழ்வுகள் நம் வாழ்க்கையின் பொருள், நோக்கத்தை உணர நமக்கு உதவலாம். வேறு வழிகளில் நாம் இதை எப்போதும் உணராமலிருக்கலாம். இது போன்ற நிகழ்வுகள் நம்மை நமக்கு முக்கியமான மக்களுடன் இன்னும் நெருக்கமாக்கலாம், வாழ்க்கையில் நாம் உண்மையில் எதை மதிக்கிறோம் என்பதை அடையாளம் காண, அதில் கவனம் செலுத்த நமக்கு உதவலாம். அது வாழ்க்கை மீது ஒரு பேரார்வத்தைத் தூண்டலாம், மேலும் மகிழ்ச்சியை உருவாக்கலாம், நன்றியுணர்வை உருவாக்கிக்

கொள்ள நமக்கு உதவலாம். பல நேரங்களில், இதுபோன்ற நிகழ்ச்சிகள் நாம் எப்போதும் சிந்திக்காத விஷயங்களைப்பற்றிச் சிந்திக்கச் செய்கின்றன, நம் தனிப் பட்ட வளர்ச்சிக்கு உதவுகின்றன.

எடுத்துக்காட்டாக, இந்த நோய்ப்பரவலின் போது மக்களிடம் பேசியதன் வழியாக, இது நிறைய நிகழ்வதை நான் கண்டறிந்துள்ளேன். நோய்ப்பரவல் எல்லாருக்கும் அழுத்தம் தருகிற ஒன்றாக இருந்துள்ளது. ஆனால், அது பலரை மதிப்பீடுகள், உறவுகள், தங்கள் நலன், தங்கள் பணி, இவற்றைத் தாங்கள் எப்படிக் கருது கிறோம் என்கிறவற்றைப்பற்றிச் சிந்திக்கவைத்துள்ளது. நலனை மேம்படுத்துவதுபற்றி மக்கள் இன்னும் தீவிரம் கொண்டுள்ளார்கள். சிலர், தங்களுக்கு நலனைத் தராமல் தீங்கை விளைவிக்கும் வேலைகளை அறிந்துகொண்டு அவற்றிலிருந்து விலகியுள்ளார்கள். சிலர் தங்கள் உறவுகளை வளர்ப்பது, மதிப்பது ஆகியவற்றுக்குக் கூடுதல் நேரம் செலவிடத் தொடங்கியுள்ளார்கள். சில நேரங்களில், அழுத்தமான ஒரு நிகழ்வு அனைத்தைப்பற்றியும் வேறுவிதமாகச் சிந்திக்க நமக்கு உதவுகிறது.

ஒருவர் அழுத்தத்தைக் கையாள்வது அல்லது அதிலிருந்து வளர்வது ஆகியவை, அவர் அழுத்தத்தை எப்படிப் பார்க்கிறார், அதைப்பற்றி என்ன நினைக்கிறார், நம்புகிறார் என்பவற்றைச் சார்ந்திருப்பதாக ஸ்டான்ஃபோர்ட் பல்கலைக்கழகத்தின் ஆராய்ச்சி ஒன்று கண்டறிந்துள்ளது. எடுத்துக் காட்டாக, அழுத்தம் என்பது உண்மையில் வலுவிழக்கச்செய்வது என்று ஒருவர் நம்பினால், அழுத்தம் தரும் விஷயம் ஒன்றிலிருந்து அவர் மீள்வதற்கான திறன் குறைவாக இருக்கும். அழுத்தம் என்பது ஆற்றல் அளிப்பது, வளர்ச்சியில் உதவக்கூடியது என்று அவர் நம்பினால், அவர் அதிலிருந்து மீள்கிற, அல்லது அதன்மூலம் வளர்கிற திறன் மேம்படும்.

அழுத்தத்தைப்பற்றிய நம் மன அமைப்பு எப்படி இருந்தாலும் சரி, அழுத்தத்துக்கு நம் உடலும் மனமும் எப்படி எதிர்வினையாற்றுகின்றன என்பதைப் பாதிக்கும் திறன் அதற்கு உண்டு, குறிப்பாக, தொலைநோக்கில் இது மிகவும் உண்மை. நீங்கள் “அழுத்தம் தரும் ஒரு விஷயத்தை” அச்சுறுத்தலாக எண்ணாமல் சவாலாக எண்ணினால், நீங்கள் அந்த நிகழ்வுக்கு நேர்விதமாக எதிர்வினையாற்றுகிற, அதற்கேற்ப உங்களைத் தகவமைத்துக் கொள்கிற சாத்தியம் கூடுதலாகும். எடுத்துக்காட்டாக, உங்கள் நேர்காணல்/தேர்வு/வேலையை நீங்கள் ஒரு சவாலாகப் பார்த்தால், அதை நீங்கள் திறந்த மனத்துடன் அணுகுகிற, இன்னும் நன்கு பணியாற்றுகிற வாய்ப்பு கூடுதலாகும். நீங்கள் அதை அச்சுறுத்தலாகப் பார்த்தால், அதை எண்ணிப் பதற்றம் அல்லது திகைப்பை உணர்ந்தால், இந்த வாய்ப்பு குறையும். நீங்கள் கடினமான ஓர் உறவை உங்களை வலுவிழக்கச் செய்கிற ஒன்றாக எண்ணாமல் ஒரு சவாலாகப் பார்த்தால், நீங்கள் அதை உரிய முறையில் கையாள்கிற, அதனால் சிதைக்கப்படாமல் இருக்கிற வாய்ப்புகள் கூடுதலாகும். நீங்கள் எங்கும் இருக்கிற, தவிர்க்க இயலாத, ஆனால், வாழ்க்கையை மேம்படுத்தக் கூடிய ஓர் இயற்கை விஷயமாக அழுத்தத்தைப் பார்த்தால், நீங்கள் அதன்மூலம் மேம்படுவதற்கான வாய்ப்புகள் கூடுதலாகும். அத்துடன், நீங்கள் அதன்மூலம் வளர்கிற வாய்ப்புகள் கூடுதலாகும். நம் மன அமைப்பை மாற்றுவதன்மூலம் நாம் அழுத்தத்தை நம் நன்மைக்குப் பயன்படுத்திக்கொள்ளலாம்.

மிகக் கொடுமையான அனுபவங்களைக் கடந்து வந்து உயிர்வாழ்ந்தவர்கள், அவ்வளவு ஏன், இன்னும் சிறந்து விளங்கியவர்கள் பலர் உண்டு. அவர்களுடைய உண்மைக் கதைகளை நாம் கேட்கிறோம். எடுத்துக்காட்டாக, மருத்துவர் விக்டர் ஃப்ராங்கைல் அவர்களுடைய வாழ்க்கையைப் பார்ப்போம். ஆஸ்திரியாவைச் சேர்ந்த இவர் நரம்பியல் வல்லுனர், உளவியலாளர், பெரும் இன அழிப்பில் உயிர் பிழைத்தவர். “A man’s search for meaning’ (ஒரு மனிதர் வாழ்வின் பொருளைத் தேடுகிறார்) என்ற அவருடைய புத்தகம் அனைவரும் படிக்கவேண்டியது. மனிதனுடைய மிக ஆழமான ஆசை, வாழ்க்கையின் பொருளை மற்றும் நோக்கத்தைத் தேடுவது தான் என்கிறார் Dr ஃபிராங்கைல். அவர் சந்தித்த (கொடுமையான) சூழல், அதனால் ஏற்பட்ட அழுத்தம் ஆகியவற்றைப்பற்றிய அவருடைய மன அமைப்பால் அவர் கைதிகள் முகாம்களிலிருந்து உயிர்பிழைத்தார். அங்கிருந்து வெளிவந்தபின் அவர் சிறந்து விளங்கவும் தன் பணியின்மூலம் லட்சக்கணக் கானோருக்கு உதவவும் இந்த மன அமைப்பு அவருக்கு உதவியது.

Dr கிரம் மற்றும் அவருடைய சக ஊழியர்கள் நடத்திய ஓர் ஆராய்ச்சியில், பங்கேற்றவர்கள் சிலருக்கு அழுத்தத்தின் நேர்விதமான படங்கள் காண்பிக்கப்பட்டன, அழுத்தம் என்பது நேர்விதமான ஒரு விஷயம், அது நீங்கள் வளர உதவுகிறது என்று அவை அவர்களுக்குச் சுட்டிக்காண்பித்தன. அந்தப் பங்கேற்பாளர்கள் ஒப்பீட்டளவில் சிறந்து விளங்கி னார்கள், அவர்களுடைய உடல், மன நலன் இன்னும் சிறப்பாக இருந்தது, அவர்கள் தங்கள் பணியில் இன்னும் நல்ல செயல்திறனைக் கொண்டிருந்தார்கள், அவர்களுக்கு வலி, வேதனை, பதற்றம் குறைவாக இருந்தது. ஆனால், அழுத்தம் என்பது வலுவிழக்கச்செய்வது என்று காண்பிக்கும் வழக்கமான படங்களைப் பார்த்த பங்கேற்பாளர்கள் முன்பைவிடச் சிறப்பாகச் செயல்பட வில்லை. அழுத்தம்பற்றிய குறிப்பிட்ட (மேம்படுத்துவது அல்லது வலுவிழக்கச்செய்வது என்கிற) மனப்பான்மைகளைச் சுருக்கமாகப் பெற்றவர்களிடம்கூட, அதனால் ஏற்படும் தாக்கம் அவர்கள் எந்த வகை அழுத்தத்துக்கும் எப்படி எதிர்வினையாற்றுகிறார்கள் என்பதைப் பெரிய அளவில் மாற்றலாம் என்று இந்த ஆராய்ச்சி காண்பித்தது.

இதன் ஆசிரியரை
sheelanambiar@gmail.com
என்ற இணையதளத்தில்
தொடர்பு கொள்ளலாம்.
Website:www.drsheelanambiar.com




## Rotary at a glance

| | | |
|---|---|---|
| Rotary clubs | : | 36,945 |
| Rotaract clubs | : | 11,150 |
| Interact clubs | : | 16,872 |
| RCCs | : | 12,082 |
| Rotary members | : | 1,204,997 |
| Rotaract members | : | 234,520 |
| Interact members | : | 398,475 |

*As on April 20, 2022*

## Membership Summary

As on April 1, 2022

| RI District | Rotary Clubs | No of Rotarians | Women Rotarians (%) | Rotaract Clubs | Interact Clubs | RCC |
|---|---|---|---|---|---|---|
| 2981 | 135 | 6,315 | 8.50 | 54 | 52 | 239 |
| 2982 | 77 | 3,492 | 7.10 | 47 | 98 | 73 |
| 3000 | 131 | 5,435 | 9.35 | 97 | 291 | 214 |
| 3011 | 119 | 4,718 | 26.85 | 74 | 118 | 36 |
| 3012 | 149 | 4,058 | 24.82 | 65 | 79 | 61 |
| 3020 | 79 | 4,973 | 7.54 | 33 | 168 | 350 |
| 3030 | 98 | 5,329 | 15.59 | 125 | 309 | 361 |
| 3040 | 106 | 2,662 | 13.56 | 57 | 81 | 181 |
| 3053 | 73 | 3,017 | 18.40 | 35 | 50 | 126 |
| 3054 | 172 | 7,191 | 20.09 | 105 | 184 | 565 |
| 3060 | 104 | 5,223 | 15.41 | 64 | 73 | 150 |
| 3070 | 123 | 3,426 | 16.05 | 47 | 43 | 59 |
| 3080 | 103 | 4,592 | 14.79 | 139 | 161 | 116 |
| 3090 | 92 | 2,391 | 6.02 | 43 | 83 | 123 |
| 3100 | 101 | 2,315 | 11.62 | 13 | 26 | 146 |
| 3110 | 141 | 3,867 | 12.02 | 14 | 18 | 106 |
| 3120 | 89 | 3,702 | 16.83 | 63 | 34 | 55 |
| 3131 | 141 | 5,694 | 24.10 | 120 | 240 | 141 |
| 3132 | 87 | 3,611 | 11.05 | 33 | 125 | 167 |
| 3141 | 113 | 6,369 | 27.13 | 141 | 187 | 102 |
| 3142 | 99 | 3,748 | 21.16 | 82 | 147 | 82 |
| 3150 | 112 | 4,555 | 13.57 | 127 | 143 | 118 |
| 3160 | 79 | 2,791 | 9.57 | 29 | 20 | 82 |
| 3170 | 141 | 6,559 | 15.75 | 93 | 250 | 172 |
| 3181 | 86 | 3,479 | 8.85 | 35 | 196 | 116 |
| 3182 | 86 | 3,541 | 9.60 | 43 | 128 | 104 |
| 3190 | 162 | 6,938 | 19.37 | 191 | 213 | 71 |
| 3201 | 155 | 6,146 | 10.04 | 121 | 101 | 79 |
| 3203 | 93 | 4,831 | 8.18 | 74 | 233 | 37 |
| 3204 | 62 | 2,175 | 7.86 | 21 | 30 | 13 |
| 3211 | 152 | 5,142 | 8.58 | 7 | 25 | 133 |
| 3212 | 130 | 4,955 | 11.77 | 79 | 205 | 153 |
| 3231 | 94 | 3,603 | 8.35 | 31 | 82 | 419 |
| 3232 | 166 | 8,148 | 18.46 | 124 | 220 | 96 |
| 3240 | 104 | 3,623 | 16.31 | 63 | 408 | 218 |
| 3250 | 104 | 3,935 | 20.58 | 63 | 73 | 185 |
| 3261 | 91 | 3,329 | 18.89 | 15 | 24 | 44 |
| 3262 | 127 | 4,253 | 14.58 | 74 | 83 | 145 |
| 3291 | 165 | 4,364 | 24.04 | 135 | 98 | 663 |
| **India Total** | **4,441** | **174,495** | | **2,776** | **5,099** | **6,301** |
| 3220 | 72 | 2,266 | 16.02 | 89 | 137 | 75 |
| 3271 | 116 | 2,366 | 17.75 | 97 | 185 | 25 |
| 3272 | 161 | 1,886 | 17.55 | 70 | 22 | 47 |
| 3281 | 305 | 7,640 | 17.53 | 274 | 151 | 207 |
| 3282 | 182 | 3,792 | 11.08 | 202 | 49 | 47 |
| 3292 | 155 | 6,074 | 17.98 | 174 | 133 | 127 |
| **S Asia Total** | **5,432** | **198,519** | | **3,682** | **5,776** | **6,829** |

*Source: RI South Asia Office*

# District Wise TRF Contributions as on March 2022

(in US Dollars)

| District Number | Annual Fund | PolioPlus | Endowment Fund | Other Funds | Total Contributions | EREY Donors (in numbers) | EREY % |
|---|---|---|---|---|---|---|---|
| **India** | | | | | | | |
| 2981 | 103,202 | 1,700 | 15,000 | 219,084 | 338,986 | 174 | 3.3 |
| 2982 | 43,784 | 6,360 | 2,500 | 3,449 | 56,093 | 201 | 6.2 |
| 3000 | 29,298 | 1,436 | 0 | 45,037 | 75,770 | 25 | 0.5 |
| 3011 | 25,455 | 10,044 | 0 | 234,443 | 269,941 | 42 | 1.0 |
| 3012 | 22,280 | 18,504 | 50,041 | 455,135 | 545,960 | 40 | 1.1 |
| 3020 | 77,429 | 16,347 | 30,596 | 4,620 | 128,992 | 213 | 5.1 |
| 3030 | 79,215 | 1,821 | 63,185 | 15,704 | 159,924 | 135 | 2.9 |
| 3040 | 34,758 | 274 | 0 | 57,198 | 92,231 | 9 | 0.4 |
| 3053 | 11,870 | 1,811 | 27 | 134,393 | 148,102 | 15 | 0.6 |
| 3054 | 5,906 | 3,139 | 0 | 209,048 | 218,092 | 24 | 0.3 |
| 3060 | 103,783 | 9,671 | 500 | 155,868 | 269,821 | 1,386 | 28.8 |
| 3070 | 31,742 | 27 | 0 | 27,601 | 59,370 | 156 | 5.0 |
| 3080 | 65,859 | 6,732 | 14,686 | 7,179 | 94,456 | 197 | 6.2 |
| 3090 | 43,981 | 687 | 29,000 | 0 | 73,668 | 184 | 8.8 |
| 3100 | 25,901 | 100 | 0 | 2,537 | 28,538 | 81 | 3.7 |
| 3110 | 30,093 | 68 | 1,014 | 20,417 | 51,592 | 121 | 3.5 |
| 3120 | 63,062 | 1,000 | 0 | 0 | 64,062 | 166 | 4.9 |
| 3131 | 420,178 | 35,649 | 51,000 | 806,920 | 1,313,747 | 2,016 | 43.0 |
| 3132 | 27,836 | 3,396 | 5,000 | 12,029 | 48,261 | 52 | 1.6 |
| 3141 | 404,834 | 5,800 | 124,532 | 1,436,698 | 1,971,864 | 914 | 15.5 |
| 3142 | 332,834 | 4,015 | 11,268 | 185,362 | 533,479 | 796 | 23.5 |
| 3150 | 95,671 | 44,343 | 141,000 | 88,588 | 369,602 | 714 | 18.1 |
| 3160 | 103,746 | 4,673 | 17,264 | 0 | 125,682 | 57 | 2.4 |
| 3170 | 95,398 | 15,739 | 1,714 | 98,191 | 211,042 | 456 | 7.8 |
| 3181 | 52,794 | 5,352 | 203 | 116 | 58,464 | 332 | 10.2 |
| 3182 | 45,184 | 8,712 | 4,000 | 15,274 | 73,170 | 197 | 6.3 |
| 3190 | 324,760 | 36,230 | 30,411 | 212,977 | 604,379 | 1,299 | 21.1 |
| 3201 | 108,880 | 65,573 | 0 | 305,081 | 479,535 | 472 | 8.2 |
| 3203 | 50,258 | 17,638 | 7,086 | 295,243 | 370,224 | 184 | 4.5 |
| 3204 | 27,133 | 6,423 | 0 | 1,036 | 34,593 | 45 | 2.3 |
| 3211 | 36,697 | 724 | 0 | 18,999 | 56,419 | 94 | 2.1 |
| 3212 | 66,452 | 2,464 | 1,036 | 9,811 | 79,763 | 92 | 1.8 |
| 3231 | 21,272 | 10,678 | 9,867 | 6,851 | 48,667 | 158 | 4.6 |
| 3232 | 90,667 | 89,369 | 123,052 | 1,138,214 | 1,441,302 | 201 | 2.8 |
| 3240 | 116,416 | 12,581 | 0 | 77,864 | 206,861 | 451 | 13.8 |
| 3250 | 23,268 | 3,576 | 1,036 | 19,558 | 47,437 | 335 | 9.2 |
| 3261 | 7,440 | 1,713 | 300 | 184,913 | 194,366 | 20 | 0.7 |
| 3262 | 22,120 | 3,296 | 0 | 0 | 25,416 | 69 | 1.8 |
| 3291 | 116,680 | 3,830 | 22,271 | 22,785 | 165,566 | 353 | 9.4 |
| **India Total** | **3,388,136** | **461,494** | **757,586** | **6,528,221** | **11,135,437** | **12,476** | **8.0** |
| 3220 **Sri Lanka** | 52,384 | 6,973 | 2,010 | 1,000 | 62,366 | 127 | 5.6 |
| 3271 **Pakistan** | 6,240 | 3,431 | 0 | 17,755 | 27,425 | 9 | 0.5 |
| 3272 **Pakistan** | 16,857 | 11,158 | 0 | 2,117 | 30,132 | 14 | 0.8 |
| 3281 **Bangladesh** | 65,678 | 64,562 | 26,118 | 311,269 | 467,627 | 148 | 1.8 |
| 3282 **Bangladesh** | 36,624 | 19,916 | 1,000 | 37,740 | 95,280 | 111 | 3.0 |
| 3292 **Nepal** | 109,389 | 11,248 | 0 | 104,711 | 225,348 | 655 | 11.2 |
| **South Asia Total** | **3,675,307** | **578,781** | **786,714** | **7,002,813** | **12,043,616** | **13,540** | **7.5** |

Annual Fund (AF) includes SHARE, Areas of Focus, World Fund and Disaster Response.

**Source:** RI South Asia Office.

Wordsworld

# Epic realities




Sandhya Rao

Revisiting two enduring narratives reinforces the belief that riches of the heart and mind result from a free and fair play of diversity.

When the centre cannot hold, as W B Yeats warned in 'The Second Coming', things fall apart, and 'mere anarchy is loosed upon the world'. This is where we seem to be today. Where do we go from here is the tormenting question. While drowning in despondency, I chanced upon *Mahabharata: The Epic and the Nation* by GN Devy and my interest was piqued.

For one, Devy. After a teaching career, he headed a major linguistic survey with the help of 3,000 volunteers that led to 'a comprehensive documentation of all living Indian languages in 50 volumes' called the People's Linguistic Survey of India. He works extensively with denotified and nomadic tribes, is the founder of the Bhasha Research and Publication Centre in Baroda, and the Adivasi Academy in Tejgadh, and writes in Marathi, Gujarati and English on subjects such as literary criticism, anthropology, education, linguistics and philosophy. He was among those who returned their Sahitya Akademi Award in protest against the threat to freedom of expression and growing intolerance.

For another, the timeless magic of the *Mahabharata*. As Devy observes, 'It may not be quite off the mark to say that, among other cultural elements, the *Mahabharata* is one significant cultural production that brings Indians together. The diversity of language, land and life patterns in this country is so vast that no Indian can genuinely relate to all of it. Probably, it is through cultural practices and icons like the *Mahabharata* that we have a sense of being united.'




Devy argues that the epic has created a unique method of remembering the past, a method he says India has internalised, as 'the way of preserving its national memory'. Then he goes on to make a significant statement: 'The *Mahabharata* spirit is bound to agitate against any jingoistic and unitary sense of the subcontinent as a nation, for it is marked by an immense diversity of every kind. The *Mahabharata* unites us not in any imagined territorial national space; it brings us together in Time, symbolised by the never-stopping *kala-chakra*, the epic's iconic symbol, which teaches us a great spirit of acceptance of all that is in complete humility.'


What about the *Ramayana*, then, the other timeless epic? That too has recently found expression in a unique book: no, not an interpretation but an engaging piece of travel writing. It all began with an innocuous question Vikrant Pande and Neelesh Kulkarni asked friends about where Chitrakoot was. Nobody knew, nor could they locate Kishkindha, although the names were familiar. So the two decided they would find out for themselves and started on a journey across India and Sri Lanka to all the places mentioned in the epic. This gave birth to *In the Footsteps of Rama: Travels with the Ramayana*. And before you pass judgement, it's not a 'religious' work, it really is about travel, stories, and versions of stories, and the 'willing suspension of disbelief', to quote Coleridge.

Their journey begins and ends at Hanuman Garhi in Ayodhya, where Hanuman is said to have 'settled down'. The mahant of this temple, Baba Gyan Das, asks: 'Do you know who built this fort? It was a Muslim ruler. Not only did he build the fort, he also granted the temple freedom from all taxes and decreed

that no one could litigate against it ever.' According to him, the son of Abdul Mansoor Khan Safdarjang, the second Nawab of Oudh, was cured of leprosy by the power of Hanuman. In grateful thanks, Mansoor Khan built a fort to house the temple.

Each place they visit all the way down to Sri Lanka and back evokes several stories, often at variance with what they had read while researching the *Ramayana* prior to undertaking this journey. They meet interesting people, take in different landscapes and, yes, taste delicious food — or not! For instance, on the edge of Allahabad fort is where Sita is believed to have prayed before leaving for Chitrakoot; but before leaving Allahabad, our authors make sure to taste Bhagat Chaat Bhandar's mouthwatering *pakore ki chaat*! From Delhi they take the Sampark Kranti Express to Chitrakoot where they were advised to stay because the forest had 'plenty of animals to hunt, many trees that bear fruit, and where many ascetics have chosen to live.'

Pande and Kulkarni embark on a 450-foot descent through thick forest to Lonar lake in Maharashtra; the lake is in the middle of a crater which 'is one of the only four impact craters in the world in basaltic rock and is still beautifully preserved. Maskelynite, a glass-like material that was thrown up by the impact, still shines through the sand at the edges of the lake.' Locals believe the lake was 'Shukracharya's laboratory where he perfected the Sanjeevani drug that resurrected dead rakshasas.'




They come across a village en route to Nashik where, apparently, Sita was abandoned after aspersions were cast on her character. However, when the villagers ignored her pleas for help, she cursed them saying wheat would never grow in their soil. 'The curse stayed for thousands of years, all the way till 1965, when the Green Revolution brought in a hybrid variety of wheat and other grains that could be grown here,' a village elder tells the authors. '… grain stalks would simply crumble if we tried sowing wheat here…'

While they found some places difficult to locate, some seemed even to have been forgotten. But the majority were well remembered, both by the people and through folklore. At times, though, it seemed the stories were very much imagined, as in Mumbai, for instance. But, as a trustee of a temple in Walkeshwar tells them, 'It is not about what happened here, but what people believe in.' This remark makes the authors realise that 'the truth is only what we want to believe. If people believe Rama came to Mumbai, then he sure did!'

The world is full of Ramas and Ravanas, individuals of great merit, yet vulnerable to human frailties. But one thread runs through both epics, and that is the self-destructive nature of hate.

Apparently, the popular stories about the Lakshman Rekha and Shabari tasting every berry she offered Rama has no literary or historical validity in any of the five versions of the epic — Tulsidas, Valmiki, Eknath, Kambar and Adhyathmak — the authors researched. A mismatch between distances mentioned in the epic and facts suggest that Lanka was possibly larger than the Sri Lanka of today. It is such an irony that a kingdom described as being rich and prosperous is now facing its biggest economic crisis.

'We notice that most temples in Sri Lanka also house prominent Buddhist pilgrimage sites,' the authors note. 'The Murugan temple in Kataragama is more well-known for the Buddhist complex inside (it also houses a mosque, a church, a temple to a tribal deity, and a temple to Ganesha), apart from those dedicated to Murugan's wives — Valli and Devayani.' And at Nil Diya Pokuna, or blue water lake, they trudge through a pitch-dark tunnel in Istripuram to see the cave where Sita was supposedly hidden, but they don't have the stomach to squeeze into the cave. 'Many believe that Ravana still lives in these caves,' their guide tells them as they beat a hasty retreat!

The world is full of Ramas and Ravanas, individuals of great merit, yet vulnerable to human frailties. But one thread runs through both epics, and that is the self-destructive nature of hate. Now, that's a lesson for our time.

*The columnist is a children's writer and senior journalist*

## RC பாண்டிச்சேரி வொயிட் டவுன் — RID 2981



RC பாண்டிச்சேரி மெரீனா உடன் காக்கிநாடாவில் நடந்த மகளிர் ஹாக்கி தேசியப் போட்டியிற்குச் சென்ற 21 விளையாட்டு வீரர்களுடைய பயணச் செலவுகளை ஏற்றுக்கொண்டார்கள்.

## RC விசாகப்பட்டினம் — RID 3020



விசாகப்பட்டினம், அதன் அருகில் உள்ள (சில பழங்குடியினப் பகுதிகள் உள்பட) வீடில்லாத குடும்பங் களுக்குப் போர்வைகள் வழங்கப்பட்டன.

## RC கரூர் — RID 3000



இந்தச் சங்கம் அரசு நடுநிலைப் பள்ளிகளில் பயிலும் 66 மாணவர் களுக்கு SCAW (உலகெங்கும் தூங்கும் குழந்தைகள்) பொதிகளை வழங்கியது.

## RC நாக்பூர் விஷன் — RID 3030



தோசே டயட் அன்ட் டிரில்ஸ் என்ற திட்டத்தின் கீழ் இந்தச் சங்கமும் AIIMS நாக்பூரும் இளவயது நீரிழிவு கொண்ட நான்கு குழந்தைகளுக்கு ஓராண்டு மருந்துகளை வழங்குகின்றன.

## RC சோனெபட் — RID 3012




பார்வை 50 திட்டத்தின்கீழ் 35 நோயாளிகளுக்குக் கண் புரை அறுவைச் சிகிச்சை செய்யப் பட்டது. இந்த ஆண்டு 50 நோயாளி களுக்கான சிகிச்சையை ஆதரிக்க விரும்புகிறது.

## RC பாலி — RID 3054



கண் புரை அறுவைச் சிகிச்சைகளுக் கான இயந்திரம் ரூ.11 லட்சம் மதிப்புள்ள GG திட்டத்தின் வழியாக RC சார்லொட் டெஹால் (RID 7620) உடன் நிறுவப்பட்டுள்ளது.

# செய்திகள்

### RC சூரத் ரவுன்ட்-டவுன் — RID 3060



இந்தச் சங்கத்தின் பொன்விழா ஆண்டைக் குறிக்கும் வகையில் நடை பெற்ற "ரோட்டரி ஓட்டம்" என்ற மாரத்தான் நிகழ்ச்சியை DG சந்தோஷ் பிரதான் தொடங்கி வைத்தார்.

### RC லக்னோ ராஜ்தானி — RID 3120



பெண்கள் கார் பேரணியை DG சமர் ராஜ் கார்க் தொடங்கி வைத்தார். ஓர் ஆங்கில நாளிதழின் ஆதரவுடன் புதையல் வேட்டை நிகழ்ச்சி நடத்தப்பட்டது.

### RC பக்வாரா மிட்-டவுன் — RID 3070



இந்தச் சங்கத்தின் மாதாந்திரத் திட்டத்தின்கீழ், பக்வாராவில் உள்ள அரசுப் பெண்கள் பள்ளி ஒன்றில் பயிலும் மாணவர்களுக்கு எழுதுபொருட்கள் வழங்கப்பட்டன.

### RC கோரெகாவ்ன் பார்க் — RID 3131



புணே அருகில் உள்ள அந்தாகாவ்ன் கிராமத்தைச் சேர்ந்த சுமார் 500 பழங்குடியினத் தவர்களுக்கு மளிகைப் பொருட்கள் வழங்கப்பட்டன.

### RC அலிகர் மன்சி — RID 3110



பல பள்ளிகளில் கருப்பை வாய்ப் புற்றுநோய் விழிப்புணர்வு நடத்தப் பட்டன. சங்கத் தலைவர் Dr நீதி கோயல், Dr சுவாதி, Dr சுரபி அக்ரவால் பேசினார்கள்.

### RI மாவட்டம் 3141



மும்பை நகராட்சிப் பள்ளி ஆசிரியர் களுக்குத் தொடுகணினி கள் வழங்கப் பட்டன, மேலும் 500 பெண்களுக்குத் தையல் இயந்திரங்கள் வழங்கப்பட்டன.

## RC குண்டூர் விகாஸ் — RID 3150



குண்டூரில் உள்ள ஓர் அங்கன்வாடி பள்ளியில் பயிலும் குழந்தைகளுக்குக் கற்பலகைகள், புத்தகங்கள், இனிப்புகள் வழங்கப்பட்டன.

## RC மங்களூர் சென்ட்ரல் — RID 3181

மங்களூர் பாரத் சாரணர்களுடைய அலுவலகப் பயன்பாட்டுக்காக ரூ.43,000 மதிப்புள்ள கணினி ஒன்று கொடையளிக்கப்பட்டது.



## RC கூடூர் — RID 3160



ரோட்டரி நாள் கொண்டாட்டத்தின் போது பள்ளிகளுக்குக் கல்வி உதவித் தொகைகள், விளையாட்டுப் பொதிகள், ஆய்வகக் கருவிகள், நீர் குளிர்விப்பான்கள் கொடையளிக்கப்பட்டன.

## RC கோயம்பத்தூர் இன்டஸ்ட்ரியல் சிட்டி — RID 3201

மகளிர் நாளைக் கொண்டாடும் நிகழ்ச்சியில், பல்வேறு வாழ்க்கைச் சூழல்களில் இருந்து வருகிற 35 பெண்கள் பெருமைப் படுத்தப்பட்டார்கள்.



## RC சிந்து-துர்க் சென்ட்ரல் — RID 3170




ஒரு அரசு பள்ளியில் சங்கம் வகுப்பறைகள், இருக்கைகள், கணினி ஆய்வகம் மற்றும் புத்தக அடுக்குகள் அமைத்தது.

## RC உடுமலைப்பேட்டை — RID 3203

RCகள் கோயம்பத்தூர் மிட்-டவுன், மெலாவதி, RID 3300யுடன் இணைந்து 70 பேருக்கு ரூ.3 லட்சம் மதிப்புள்ள செயற்கைக் கை, கால்கள் பொருத்தும் முகாம் நடத்தியது.



# செய்திகள்

## RC காலிக்கட் சென்ட்ரல் — RID 3204



காலிக்கட் மருத்துவக் கல்லூரியின் Dr சந்தோஷிடம், நெஞ்சு நோய்கள் அரசுக் கல்விக் கழகத்துக்காக ரூ.3 லட்சம் மதிப்புள்ள ஒரு டிஃபிபிரில் லேட்டரை DG Dr ராஜேஷ் சுபாஷ் ஒப்படைத்தார்.

## RC மெட்ராஸ் சென்ன பட்னா — RID 3232

மெல்லினம் திட்டம் தொடங்கப்பட்டு நான்கு வாரங்களுக்குள் 1,000 பெண்களுக்கு மார்பகப் புற்று நோய்ப் பரிசோதனைகளை நடத்தியுள்ளது.



## RC ஸ்ரீவில்லிபுத்தூர் — RID 3212

திட்டம் 30ன் கீழ் இந்தச் சங்கத்தை சார்ந்த 30 உறுப்பினர்கள் நாள்தோறும் நலிந்த மாணவர்கள், குடும்பங்கள் அல்லது மாற்றுத் திறனாளிகளுக்கு ரூ.1,000 மதிப்புள்ள பணம் அல்லது பணியைக் கொடையளிக்கிறார்கள்.



## RC ராஞ்சி — RID 3250

கொடெர்மா புனித குடும்ப மருத்துவமனையில் நடைபெற்ற சிறப்பு முகாமில் மன நலப் பிரச்சனை கொண்ட சுமார் 30 மாணவர்கள் பல்வேறு நோய்களுக்காகப் பரிசோதிக்கப் பட்டார்கள்.



## RC வேலூர் நார்த் — RID 3231



காட்பாடி அருப்புமேடு அரசு நடுநிலைப் பள்ளியில் உள்ள ஒரு தங்குமிடத்தை இந்தச் சங்கம் புதுப்பித்தது.

## RC சம்பல்பூர் — RID 3261

சங்கத் தலைவர் ராஷ்மி ரஞ்சன் மஹாபாத்ரா, செயலாளர் அலேகிகா பானி முயற்சிகளால் ஓர் அரசுப் பள்ளியில் WinS திட்டம் செயல் படுத்தப்பட்டது.



ஒருங்கிணைப்பு: V முத்துகுமரன்

# திறமைகள் பளிச்சிடும் மகளிர் கிரிக்கெட் அணி!

TCA ஸ்ரீனிவாச ராகவன்

கடந்த மாதம் முழுவதும் நான், காலையில் சீக்கரம் எழுபவராக இருந்ததால், ICC மகளிர் உலகக் கோப்பை கிரிக்கெட் போட்டிகளை காண்பதில் பொழுதைக் கழித்தேன். மகளிர் அற்புதமாக தங்கள் திறமைகளை வெளிப்படுத்தி விளையாடினார்கள். அவர்கள் சிறந்த மதிநுட்பத்துடன் பேட்டிங் செய்தனர் மற்றும் பந்து வீசினர். அவர்களிடம் இருந்த குறை என்னவென்றால் பீல்டிங் எதிர்பார்த்த அளவு இல்லை. ஆனாலும் நிலைமையைப் புரிந்து கொண்டு அதற்குத் தகுந்தாற்போல் சில மாற்றங்களைச் செய்தனர். எதிர்பார்த்தது போலவே இறுதியாட்டத்தில் ஆஸ்திரேலிய அணி, இங்கிலாந்து அணியை வென்றது. தென்னாப்பிரிக்காவுக்கு எதிரான கடைசி ஆட்டத்தில் அந்த அணி கடைசி பந்தில் வெற்றிபெற்றது. ஒரு பந்து ஆடுகளத்துக்கு வெளியே (wide) சென்றதால் மேலும் ஒரு பந்துவீச வாய்ப்புத் தரப்பட்டது. அந்த கடைசி பந்து வெற்றிக்கு வழிவகுத்தது. உண்மையிலேயே அந்த போட்டி திரில்லிங்காக இருந்தது.

களத்துக்கு வெளியேயும் சில அருமையான தருணங்கள் இருந்தன. பாகிஸ்தான் கேப்டனின் இரண்டுமாத குழந்தையுடன் இந்தியர்கள் கொஞ்சி விளையாடியதை கேமராக்கள் படம்பிடித்தன. உலகக் கோப்பை போட்டியில் அடுத்த முறை இந்திய மகளிர் எப்படியும் கோப்பையை வென்றுவிடுவார்கள் என்று நம்புகிறேன். ஏனெனில் தற்போதுள்ள மகளிர் கிரிக்கெட் அணி, எந்த ஒரு எதிரணியையும் வீழ்த்தும் வகையில் வலுவாகவே உள்ளது.

கடந்த மார்ச் மாதம் BCCI பிரான்சைஸ் அடிப்படையில் 6 மகளிர் அணிகள் போட்டியிடும் T-20 போட்டியை வருடாந்திர அடிப்படையில் நடத்தப்போவதாக அறிவித்துள்ளது. அதுவரை என்னால் காத்திருக்க முடியாது. கிரிக்கெட்டில் அதிக கவனம் இருந்தால் வாழ்க்கை மந்தமாகிவிடும். இது இங்கிலாந்தில் துவங்கியிருக்கலாம். ஆனால், மந்தமான நிலையை உருவாக்குகிறது. ஆனால், கிரிக்கெட் விளையாட்டில் ஆர்வமுள்ள இதர நாடுகள் சர்வதேச கால்பந்துப் போட்டிக்கு இணையாக இதை கொண்டுவந்துவிட்டனர். லட்சக்கணக்கானவர்கள் அன்றாட வேலைகளை மறந்துவிட்டு கொஞ்சநேரமாவது கிரிக்கெட் விளாயாட்டை ஆர்வத்துடன் பார்க்கிறார்கள்.

இதற்கு காரணம் கிரிக்கெட் விளையாட்டு முற்றிலும் வாய்ப்புள்ள ஒரு விளையாட்டு. பந்து, வீசுபவரின் கையிலிருந்து வெளிவரும் தருணத்திலிருந்து அது செயலிழக்கும் வரை (Dead Ball) என்ன நடக்கும் என்பது ஒருவருக்கும் தெரியாது. உண்மையில் எண்ணற்ற சாத்தியக் கூறுகள் உள்ளன.

என்ன நடக்கும் என்று பார்க்க லாம். 6, 4, 3, 2, 1, 0 என்று ரன்கள் எடுக்கலாம். அவுட்டாகலாம் அல்லது அவுட்டாகாமல் இருக்கலாம். பேட்ஸ்மென் அடித்த பந்து பிடிக்கப்பட்டு அவுட்டாகலாம், ரன் அவுட் ஆகலாம், குறுகிய ஓட்டத்தில் ஸ்டம்ப் செய்யப்படலாம் அல்லது LBW அவுட்டாகலாம். காட்ச் பிடிப்பது கைவிடப்பட்டு அவுட்டாகாமல் இருக்கலாம். பவுண்டரியில் சிக்ஸர் ஆகாமல் தடுக்கலாம். இப்படி சொல்லிக் கொண்டே போகலாம். ஆனால், ஒன்று மட்டும் தெளிவாகிறது. வேறு எந்த விளையாட்டிலும் இத்தனை வாய்ப்புகள் இல்லை என்பது மட்டும் நிச்சயம். மேலும் அது ஒரு டெஸ்ட் போட்டியாக இருந்தால், அதற்குள் போட்டி முடியாமல் இருந்தால் அதிகபட்சம் 2,700 பந்துகள் வீசப்படும். இதுவே 50 ஓவர் போட்டியாக இருந்தால் குறைந்தது 600 பந்துகள், 20 ஓவர் போட்டியாக இருந்தால் 240 பந்துகள் வீசப்பட வேண்டும். ஒவ்வொரு பந்துவீச்சிலும் ஒரு டஜனுக்கும் மேலான வாய்ப்புகள் உள்ளன. இதிலிருந்தே கிரிக்கெட் அதிக வாய்ப்புள்ள விளையாட்டு என்பதைத் தெரிந்து கொள்ளலாம். ஒரு பேட்ஸ்மென் மிக மோசமான முறையில் அவுட்டாவது முதல் எது வேண்டுமானாலும் நடக்கலாம். இத்தனை வாய்ப்புகள் வேறு எந்த விளையாட்டுக்காவது இருக்கிறதா?

இதில் எனக்கு புரியாத புதிர் என்னவெனில் ஏன் 15 நாடுகள் மட்டும் இதை விளையாடுகின்றன என்பதுதான். சில அணிகள் தெற்கு ஆசிய வீரர்களைக் கொண்டதாக இருக்கிறது. ஒரு சில இந்தியர்களுக்கு மட்டுமே ஐரோப்பிய ஒன்றியம் பற்றித் தெரிகிறது. குறிப்பிட்ட சில நாடுகளை மட்டுமே தெரிகிறது. இது ஏன் என்று கண்டுபிடிக்க 1995 இல் ஐரோப்பிய கமிஷன் ஒரு குழுவை இந்தியாவுக்கு அனுப்பியது என் நினைவுக்கு வருகிறது. அவர்கள் சில பத்திரிகையாளர் களையும் மதிய விருந்துக்கு அழைத்து கேள்விகளும் கேட்டனர். எனது பதில் மிகவும் எளிமையானது: கிரிக்கெட் விளையாடத் தொடங்குங்கள் என்பதுதான். ஆனால், முட்டாள் தனமாக எனது ஆலோசனையை அவர்கள் ஏற்கவில்லை. என்ன நடந்தது? ஐரோப்பிய ஒன்றியத்தில் கிரிக்கெட் விளையாடி வந்த ஒரே நாடும் வெளியேறியது.■

# செய்தித் துளிகள்

### சமையல் எண்ணெயில் பறந்த மிகப் பெரிய ஏர்பஸ் ஜெட் விமானம்



பொதுவாகச் சமையல் எண்ணெய் அல்லது பிற வீணாகும் கொழுப்புகளால் பெறப்படுகிற நீடித்த விமான எரிபொருளைப் (SAF) பயன்படுத்தி உலகின் மிகப் பெரிய பயணியர் ஜெட் விமானமாகிய ஏர்பஸ் A380 பரிசோதனை அடிப்படையில் மூன்று மணி நேரம் பறந்தது. இதற்குமுன், 2021ல் ஏர்பஸ் A319 புதிய ஒற்றை நடைபாதை விமானம் SAF பயன்படுத்திப் பறந்திருந்தது.

### HIV பாசிட்டிவ் ஊழியர்களால் மட்டும் இயக்கப்படும் உணவகம்




கொல்கத்தாவில் “கஃபே பாசிட்டிவ்” என்ற உணவகத்தை HIV பாசிட்டிவ் ஊழியர்கள் மட்டும் இணைந்து நடத்துகிறார்கள், இதில் 7 பேர் பதின் பருவத்தினர். HIV பற்றிய விழிப்புணர்வை உண்டாக்குதல், HIV பாசிட்டிவ் மக்களுக்கு வேலை வாய்ப்புகளை உருவாக்குதல் ஆகிய நோக்கங்களுடன் இயங்கும் இந்த உணவகத்தின் உரிமையாளர், ஆனந்தகர் (AIDS ஆல் பாதிக்கப்பட்ட குழந்தைகளுடன் பணியாற்றும் NGO) நிறுவனர் கல்லொல் கோஷ் ஃபிராங்க்ஃபர்ட்டில் இயங்கும் இதேபோன்ற ஓர் உணவகத்தால் ஊக்கம் பெற்று இதை உருவாக்கியுள்ளார்.

### வயதைப் பின்னோக்கிச் செலுத்துதல்



பாப்ரஹாம் கல்விக் கழக அறிவிய லாளர்கள் செல் மறு நிரலாக்கத்தைப் புரிந்து கொள்கிற பெரிய முன்னேற்றமாக, மனிதச் செல்லுலார் வயதுக் கடிகாரத்தை அதன் சிறப்புச் செல்லுலார் செயல்பாட்டை இழக்காமல் 30 ஆண்டுகள் பின்னோக்கித் திருப்புகிற முறையை உருவாக்கி யுள்ளார்கள். தோலை மறு உருவாக்கம் செய்கிற இந்த முறை, குழந்தைகளின் DNA குறைபாடுகள் எப்படிப் புற்று நோயை உருவாக்குகின்றன என்பதைக் காண்பதற்காகக் குருத் தணுக்களை உருவாக்க அறிவியலாளர்கள் பயன்படுத்திய நோபல் பரிசு வென்ற உத்தியின் அடிப்படையில் அமைந்துள்ளது.



### வானவில் நிற மீன்

மாலத்தீவு அறிவியலாளர் ஒருவர் மாலத்தீவு அருகில் இந்தியப் பெருங்கடலில் 131 முதல் 229 அடி ஆழத்தில் வானவில் நிற மீன் இனம் ஒன்றைக் கண்டறிந்துள்ளார். மாலத்தீவின் தேசிய மலராகிய இளஞ்சிவப்பு ரோஜாவால் ஊக்கம் பெற்று இதற்குச் சிர்ர்ஹிலாப்ரஸ் ஃபினிஃபென்மா என்று பெயர் சூட்டப்பட்டுள்ளது.




### கிரிப்டோ ராபின் ஹூட்

30 வயதான கிரிப்டோகரன்சி பில்லியனர் சாம் பேங்க்மேன்-ஃப்ரைட் அவருடைய 20 பில்லியன் டாலருக்கும் அதிகமான சொத்துக்களை (ஒவ்வொரு டாலரும் அல்லது பிட்காயின் என அனைத்தையும்) நல்ல காரியங்களுக்கு நன்கொடையாக வழங்க திட்டமிட்டுள்ளார். பேங்க்மேன், தனது வாழ்க்கை முறையை பராமரிக்க தேவையான பணத்திற்கு பிறகு(குறைந்தபட்சம், ஆண்டுக்கு 100,000 டாலர்), மற்றவை அனைத்தையும் தொற்றுநோய்க்கான தயார்நிலையில் தொடங்கி அவரது மனதிற்கு நெருக்கமான காரணங்களுக்கு நன்கொடையளிக்க உள்ளார். தொற்றுநோய் தயார் நிலை அராய்ச்சிக்காக அவர் ஏற்கனவே 5 மில்லியன் டாலரை ஒரு இலாபநோக்கற்ற புலனாய்வு இதழியல் குழுவிற்கு வழங்கியுள்ளார்.

ஒருங்கிணைப்பு: கிரண் ஜெஹரா; வடிவமைப்பு: S. கிருஷ்ணப்ரதீஷ்.

Registered No. TN/CCN/677/2022-2024 | Total number of pages in this monthly
Licensed to post WPP No.TN/PMG(CCR)/WPP-611/2022-2024 | issue, including cover, 84. Price: ₹35
Registered with Registrar of News Papers for India TNTAM/2018/76372 Rotary News Tamil Published on the first week of every month

# ரோட்டரி இதழுக்கு சந்தா செலுத்தாத சங்கங்கள் நீக்கப்படும்




*பல ஆண்டுகளாக ரோட்டரி சங்கங்கள் ரோட்டரி நியூஸ் இதழுக்கு சந்தா செலுத்தாமல் அல்லது நிலுவை கட்டணங்களை செலுத்தாமல் இருப்பது பிராந்திய இதழின் மேலாளர்களுக்கு விரக்தியை ஏற்படுத்தியுள்ளது. சந்தா செலுத்தாமல் இருப்பது, ரோட்டரியின் முக்கியமானச் செய்திகளைப் பகிர்ந்து கொள்வதில் நேரடியான தாக்கத்தை ஏற்படுத்துகிறது.*

*இணக்கமாக இல்லாத சங்கங்கள் பற்றி கடந்த நவம்பர் மாதம் நடந்த வாரியக் கூட்டத்தில் RI தொடர்புக் குழு விவாதித்தது. இதையடுத்து அவற்றுக்கான விதிமுறைகள் திருத்தியமைக்கப் பட்டுள்ளன. புதிய விதிகள்படி அத்தகைய சங்கங்கள் நீக்கப்படலாம் என்பதுதான்.*

| முந்தைய செயல்முறைகள் | புதிய செயல்முறை 2022 ஜுலை 1ல் தொடங்குகிறது |
|---|---|
| ரோட்டரி இதழ் அலுவலகம் இணக்கமாக இல்லாத சங்கங்கள் பற்றிய அறிக்கையை ரோட்டரி இன்டர்நேஷனல் அலுவலகத்துக்கு அனுப்பிவைக்கிறது. | **இணக்கமாக இல்லாத சங்கங்கள், பணம் நிலுவை வைத்துள்ளவா அல்லது சந்தா செலுத்தவில்லையா** என்று ரோட்டரி இதழ் அலுவலகம் ரோட்டரி தலைமைக்கு விளக்கம் அளிக்க வேண்டும். காலாண்டுக்கு ஒரு முறை அறிக்கை தர வேண்டும். |
| மாவட்ட செயலகத்திலிருந்து பெறப்படும் கடிதங்கள் ரோட்டரி இதழ் அலுவலகத்துடன் பகிர்ந்து கொள்ளப் படும். பின்னர் அவை சம்பந்தப்பட்ட சங்கங்களுக்கு அனுப்பிவைக்கப்படும். | இதழ் அலுவலகம் கடிதத்தை சங்கங்களுக்கு அனுப்பிவைக்கும். ரோட்டரி தனி கடிதம் மூலம் மாவட்ட ஆளுநருக்கு அறிவிக்கும். |
| சங்கத்தை இணங்கவைக்க அல்லது முடியாத பட்சத்தில் இடைநீக்கம் செய்ய 120 நாள் கால அவகாசம் உள்ளது. | சங்கத்தை இணங்க வைக்க அல்லது முடியாதபட்சத்தில் இடைநீக்கம் செய்ய **90 நாள்** கால அவகாசம் மட்டுமே உள்ளது. |
| சங்கம் இணக்கமாக இல்லை என்றால் ரோட்டரி இதழ் அலுவலகம் RIக்கு அறிக்கை அளிக்கும். அதன் பின் அந்த சங்கம் இடைநீக்கம் செய்யப்படும். | **90 நாள் சலுகை காலம் முடிவதற்கு இரண்டு வாரங்களுக்கு முன்னதாக** ஒத்துழைக்காத சங்கங்களுக்கு நினைவூட்டல் கடிதம் அனுப்பப்படும். அப்போதும் அவை ஒத்துழைக்காவிட்டால் RIக்கு அறிக்கை அனுப்பப்படும். சங்கங்கள் இடைநீக்கம் செய்யப்படும். |
| செயல்முறைகள் இத்தோடு முடிகின்றன | இணக்கமாக இல்லாத **சங்கங்களின் இடைநீக்கம்** 180 **நாட்களுக்குப் பிறகும் தொடர்ந்தால், "அவற்றின் செயல்பாடுகளை நிறுத்துவது பற்றி வாரியமே முடிவு செய்யும்"** என்று மற்றொரு கடிதம் அனுப்பி வைக்கப்படும். சங்கம் கண்காணிக்கப்படும். |
| | **PETS & GETS** நிகழ்ச்சிகளில் கட்டாய சந்தாக்கள் பற்றிய தகவல்கள் இருக்கும். |
| | இணக்கமின்மையை வரையறுக்கும் வரம்பு சங்க உறுப்பினர்களில் 20 அல்லது 50 சதவீதமா என்பது தீர்மானிக்கப்படும். |

இந்த நடைமுறை இப்போது **ரோட்டரியின் நடத்தை விதிமுறைகளில்** சேர்க்கப்படும் என்பதால் அதிக இணக்கத்தை காண்போம் என்று எதிர்பார்க்கிறோம். வாரிய இயக்குநர்கள் தங்கள் பிராந்தியத்தில் ரோட்டரி இதழுக்கு ஆதரவு திரட்ட வேண்டும். **சங்கங்கள் இணக்கமாக இல்லாதது மற்றும் கட்டாய சந்தா நடைமுறை குறித்து மாவட்ட ஆளுநர்களும், சங்கத் தலைவர்களும் அறிந்திராதது குறித்து RI இயக்குநர்கள் ஆச்சர்யம் தெரிவித்தனர்.** அதாவது PETS மற்றும் GETS நிகழ்வுகளில் கட்டாய சந்தா நடைமுறைக்கு அதிக அளவில் எடுத்துரைக்க வேண்டும்.

**நமது மண்டலங்களில் உள்ள ரோட்டரி சங்கங்கள், தங்கள் சந்தா கட்டண நிலுவைகளை வைராக்கியத்துடன் செலுத்த முன்வர வேண்டும் என்று ரோட்டரி நியூஸ் (Rotary News) கேட்டுக்கொள்கிறது.**

ரோட்டரி இன்டர்நேஷனல்